தர்மசக்கரம்



துந்துபி ஷு புரட்டாசி மீ சக்கரம் 31 ஆரம் 9

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

திருப்பராய்த்துறை, எலமனூர் ஸ்டேஷன், திருச்சி ஜில்லா.

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

அந்தர்யோகம்

1982 ஆம் ஆு நவராத்திரி பூஜையின் கடைசி மூன்று தினங்களாகிய அக்டோபர் மாதம் 24, 25, 26 தேதிகளில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் அக்டோபர் மாதம் 23 ஆம் தேதி சனிக்கிழமை இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 6-00 விதம் ரூ. 18-00 உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். தாய்மார்களுக்கும் இதில் இடமுண்டு. பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	6	மணிமுதல்	7	மணிவரை	தியானம்
,,	8	,,	9	,,	பஜனை
,,	9	,,	10	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	11	,,	12	,,	அர்ச்சனை
மாலை	2	,,	3	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	5	,,	6	,,	அர்ச்சனை
,,	6	,,	7	,,	தியானம்
இரவு	8	,,	9	,,	பஜனை

தியானம், லலிதாநாம விளக்க உபந்யாசம், அர்ச்சனை, பஜனை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரங்கள் போக பாக்கியிருக்கும் 16 மணி நேரத்தில் இடைவிடாது நாமஜபம் நடந்துகொண்டிருக்கும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஒவ்வொருவரும் காலையில் ஒருமணி நேரமும் மாலையில் ஒரு மணி நேரமும் அகண்டநாம பஜனையில் கலந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரையில் மாணவர்கள் செய்யும் நாம பஜனையில் அன்பர்கள் தங்களுக்கு வசதிப்பட்டால் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை நடைபெறும் நாம ஜபத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

17.9

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 31	துந்துபி ஹூ புரட்டாசி மீ	ஆரம் 9

பொருளடக்கம்

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No.: 38680

சந்தா விவரம்

டிபாஸிட் சந்தா: ரூ. 150 அனுப்பி இங்கு டிபாஸிட் செய்துவிட்டால் டிபாஸிட் இங்கு இருக்கும்வரையில் மாதந்தோறும் தர்ம சக்கரம் பத்திரிகை தங்களுக்குவந்து கொண்டிருக்கும். ஆண்டுதோறும் சந்தா செலுத்திப் புதுப்பிக்கவேண்டியதில்லை. பத்திரிகை வேண்டாம் என்று கருதும்பொழுது டிபாஸிட்செய்த ரூபாய் நூற்றைம் பதையும் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். இந்தத் திட்டம் உள்நாட்டுக்கு மட்டும் உரியது.

ஆண்டு சந்தா: ரூ. 15 செலுத்தியதுமுதல் அல்லது அடுத்த மாதம்முதல் பன்னிரண்டு மாதங்களுக்கு ஒவ்வொரு தமிழ் மாதமும் முதல் தேதியில் கிடைக்கும் படி பத்திரிகை அனுப்பப்படுகிறது.

சகாய சந்தா: மாத வருவாய் ரூ. 200 அல்லது ஆண்டு வருவாய் ரூ. 2400க்கும் குறைவாக உள்ளவர்கள் ஆண்டு சந்தா பதினைந்து செலுத்த இயலாது இருந்தால் ரூபாய் பத்து அனுப்பலாம். பாக்கி ரூபாய் ஐந்தைப் பாண்டிச்சேரி S. விஸ்வநாதன் 'தர்ம சக்கர உதவிநிதி' யினின்று ஈடுசெய்து கொள்கிறோம். தெய்விக விஷயமாத லால் ரூ. 15 செலுத்த இயலுகிறவர்கள் இந்தச் சலுகையைப் பயன்படுத்த வேண்டாம்.

தமிழ் நாட்டிலும் பாண்டிச்சேரியிலும் உள்ள அரசாங்கப் பொது நூலகங்கள் அனைத்துக்கும் தர்ம சக்கரம் அன்பர்களின் உதவியால் தொடர்ந்து அனுப்பப்பெறு கிறது. நூலக நிர்வாகியிடம் கேட்டுப்பெற்றுப் படித்துப்பயனடையக்கோருகிறோம்.

உள்நாடு வருட சந்தா ரூ. 15-00 வெளிநாடு வருட சந்தா ரூ. 35-00

அந்தர்யோக விவரங்கள்

ஈரோடு மாவட்டம்—தாராபுரத்தில் 19—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்ஜோதி ஆச்ரமம், அமராவதி நதிக்கரை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

மதுரை ஜில்லா—சுருளிமலையில் 26—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சுருளி தீர்த்தத்துக்கு அருகில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

இராமநாதபுரம் ஜில்லா—பள்ளத்தூரில் 26—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா சேவாஸ்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

மதுரையில்—26—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: வி. அ. பா. நாடார் உறவின் முறை மீட்டிங் ஹால்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்

திருநெல்வேலி ஜில்லா—ஆத்தூரில் 26—9—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அருள்மிகு சோமசுந்தரி அம்மன் திருக்கோவில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 3—10—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-50ம், மாலை சிற்றுண்டிக்கு ரூ. 1-00ம்செலுத்திச் சீட்டுப் பெற்றுக்கொள்ளலாம்.

பெங்களூர் கண்டோன்மென்டில் 10—10—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

பெரியார் மாவட்டம்—சிவன் மலையில் 10—10—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சஷ்டி சங்க அன்னதான மண்டபம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி அசலானந்தர்

சேலத்தில் 17—10—82 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ சாரதா கல்லூரியின் பிரார்த்தனைக் கொட்டகை
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 31	துந்துபி ௵ புரட்டாசி ௴	ஆரம் 9

பிரார்த்தனை

ओं नमो वासुदेवाय तस्मै भगवते सदा ।
व्यतिरिक्तं न यस्यास्ति व्यतिरिक्तोऽखिलस्य यः ॥

— विष्णु पुराणम्

ஓம் நமோ வாஸுதேவாய தஸ்மை பகவதே ஸதா ।
வ்யதிரிக்தம் ந யஸ்யாஸ்தி வ்யதிரிக்தோऽகிலஸ்ய ய: ॥

— *விஷ்ணுபுராணம்*

யாராலும் கட்க்க இயலாதவரும் தாமே உலகனைத்தும் கடந்திருப்பவருமாகிய ஓம்கார வடிவினனாகிய வாசுதேவனை ஓயாது வணங்குகிறேன்.

மாறா அநுபூதி வாய்க்கின் அல்லால் என்மயக்கம்
தேறாதுஎன் செய்வேன் சிவமே பராபரமே.

— *தாயுமானவர்*

அருள் விருந்து

விநயம் வீரனையும் வெல்ல வல்லது.

விபரீதமான சூழ்நிலையிலும் பண்பினின்று பிசகாதே.

திதிக்ஷை அல்லது பொறை மனதை உறுதிப்படுத்துகிறது.

உண்மைக்கு நிகரான ஆதரவு மனிதனுக்கு வேறு ஏதுமில்லை.

துன்புறுதிருத்தலே துன்பத்தை வெல்லுதற்கு ஊற்ற உபாயமாம்.

நடுநிலை இழக்கும் சமுதாயசீர்திருத்தக்காரன் எதையும் சாதிக்கமாட்டான்.

மாசு நீங்கப்பெற்ற மனது ஆயுள்கால முழுதும் மனிதனுக்கு உதவுகிறது.

பரத்தை அடையப்பெற்றவர் பிரபஞ்ச சம்பந்தமான எதிலும் தோய்வுறுவதில்லை.

பயனற்ற புன்மொழிகளைப் பேசி வீண்பொழுது போக்காதே. பேரியல்பில் நிலைத்திரு.

சமயக் கோட்பாட்டை இவ்வுலக சம்பந்தமான ஊதியம் எதற்கும் பயன்படுத்தலாகாது.

உள்ளொளி படைத்திருப்பவர்களை உடைமையும் வறுமையும் அல்லல்படுத்தமாட்டா.

பேராற்றல் நம் உள்ளத்தில் இருக்கிறது. ஆனால் அதைப் பயன்படுத்தும் நம்பிக்கை நம்மிடத்தில் இல்லை.

மனிதன் தன்னைத்தானே மேல் நிலைக்குத் திருத்தியமைப்பதற்கு நிகரான செயல் உலகில் வேறு ஏதுமில்லை.

உலகத் துன்பங்களைத் துடைப்பதற்கு உறக்கம் தாற்காலிகமாக உதவுகிறது; மெய்ஞ்ஞானமோ நிரந்தரமாக உதவுகிறது.

மக்கள் புகட்டும் மாறுபாடான கொள்கைகளுக்கிடையிலே நல்வழி பிசகாதவன் தன் மனச்சாட்சியைச் சார்ந்திருத்தல் வேண்டும்.

உலகத்தவர் தாம் பறிகொடுத்துள்ள பொருளைப் பெறுதற்குப் போராடுவதுபோன்று மெய்ஞ்ஞானமாகிய செல்வத்தைப் பெறுதற்கு இந்திரியங்களோடு போராடு.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

பரமஹம்சதேவர்: ''பிரபஞ்சமாக இலங்கிக்கொண்டிருக்கின்ற அனைத்துமாய் ஈசனே ஆகியிருக்கிறார். அவருக்குப் புறம்பாக ஏதுமில்லை. தோன்றியுள்ள இவையாவையும் கடந்தவராகவும் அவரே இருக்கிறார். ''துண்டிக்க முடியாத பரவஸ்துவினுள் என்னுடைய மனதும் புத்தியும் கரைந்து போகும் நிலையை நான் அடைந்திருக்கிறேன். நரேந்திரனைப் பார்க்கும்பொழுதே அகண்டாகார விருத்தியில் என் உள்ளம் வியாபகமாகிறது. *(கிரீஷரைப் பார்த்து)* 'இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?'

கிரீஷ் *(புன்னகை பூத்தவராகப் பகர்ந்தார்)*: ''தேவரீர் இதைக்குறித்து என்னிடம் கேட்பதற்கு யாது உளது? எனக்கு ஒரே விஷயம்தான் தெரியும். இவையாவும் தங்களுடைய லீலை என்பதுதான் அந்த ஒரு விஷயம். நான் நடாத்திவரும் நாடகக் கொட்டகையின் நிர்வாகத்தை இளைஞர்கள்கையில் ஒப்படைக்கலாம் என நான் எண்ணுகிறேன்.''

பரமஹம்சதேவர் : ''வேண்டாம், வேண்டாம். அப்படிச் செய்யவேண்டாம். அக்கொட்டகையை நீயே நிர்வகித்து வருவதுதான் பொருந்தும். அதன் வாயிலாக மக்கள் பலருக்கு நீ நலன் புரிந்து வருகின்றாய்.''

நரேந்திரன் அடங்கிய குரலில் இயம்பியதாவது: ''சிறிது நேரத்துக்கு முன்புதான் இம்மனிதர் பரமஹம்சதேவரை ஓர் அவதார மூர்த்தி எனப் போற்றினார். இப்பொழுதோ இவருடைய மனது நாடகக் கொட்டகையை நாடி ஓடுகிறது.''

நரேந்திரன் பரமஹம்சதேவருக்கருகில் அமர்ந்திருந்தான். பரமஹம்சதேவர் அந்த இளைஞனைச் சிறிதுநேரம் கூர்ந்துபார்த்தார். பிறகு அவர் தாமே அந்த இளைஞனுக்கு அருகில் நகர்ந்துபோனார். கடவுள் மானுட வடிவெடுத்து அவதரித்து வருகிறார் என்னும் கொள்கையை நரேந்திரன் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் என்ன? தம் இளம் சிஷ்யன் பால் அவருடைய பேரன்பு ஊற்றெடுத்துப் பாய்ந்து கொண்டிருந்தது. நரேந்திரனுடைய மேனியைத் தொட்டுப் பாடல் ஒன்றன் உட்கருத்தை அவர் எடுத்து இயம்பினார்:

''ராதையே, நாங்கள் உன்னுடைய கௌரவத்துக்குப் பங்கம் செய்து விட்டோமென்று கருதுகின்றாயா? நீ அப்படிக் கருதுவாயாகில் அதில் தோஷம் ஏதுமில்லை. உன்னைப் பகடி பண்ணுகின்ற நாங்களும் ஓரளவு கௌரவம் படைத்தவர்களாகவே இருக்கின்றோம்.''

மேலும் பரமஹம்சதேவர் நரேந்திரனிடத்து வேண்டியதாவது: ''கண்டவர்கள் விண்டதில்லை; விண்டவர்கள் கண்டதில்லை'' என்பது கொள்கை. அதாவது கடவுளைப் பற்றி விவாதம் பண்ணுகிறவர்கள் கடவுளைக் கண்டவர்கள் அல்லர். மற்று, கடவுளை அனுபூதியில் கண்டறிந்தவர்களோ மௌனமுற்று இருக்கின்றனர். நீங்களிருவரும் கடவுளைக் குறித்து விவாதம் செய்தீர்கள். நீங்கள் அப்படிச் செய்தது எனக்குப் பிடிக்கவில்லை.

''இல்லம் ஒன்றிற்கு வந்துள்ள அன்பர்கள் ஏதேதோ விஷயங்களைப்பற்றி ஏராளமாகக் கூச்சலிட்டுப் பேசுகின்றனர். ஆனால் அக்கூச்சல் எவ்வளவு நேரம் நிகழ்கிறது? வந்திருக்கிறவர்களுக்கு உணவு படைக்க ஆரம்பிக்கிறபொழுது கூச்சலில் பெரும்பகுதி தானாகவே அடங்குகிறது. அமர்ந்திருப்பவர்கள் உண்டியை ஏற்க ஆரம்பித்தபின் கூச்சல் ஏதுமில்லை. இடையிடையே இன்றியமையாத பேச்சு மட்டும் அடங்கிய குரலில் நிகழ்கிறது. உண்டியின் கடைசிப் பகுதியாகிய தயிர் வழங்குகின்றபொழுது 'சூப், சூப்' என்கின்ற மெல்லிய ஓசை மட்டும் கேட்கிறது. உணவு அருந்தியான பிறகு கூச்சலுமில்லை, ஓசையுமில்லை. எல்லாம் ஒரே அமைதி. படுத்துறங்கும் பொழுது உலக ஞாபகமும் இல்லை. ஒரே

அமைதி. நான் சமாதி நிலையிலிருக்கிற பொழுது எதையும் பகர எனக்கு இயலுவதில்லை. மக்களுக்கு ஏதேனும் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அந்தச் சமாதி நிலையினின்று இரண்டு, மூன்று படிகள் கீழே இறங்கிவரவேண்டியது அவசியமாகிறது. அத்வைதம்-இரண்டு அல்ல என்னும் சங்கராச்சாரியருடைய சித்தாந்தம் முற்றிலும் மெய். பின்பு விசிஷ்டாத்வைதத்தைப் பற்றி ராமானுஜாச்சாரியர் பகர்ந்துள்ளார். ஒரு விசேஷத்தோடு கூடிய அத்வைத நிலை என்பது இதன்பொருள். இப்படி அவர் பகர்வதிலும் விஷயம் உள்ளது. இக்கோட்பாடும் தத்துவத்துக்கு ஒத்ததே.''

நரேந்திரர்: ''ஐயனே, விசிஷ்டாத்வைதம் என்பது யாது?''

பரமஹம்சதேவர்: ''விசிஷ்டாத்வைதம் என்பது ராமானுஜாச்சாரியருடைய சித்தாந்தம் ஆகும். இக்கோட்பாட்டின்படி பரப்பிரம்மத்தை ஜகத்தும் ஜீவனும் சார்ந்திருக்கின்றன. ஆக, ஜகத், ஜீவன், பரம் ஆகிய மூன்றும் ஒன்று கூடிப் பிரம்மம் அல்லது மெய்ப்பொருள் ஆகின்றன. வில்வப் பழம் ஒன்றை இதற்குச் சான்றாக எடுத்துக் கொள்வோம். வில்வப்பழத்தின் எடையை அறிந்துகொள்ள மானுடன் ஒருவன் விரும்பினான். எனவே அப்பழத்தை அவன் எடை போட்டுப் பார்த்தான். பிறகு பழம், விதை, மேல் ஓடு ஆகியவைகளைப் பிரித்தெடுத்தான். அனைத்தையும் எடைப்போடாது வெறும் சதைப்பற்றை மட்டும்எடைபோட்டுப் பார்த்தால் அது அப்பழத்தின் உண்மையான எடை ஆகாது. பிரித்தெடுக்காது பழம் முழுதையும் இருக்கிறபடியே எடைபோட்டுப் பார்த்தால் தான் அதன் உண்மையான எடையை மனிதன் தெரியவருகிறான். மேலோடும் விதையும் அப்பழத்துக்கு உரியவைகள். பழத்தைப் பழமாக எடுத்துக்கொள்ளுகின்ற பொழுது அவைகளும் அதில் இன்றியமையாத இடம் பெறுகின்றன. அதே பாங்கில் ஜகத்தும் ஜீவனும் பரம்பொருளில் யாண்டும் இடம் பெற்றிருக்கின்றன. ஆத்ம சாதகன் ஒருவன் பரம்பொருள் ஆராய்ச்சியில் யுக்தியைக் கையாளவேண்டும். நிலையுற்றுள்ள பரவஸ்து யாது? நிலையற்றவைகள் எவை என்பதை அவன் தூய அறிவைக் கொண்டு தனக்குத்தானே தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டும். நிலையான பரம்பொருள் வேறு, நிலையற்ற ஜகத், ஜீவன் வேறு என்பதை ஆத்மசாதகன் உணரக் கடமைப்பட்டிருக்கிறான். ஜகத்தும் ஜீவனும் காலதேச நிமித்தத்துக்கு உட்பட்டவைகள். ஆகையால் அவைகள் மெய்ப்பொருள் ஆகமாட்டா. பரவஸ்துவோ காலத்தில் கட்டுப்பட்டதன்று. தேசம் அல்லது இடம் அதனுள்ஒடுங்குகிறது. பரவஸ்துவோ யாண்டும் அகண்டமானது. நிமித்தம் என்னும் பிரபஞ்சகாரியம் பரவஸ்துவை வந்து தொடமாட்டாது. வில்வப்பழத்தை உண்ண விரும்புகிறவன் அதன் மேல் ஓட்டையும் விதையையும் ஒதுக்கித் தள்ளுகிறான். அதே பாங்கில் பரம்பொருளை அடைய விரும்புகிற ஆத்ம சாதகன் பிரபஞ்சத்துக்கும் ஜீவவியக்திக்கும் அப்பாற்பட்டுள்ள பரவஸ்துவின்கண் தன்னை லயப்படுத்தவேண்டும். பரவஸ்து ஒன்றே யாண்டும் இருப்பது. ஜகத்தும் ஜீவனும் அப்பரவஸ்துவின்கண் உள்ள லீலை அல்லது விளையாட்டாம். விளையாடுகின்றபொழுதும் விளையாட்டை நிறுத்திவிட்டுத் தன்மயமாய் இருக்கிறபொழுதும் பரவஸ்து யாண்டும் தன்மயமாம். விளையாட்டுக்குத் தொடக்கம் உண்டு; முடிவும் உண்டு. அதை நடாத்தும் பொருள் செயலற்றதாயும் செயல் உற்றதாயும் தென்படுகிறது. செயல் உற்றதாயிருக்கிறபொழுது அது ஈசன்; அல்லது பஞ்ச கிருத்தியங்களில் ஈடுபட்ட சகுணப் பிரம்மம். விளையாடாது தன்மயமாயிருக்கிறபொழுது அது நிர்க்குண பிரம்மம். ஒரேகடலில் மேற்பகுதி அலை வீசி உருண்டோடும் பாங்குடையதாகவும், அதன் அடிப்பகுதி அலையற்றதாகவும் இருந்து வருகிறது. ஆயினும் கடல் ஒன்றே. அதே விதத்தில் பிரம்மம் ஏககாலத்தில் சகுணமாகவும், நிர்க்குணமாகவும் இருக்க வல்லதாம். ராமானுஜருடைய சித்தாந்தம் சகுணப் பிரம்மத்தைப் பற்றியதாம். ஆகவே, அவருடைய கோட்பாடாகிய விசிஷ்டாத்வைதம் சகுணப் பிரம்மத்துக்குரியதாம்.

மகேந்திரரிடம் பரமஹம்சதேவர் மேலும் மொழிந்ததாவது : ''ஈசனை ஞானக்கண் கொண்டு நான் தரிசிக்கிறேன். இனி வாதாடுவதற்கு யாது உளது? பிரபஞ்சத்திலுள்ள அனைத்துமாய் அந்த சகுணப் பிரம்மமே இலங்குகின்றார் என்பதைப் பிரத்யட்சமாக நான் பார்க்கிறேன்.

''பின்பு இந்த அனுபவத்தைப் பெறுதல் பொருட்டு ஆத்ம சாதகன் ஒருவன் ஆத்ம போதம் அடையப் பெற்றவனாக வேண்டும். ஞான விசாரத்துக்கு எல்லையுண்டு. ஈசுவரானுபூதி அடையப்பெறுதற்கு முன்பு ஞான விசாரத்துக்கு இடம் உண்டு. அதை அடையப்பெற்றான பிறகு விசாரத்துக்கு அவசியமில்லை. வெறும் வாய்ப்பேச்சு உதவாது. பரம்பொருளே அனைத்துமாய் இலங்குகிறார் என்பதைக் கண்கூடாக நான் காண்கிறேன். ஈசனுடைய கிருபையால் ஆத்ம சாதகன் அந்தரங்கத்தில் விழித்து எழுந்திருத்தல் வேண்டும். அத்தகைய ஆத்ம போதம் வடிவெடுத்திருப்பதே சமாதி நிலை எனச் சொல்லப்படுகிறது. அதன் விளைவாக அன்னவன் உடல் உணர்வைத் தாண்டியவன் ஆகிறான். உலகப்பற்றுக்கள் யாவும் அவன் உள்ளத்தினின்று நழுவிப் போகின்றன. அத்தகையவனுக்குப் பேச்சில் நாட்டம் ஏதுமில்லை. பேசவேண்டிய நிர்ப்பந்தம் வந்தால் அன்னவன் கடவுளைப் பற்றித்தான் பேசுகிறான். வேறு எந்த விதமான வியவஹாரத்திலும் அவன் கருத்தைச் செலுத்துவதில்லை. உலக வியவஹாரப் பேச்சு அவனுக்கு ஒரு பொழுதும் ஒத்துக்கொள்ள மாட்டாது. ஆத்மபோதம் உருவெடுக்கிற பொழுதே பிரபஞ்சமாகத் தென்படும் அனைத்தும் சின்மயம் என்னும் கோட்பாடு தெளிவடைகிறது.''

சம்பாஷணை முடிவுற்றது. பரமஹம்சதேவர் மகேந்திரரிடம் தெரிவித்ததாவது : ''சாதகன் ஒருவன் ஞான விசாரத்தின் வாயிலாகக் கடவுளைப் பற்றிய ஒருவித முடிவுக்கு வருகிறான்; தியானத்தின் வாயிலாக மற்றொரு விதமான முடிவுக்கு வருகிறான். இனி மூன்றாவதாக அனுபவம் ஒன்று உளது. கிருபை கூர்ந்து கடவுள் தாமே தம் பக்தனுக்குத் தமது சொரூபத்தைக் காட்டியருள்கின்றார். இவையாவுக்கும் மேலாகப் பரம்பொருள் தாமே எங்ஙனம் மானுட வடிவெடுத்து உலகில் அவதரிக்கிறார் என்னும் கோட்பாட்டைப் பக்தன் ஒருவனுக்கு அனுபூதியின் வாயிலாக விளக்கியருள்வாராகில் பிறகு அப்பரமனைப் பற்றிய மஹிமைகளை விசாரித்துப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அப்படி இறைவன் தம்மைத் தாமே விளக்கியருள்வது எத்தகையது என்பது உனக்கு விளங்குகிறதா? மானுடன் ஒருவன் இருட்டறையிலே இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அத்தகையவன் தீக்குச்சி ஒன்றைத் தீப்பற்றும்படி செய்கிறான். திடீரென்று வெளிச்சம் வருகிறது. அங்ஙனம் இறைவனுடைய திருவருளால் அவருடைய மஹிமைகளனைத்தும் விளக்கப்படுமாகில் ஐயங்கள் அனைத்தும் அகன்றுபட்டுப் போகின்றன. மனிதனுடைய சிற்றறிவைக் கொண்டு வெறுமனே விசாரித்துப் பார்ப்பதன் வாயிலாக ஈசனுடைய விபூதிகளை மானுடன் அறிந்துகொள்ள முடியுமா?''

பரமஹம்சதேவர் நரேந்திரனைத் தமக்கு அருகில் அமரச்செய்து அவனுடைய உடல் நலனைக் குறித்துக் கனிந்த பாங்கில் விசாரித்தார். அவனிடத்து அவர் பேரன்பே வடிவெடுத்தவராக இலங்கினார்.

நரேந்திரன் பரமஹம்சதேவரிடம் பகர்வானாயினன்: ''அண்ணலே, நான் அன்னை பராசக்தி காளிதேவியைக் குறித்து மூன்று அல்லது நான்கு நாட்கள் ஆழ்ந்து தியானம் செய்தேன். ஆயினும் அவளுடைய மஹிமை ஏதும் என் அறிவுக்கு எட்டவில்லை.''

பரமஹம்சதேவர்: ''சிறியோய், எல்லாம் தக்க தருணத்தில் வந்து வாய்க்கும். ஆதலால் அதைக் குறித்துக் கவலைப்படாதே. பிரபஞ்ச மயமாக இலங்குகின்ற காளிகா தேவியும் பரப்பிரம்மமும் ஒன்றே. மனம், மொழிக்கு எட்டாத பரப்பிரம்மம் என்று பகரப்பெறுவதும் காளிகா தேவியும் ஒன்றே. ஆதி சக்தியாக அவள் இலங்குகின்றாள். கர்மத்தை யெல்லாம் கடந்த அதீதநிலையில் அப்பொருள் இருக்கின்றபொழுது அது பரப்பிரம்மம் என்று பகரப்பெறுகிறது.''

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

8-2. பொய்க்காட்சி ஆன புவனத்தை விட்டு அருள்ஆம் மெய்க்காட்சி ஆம்புவனம் மேவுநாள் எந்நாளோ.

ஐம்பொறிகளை எப்பொழுது எந்தச் சூழ்நிலையில் வைத்து ஆராய்ந்து பார்த்தாலும் அவைகளைப் பற்றிய உண்மையொன்று வெளியாகிறது. புறவுலகைப் பொருள் படுத்துதற்கு ஐம்பொறிகள் உதவுகின்றன. ஆயினும் அவைகள் வாயிலாக மனிதன் பெறுகிற அறிவு அரைகுறையாம். பல தடவைகளில் திரிவுபடுகிற அறிவும் அவைகள் வாயிலாக வந்து அமைகின்றது. சான்றுகள் சில எடுத்துக்கொள்ளுவோம். சுவைத்தல் உயிர்களனைத்துக்கும் பொதுவானது. ஆனால் சுவைத்ததைப் பொருள்படுத்தும் விதத்தில் வேற்றுமை உண்டு. சர்க்கரை தித்திக்கிறது. பெரும்பான்மையான மக்களுக்கிடையில் இந்த அனுபவம் ஒத்திருக்கிறது. ஆனால் தித்திப்பைக் கசப்புக்கு நிகராக ஒதுக்கி வைக்கும் மக்கள் சிலர் இருக்கின்றனர். மேலும் நோய்வாய்ப்பட்டிருக்கிறவர்களுக்கிடையில் சர்க்கரையின் பாங்கு பல தரப்பட்டதாக உணரப்படுகிறது. இதே கோட்பாடு அறுசுவைகளுக்கும் பொதுவானதாம். காணுதல் கண்ணுடைய எல்லார்க்கும் பொதுவானது. காணப்படுபொருளைக் கருத்தில் வாங்குதலில் உயிர்க்குயிர் வித்தியாசம் உண்டு. மானுட வடிவு ஒன்று மக்கள் சிலர்க்கிடையில் புதிதாக வந்து சேருகிறது. அங்ஙனம் வந்த மூர்த்தியைத் தன் தாய் என்று அன்போடு கருதுவது ஓர் உயிரின் பாங்கு. தன் மனைவி என்றும் மகள் என்றும் கருதுபவர்கள் இருக்கின்றார்கள். சகதர்மபத்தினி அல்லது சக்களத்தி என மற்றொருத்தி பொருள்படுத்துகிறாள். தென்பட்ட பெயர்வழி ஒருத்தி எனினும் அவளைப் பொருள்படுத்துதலில் வேற்றுமை மிக உண்டு. அறிவைப் பெறுதற்குக் காது பெரிதும் பயன்படுகிறது. அதை முன்னிட்டே வேதங்களுக்கு சுருதி என்னும் பெயர் வந்துள்ளது. காதால் கேட்டு அறிந்துகொள்ளப்பட்டது என்பது அதன் பொருள். காதின் துணைகொண்டு அறிவை மனிதன் வேண்டியவாறு வளர்க்கலாம். கேள்வி முயல் என்னும் கோட்பாடு அதை முன்னிட்டே வந்துள்ளது. இங்ஙனம் காதால் பெறுகின்ற அறிவிலும் இக்கட்டான நிலை ஒன்று உள்ளது. கடவுள் என்ற சொல்லை ஒரு கூட்டத்திலுள்ள பல பேர் கேட்கின்றனர். அதைப் பொருள்படுத்துதலில் எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை விதங்களில் அது அவர்களால் கிரஹிக்கப்படுகிறது.

ஐம்பொறிகளுக்கு ஞானேந்திரியம் என்பது பொதுப் பெயர். இந்த ஐம்பொறிகளைக்கொண்டே உயிர்களால் உலகம் அறியப்படுகிறது. அங்ஙனம் அறியப்படுகிற உலகைப்பற்றிய அபிப்பிராயங்களோ எண்ணிக்கையில் அடங்கா. ஒவ்வோர் அபிப்பிராயத்திலும் ஏகதேசம் உண்மை உள்ளது. ஆதலால் ஐம்பொறிகளின் துணைகொண்டு மனிதன் பெறுகிற அறிவில் ஒற்றுமையும், வேற்றுமையும் ஏராளமாக நிறைந்திருக்கின்றன.

மனிதன் மயக்கமடைகிறபொழுது அல்லது உறங்குகிறபொழுது ஐம்பொறிகளும் அவனுக்கு உதவமாட்டா. அந்த அளவில் ஐம்பொறிகளும் பயன்படாத சூழ்நிலை ஒன்று வந்தமைகிறது. அறிவைப் பெறுதற்குப் பயன்படுகின்ற கருவிகளில் குறைநிலை அறியப்படுபொருளையும் வந்து பாதிக்கிறது. இக்காரணத்தை முன்னிட்டே மக்களாகிய நமக்குப் புலனாகும் பிரபஞ்சம் பொய்க்காட்சி என ஓதுக்கப்படுகிறது.

மெய்க்காட்சி என்பது யாண்டும் மாறுதிருத்தல் வேண்டும். ஒருகாலத்தில் இருந்து மற்றொருகாலத்தில் இல்லாது போகுமானால் அது மெய்க்காட்சி ஆகாது. ஓரிடத்தில் இருந்து மற்றோர் இடத்தில் இல்லாது போகும் வானவில் போன்ற காட்சியை மெய்க்காட்சி எனலாகாது. நனவிலிருந்து கனவில் இல்லாது போகும் உலகமும் மெய்க்காட்சி ஆகமாட்டாது. இக்குறைபாடுகள்

அனைத்தும் பொய்க்காட்சியாகிய மாயப் பிரபஞ்சத்துக்கு உண்டு. கால தேச நிமித்தத்தால் பாதிக்கப்படாத காட்சி எதுவோ அது மெய்க்காட்சி. ஜாக்ரத சொப்பன சுஷுப்தியாகிய மூன்று அவஸ்தைகளை முன்னிட்டு மாறாதிருக்கிறது எதுவோ அது மெய்க்காட்சி. படைத்தல், காத்தல், துடைத்தல் ஆகிய மூன்று கிருத்தியங்களை முன்னிட்டு மாறாதிருக்கிறது எதுவோ அது மெய்க்காட்சி.

மனிதன் தன்னுடைய மனதையும் ஐம்பொறிகளையும் கட்டியாண்டு பழகுதற்கு ஏற்ப மெய்க்காட்சியாகிய பரசொரூபத்தைக் காணத் தகுதியுடையவன் ஆகிறான். மாயப்பிரபஞ்சமும் புவனம் எனப்படுகிறது. மாறியமைகிற புவனம் என்பது ஓர் உலகம். யாண்டும் மாறாதிருக்கின்ற பரத்தைப் பற்றிய ஞானமும் புவனம் எனப்படுகின்றது. இவைகளுக்குப் பொதுப்பெயர் ஞானபூமிகள். மனதின் பாங்கை அனுசரித்து ஞான பூமிகள் ஏழு அமைகின்றன. அந்த ஏழு பூமிகளையும் உபசாரத்துக்காக ஞான பூமிகள் என்றழைக்கின்றோம்.

பின்பு ஏழு நிறங்கள் ஒன்றோடொன்று ஒன்றித்து வெண்மை நிறமாக மாறுகின்றன. அந்த வெண்மை நிறத்துக்கு ஒப்பானது அருளாம் மெய்க்காட்சி ஆம் புவனம் என்று ஈண்டு இயம்பப்படுகின்றது.

ஆத்ம சாதகன் ஒருவன் ஐம்பொறிகளையும் மனதையும் அடக்கி வெல்லுங்கால் இந்த மாயப்பிரபஞ்சமே அருளாம் மெய்க்காட்சி என அனுபூதியில் அடையப்பெறுகிறது. இப்பெரிய கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது இக்கண்ணி.

8–3. ஆதிஅந்தம் காட்டாமல் அம்பரம்போ லேநிறைந்த
தீதுஇல் அருள்கடலைச் சேருநாள் எந்நாளோ.

அம்பரம் என்பது ஆகாசம். அமைப்பில் பிரபஞ்சத்துக்கும் பரத்துக்கும் பொதுநிலைகள் சில இருக்கின்றன. பூதங்களுள் முதல் பூதமாயிருப்பது ஆகாசம். இதே ஆகாசத்தைப் பிரபஞ்சமாகப் பொருள்படுத்துகிற பொழுது இது ஜடாகாசம் எனப்படுகிறது. பிறகு சுத்தியடைந்த அந்தக்கரணத்தைக் கொண்டு பார்க்குமிடத்து இது சிதாகாசமாக இலங்குகிறது. ஆக ஜடாகாசம் வேறு சிதாகாசம் வேறு அல்ல. ஏகதேச அறிவைக் கொண்டு பொருள்படுத்துமிடத்து இது ஜடாகாசம். தெளிந்த அறிவைக்கொண்டு காணுமிடத்து இது சிதாகாசம். இரண்டு நிலைகளிலும் இது எல்லைகாணாத பரந்த வெட்டவெளியாம். எல்லையில் அடங்காததால் இரண்டு நிலைகளிலும் இருந்து ஆராயுமிடத்து இதற்குத் துவக்கத்தையோ, முடிவையோ யாரும் காணமுடியாது.

இனி இதைப் பிரபஞ்சத்தோடு சம்பந்தப்பட்ட ஜடாகாசமாகப் பொருள்படுத்துமிடத்து இதனிடத்திருந்து வாயு, அக்னி, அப்பு, பிருதுவி ஆகிய ஏனைய நான்கு பூதங்களின் நலனையும் காணலாம், கேட்டையும் காணலாம். கேட்டுக்கு அதில் இடம் இருப்பதால் அது தீது உடையது. அந்தத் தத்துவத்தைச் சிதாகாசமாகக் காணும் பரிபாகம் ஆத்மசாதகனுக்கு வந்தமையுமிடத்து அது நலமுடையதாகவும் கேடற்றதாகவும் காட்சி தருகிறது. அந்நிலையே தீதில்லாத சுகவாரி அல்லது ஆனந்தக்கடல் என்று இயம்பப்படுகிறது.

ஜட ஆகாசம் அருளும் மருளும் நிறைந்தது. சிதாகாசமோ மருளுக்கு அப்பாற்பட்டது. அது யாண்டும் அருள் சொரூபமாம். அந்நிலையை அடையப்பெற்ற சான்றோர் மீண்டும் மயக்கமுறுவதில்லை. மருள் வந்து அவர்கள் மனதை மூடுவதில்லை. யாண்டும் அருளிலேயே அன்னவர்கள் திளைத்திருக்கிறார்கள். அருள்நிலையில் குறை ஏதுமில்லை. அருள்நிலையைப் பூரணநிலை என்று பகரலாம். பூரணப் பொருளை உணர்ந்தவனுக்குக் குறையேதும் உண்டாவதில்லை. அவன் மனம் நிறைநிலை அல்லது பூரணநிலையை யடைகிறது. பூரணத்தைச் சாரும் மனது பூரணமே ஆகிறது. கடலை யெட்டிய நதி மீண்டும் நதியாகத் திரும்புவதில்லை. அதே விதத்தில் அருட் கடலையெட்டிய ஆன்றோர் பேரானந்தத்திலேயே திளைத்திருக்கின்றனர். பெறுதற்கரிய பேறு ஆகிய அத்தகைய சுகவாரியை யானும் அதிவிரைவில் அடையப்பெறுவேனாக என்பது இக்கண்ணியில் அடங்கியுள்ள கருத்து.

நாம் ஏன் கீழ்மையுற்றோம்?

(சுவாமி விவேகானந்தர்)

ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சிக் கல்வி கற்றுச் சுகபோகத்தில் இருந்துவரும் ஒருவன், ஏழைமக்களின் நலத்தைப் பற்றிச் சிந்திக்காமலும், செயல்படாமலும் இருப்பானுல் அவனைத் துரோகி என்றுதான் நான் கூறுவேன். எப்பொழுதாவது செல்வந்தர்களும், கனவான்களும், புரோகிதர்களும், அரசர்களும், ஏழை மக்களைப்பற்றி நினைத்துப் பார்த்ததாக வரலாற்றில் நாம் காண முடியாது. ஏழை மக்களினுடைய உழைப்பினுல்தான் அவர்கள் எல்லாரும் உயர்வடைந்தார்கள். பாமரர்கள் உயர்ந்தால்தான் நாடு நலன் அடையும்.

இந்தியாவில் உள்ள கேடுகளுக்கெல்லாம் ஏழைமக்களின் இழிநிலையே காரணமாக இருக்கிறது. அந்நியர்களுடைய ஆட்சியும், புரோகிதர்களுடைய ஆதிக்கமும் நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக நம்நாட்டுப் பொதுமக்களை நசுக்கி வந்திருக்கின்றன. அதன் விளைவாகப் பாமர மக்கள் தாங்கள் மனிதர்கள் என்பதையே மறந்துவிட்டார்கள். பிரபுக் குடும்பத்தைச் சேர்ந்த நம் மூதாதையர்கள் நம்நாட்டுப் பொதுமக்களை நசுக்கி வந்ததின் விளைவாகவும், பொது மக்கள் தாங்கள் மனிதர்கள் என்பதை மறந்துவிட்டார்கள். ஆணவமும், ஆட்சிப் பொறுப்புமுடைய ஒரு சிறுபான்மையரிடையே கல்வியும், அறிவாற்றலும் அடங்கிக் கிடந்ததுதான் இந்தியாவின் வீழ்ச்சிக்குப் பிரதான காரணமாகும். ஏழைகள் என்றும், பாபிகள் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் கருதப்பட்ட மக்களுக்குக் கை கொடுக்க நண்பர்கள் இல்லை. அவர்கள் உதவியற்றவர்களாக இருந்தார்கள். எவ்வளவு முயன்ருலும், முன்னேறமுடியாதவர்களாக இருந்தார்கள். ஒவ்வொரு நாளும், கீழ்நிலைக்கே போய்க்கொண்டிருக்கிறுர்கள். சமுதாயம் அவர்களைக் கொடுமைப் படுத்திக் கொண்டே இருக்கிறது. அதை அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றுர்கள். பிறகு விறகு வெட்டுவதும், நீர் இறைப்பதும் போன்ற உடல் உழைப்பிலேயே அவர்கள் கட்டுப்படுத்தி வைக்கப்பட்டு இருக்கிறுர்கள். அடிமைவேலை செய்வதற்கே தாங்கள் பிறந்திருப்பதாக அவர்கள் எண்ணிவருகின்றனர். நம்நாடு வேதாந்தத்திற்குப் பிறப்பிடமாகும். ''நான் பிரம்மம்'' என்று எண்ணும்படி வேதாந்தம் கூறுகிறது. ஒவ்வொருவரும் பிரம்ம ஸ்வருபம் என்று உணரும்படி வேதாந்தம் புகட்டுகிறது. வேதாந்தத்திற்கு இருப்பிடமாகிய நம்நாட்டில் மக்கள் எத்தகைய மயக்கத்தில் மூழ்கி இருக்கிறுர்கள் என்பதைப் பாருங்கள். ஒரு சில மக்களைத் தீண்டினுலே பாபமாம். அவர்களுடன் அமர்ந்திருந்தாலே பாபமாம். இது என்ன அநியாயம்? நாளுக்குநாள் அவர்கள் கீழ்மையிலேயே மூழ்கிக் கொண்டிருக்கிறுர்கள். மனிதர்கள் எவ்வளவு கீழ் நிலைக்கு வரமுடியுமோ அவ்வளவு கீழ் நிலைக்கு வந்துவிட்டார்கள். அவர்களைப் பற்றி நாம் நினையாதிருப்பதே நம்நாடு வீழ்ச்சியுற்றதற்குக் காரணமாகும்.

கணக்கற்ற ஏழைகளின் சாபம் நம் தலை மீது இருக்கிறது. தெளிந்த ஆற்றுநீர் ஓடிக்கொண்டிருக்க, சாக்கடை நீரை அவர்களுக்குப் பருக நாம் தந்துகொண்டிருக்கின்றோம். செல்வத்தின் மத்தியில் இருந்துகொண்டு கோடானுகோடி மக்களை நாம் பட்டினி போட்டு வாட்டி இருக்கின்றோம். அத்வைதத்தைப்பற்றிக் கோடிக்கணக்கான மக்களிடம் வாயால் பேசிவிட்டு மனதால் அவர்களை வெறுத்து வருகின்றோம். நாம் அனைவரும் ஒரே பரம்பொருளின் அம்சங்கள் என்ற கருத்தைக் கொள்கை அளவில் பேசி வருகின்றோம். ஆனல் அக் கருத்தை இம்மி அளவும் நடைமுறைக்குக் கொண்டு வருவதில்லை. மனித குலத்தை மேன்மைப்படுத்தும் மதம் இந்து மதத்தைப் போல் வேறு ஒன்றும் இல்லை. ஆனல் அதே சமயத்தில் ஏழைகளையும் தாழ்ந்தவர்களையும் நசுக்கினதால் நாம் கீழ்மையுற்றோம்.

சுவாமி விவேகானந்தரின் கடிதம்

(சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் வெற்றியடைந்த செய்தியை அறிந்த சென்னை இந்துக்கள் விவேகானந்தருக்கு அளித்த பாராட்டுரைக்கு அவர் எழுதிய பதில் கடிதம்)

[304ஆம் பக்கத் தொடர்ச்சி]

பூரணப் பொருளாகிய மெய்ப்பொருளைப்பற்றிப் போதிக்கும் ஒரே நூல் வேதம் ஆகும். வேதத்தைத் தவிர, மற்ற நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் இறைவனுக்கு முழு விளக்கம் ஆகா. அவைகள் இறைவனைப்பற்றி எல்லைக்கு உட்பட்ட காட்சியையே தருகின்றன. வேதங்கள் மனிதனைப் படிப்படியாக மேல்நிலைக்கு அழைத்துச் செல்கின்றன. அகண்டாகாரமாகிய மெய்ப்பொருளை அடையும் யாத்திரையில் அவசியமாய் உள்ள எல்லாப் படிகளையும் காட்டி மனிதனை வேதங்கள் அழைத்துச் செல்கின்றன. மற்றைய மதங்கள் பூரணத்தை அடைவதற்கு அமைந்துள்ள படிகளில் ஒன்றையோ, அல்லது மற்றவற்றையோ தெளிவற்ற முறையில் காட்டுகின்றன. வேதங்களில் எல்லாச் சமயங்களும் அடங்கியிருக்கின்றன. எல்லை அற்றதும், நாமத்தைக் கடந்ததும் நித்தியமானதுமாக விளங்குவது வேத சமயமாகும்.

நூற்றுக்கணக்கான பிறவிகள் எடுத்து நீ கர்மம் புரிந்துகொண்டு இருக்கலாம். உன் மனதின் உட்பகுதிகள் எல்லாவற்றிலும் கற்பகோடிகாலம் தேடிக்கொண்டே இருக்கலாம். அங்ஙனம் செய்யினும், எல்லையற்ற ஆன்மீகச் சுரங்கமாகிய வேதங்களில் இல்லாத ஓர் உயர்ந்த கருத்தை நீ கண்டுபிடிக்க முடியாது. இந்து மதத்தில் உள்ள விக்ரஹ ஆராதனை என்பதைப்பற்றி எடுத்துக்கொள்ளலாம். விக்ரஹ ஆராதனை செய்பவர்கள் எந்த முறைகளைப் பின்பற்றுகிறார்கள் என்பதை முதலில் நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள். அவர்கள் விக்ரஹ ஆராதனைசெய்வது கோயிலிலா? விக்ரஹத்திலா? சரீரத்திலா? அல்லது எந்த இடத்தில் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். முதலில் விக்ரஹ ஆராதனை செய்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப்பற்றித் தெரிந்துகொள்ளுங்கள். விக்ரஹ ஆராதனையைக் குறை கூறுபவர்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேருக்குமேல் விக்ரஹ ஆராதனையைப்பற்றி அறியாதவர்கள் ஆவார்கள். விக்ரஹ ஆராதனை வேதாந்தத்திற்கு விளக்கமாக அமைந்திருப்பதை நீங்கள் அறியலாம்.

கர்மங்களைச் செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. மனு தர்ம சாஸ்திரத்தைப் படித்துப் பாருங்கள். வயதானமனிதன் ஒவ்வொருவனும் கடைசி ஆசிரமத்தை மேற்கொள்ளவேண்டும் என்று அது கூறுகிறது. நான்காவது ஆசிரமமாகிய துறவறத்தை மேற்கொண்டாலும் மேற்கொள்ளா விட்டாலும் கர்மத்தை விட்டொழித்தாக வேண்டும். கர்மங்கள் யாவும் இறுதியில் ஞானத்தில் முடிவடைகின்றன என்று மனு தர்ம சாஸ்திரத்தில் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்து குடியானவன் ஒருவன் மற்ற நாடுகளில் உள்ள கனவான்களைக் காட்டிலும் அதிகமாகச் சமய அறிவு பெற்று இருக்கின்றான். என்னுடைய சொற்பொழிவிலே தத்துவ சமய சம்பந்தமான விஷயங்களில் ஐரோப்பிய பதங்களை உபயோகித்திருப்பதாக நண்பர் ஒருவர் குறைகூறியுள்ளார். நான் ஸம்ஸ்க்ருத பதங்களை உபயோகித்து இருக்கின்றேன். அது உண்மை. சமயக் கருத்துக்களை விளக்குவதற்கு ஸம்ஸ்க்ருதம் பரிபூரண மொழியாக அமைந்திருக்கிறது. நான் மேனாட்டு மக்களுக்காகப் பேசியுள்ளேன் என்பதை நண்பர் மறந்து விட்டார். இந்துக்கள் அவர்களுடைய ஸம்ஸ்க்ருத நூல்களின் அர்த்தத்தை மறந்து விட்டார்கள் என்றும் கிறிஸ்துவப் பாதிரிமார்கள்தாம் ஸம்ஸ்க்ருத நூல்களின் பொருள்களை அறிந்திருக்கிறார்கள் என்றும் கிறிஸ்துவப் பாதிரி ஒருவர் கூறியிருக்கிறார். ஆனால், பாதிரிமார்கள் நிறைந்துள்ள கூட்டத்தில் ஸம்ஸ்க்ருதத்தில் ஒரு வரியையாவது புரிந்து கொண்ட

வரை நான் காண முடியவில்லை. ஆனால் அவர்களில் சிலர் இந்து சமயத்தின் மூல நூல்களையும், வேதங்களையும் குறை கூறு கின்ற பத்திரிகைகளை வாசிக்கின்றார்கள்.

நான் எந்த மதத்திற்கும் எதிர்ப்பாக இல்லை. இந்தியாவில் உள்ள கிறிஸ்துவ மதத்திற்கு எதிர்ப்பாக இருக்கிறேன் என்பது உண்மை அன்று. ஆனால் அமெரிக்காவில் அவர்கள் பணம் திரட்டும் அவர்களுடைய சில முறைகளை எதிர்க்கிறேன். பள்ளிச் சிறுவர்களுக்காக உள்ள பாடப் புத்தகங்களில் இந்து தாய் ஒருத்தி தன் குழந்தைகளைக் கங்கையில் உள்ள முதலைகளுக்கு வீசி எறிவதாகப் படம் தீட்டப்பட்டு இருக்கிறது. அதன் பொருள் என்ன? மக்களிடம் இருந்து அனுதாபத்தைப் பெற்றுப் பணத்தைப் பெறுவதற்குப் பட்த்தில் உள்ள தாய்க்குக் கருமை வர்ணமும், குழந்தைகளுக்கு வெள்ளை வர்ணமும் தீட்டபபட்டு இருக்கின்றன. இன்னும் சில படங்களில் ஒரு மனிதன் தன் மனைவியைக் கம்பத்தில் கட்டி எரிப்பதாக வரையப்பட்டிருக்கிறது. அப்பொழுதுதான் அவள் பிசாசாக மாறித் தன் கணவனின் விரோதியைத் துன்புறுத்துவாளாம். பெரிய ரதங்கள் மக்களின்மீது ஊர்ந்து செல்வதாகப் படங்கள் சித்தரிக்கப்பட்டு இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் என்ன அர்த்தம்? குழந்தைகளுக்காகப் புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டதை நான் அன்று பார்த்தேன். அதில் ஒரு கனவான் கல்கத்தாவிற்குத் தாம் சென்ற விஜயத்தைக் குறித்து எழுதியிருக்கிறார். கல்கத்தாவின் ஒரு தெருவில் மதவெறியர்களின் மேல் ரதம் ஏறிச் சென்றதைத் தாம் பார்த்ததாகக் கூறுகின்றார். இக்கனவான்களுள் ஒருவர் ''மெம்பிஸ்'' என்ற இடத்தில் செய்த பிரசங்கத்தில் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் கைக்குழந்தைகளின் எலும்புகள் நிறைந்த குட்டை ஒன்று இருப்பதாகக் கூறியதை நானே கேட்டு இருக்கிறேன்.

ஒவ்வொரு கிறிஸ்துவக் குழந்தைக்கும் இந்துக்களை இழிந்தவர்கள் என்றும், வெறுக்கத் தக்கவர்கள் என்றும், பேய் பிசாசுகள் என்றும் அழைக்கும்படி கிறிஸ்துவ சிஷ்யர்கள் போதிக்கின்றார்களே! அந்த இயேசு சீடர்களுக்கு இந்துக்கள் என்ன குற்றம் செய்துவிட்டார்கள்? கிறிஸ்துவர்கள் அல்லாதவர்களைச்சிறப்பாக இந்துக்களை வெறுக்கவேண்டும் என்று பள்ளிக்குழந்தைகள் புகட்டப்படுகிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் பள்ளிக் குழந்தைகளுக்குப் புகட்டப்படும் பாடப் பகுதியில் இது ஒரு பகுதியாக இருக்கிறது. இளமையிலிருந்தே கிறிஸ்துவச் சங்கத்திற்குக் காணிக்கை செலுத்தவேண்டும் என்று புகட்டப்படுகிறார்கள். சத்தியத்திற்காக அல்லாவிடினும் தங்களுடைய குழந்தைகளின் ஒழுக்கத்தை முன்னிட்டாவது இம்மாதிரியான போதனைகள் நிகழ்வதைக் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் தடுத்து நிறுத்தவேண்டும். இப்படிப் போதிக்கப்படுகின்ற குழந்தைகள் இரக்கமற்ற கொடியவர்களாக வளர்வதில் என்ன ஆச்சர்யம் இருக்கிறது! என்னுடைய நண்பர் வீட்டில் ஒரு பணிப் பெண் இருந்தாள். அவள் கிறிஸ்துவருடைய பிரசாரத்தைக் கேட்டதன் விளைவாகப் பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பப்பட்டாள். இந்துமதத்திற்கு விரோதமாகச் சென்னையிலே வெளியிடப்பட்டிருக்கும் நூல்களைப் பாருங்கள். அப்புத்தகத்தில் இருப்பது போன்று கிறிஸ்துவ மதத்திற்கு எதிராக இந்து ஒருவன் ஒரு வரி எழுதி வெளியிடுவானாகில் கிறிஸ்துவர்கள் பழிக்குப்பழி வாங்குவதில் நெருப்புப்போல் இருப்பார்கள்.

என் நாட்டின் அருமை மக்களே! அமெரிக்காவில் நான் ஓர் ஆண்டுக்குமேல் இருந்து வருகிறேன். இந்நாட்டின் ஒவ்வொரு உட்பகுதியையும் நான் பார்த்திருக்கிறேன். பாதிரிமார்கள்கூறுவதுபோல் நாம் பேய்களுமல்லர்;அவர்கள் தேவர்களுமல்லர். இந்தியர்களின் ஒழுக்கக் கேடுகளைப்பற்றிக் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் பேசுவதைக் குறைத்துக்கொள்ளவேண்டும்.சிலநாடுகளில் உள்ள உண்மை நிலையைப் படம் பிடித்துக் காட்டினால்அதன் முன் கிற்ஸ்துவர்கள் இந்தியாவைப்பற்றிக் கற்பனையாகச் சித்தரித்துக் காட்டுவது நிற்கமுடியாது. ஹிந்து சமுதாயம் இன்னும் பூர்ண நிலையை அடைய வேண்டும்.

(தொடரும்)

யோக வாழ்வு

(ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள் 1974ஆம் ஆண்டில் திருவேடகத்தில் கல்லூரி ஆசிரியர்களுக்கான கோடைப் பயிற்சி முகாமில் நிகழ்த்திய சொற்பொழிவு)

[302ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்ப்பதற்காகக் கீழ்க்குல மாது ஒருத்தி வருவது உண்டு. அவளைத் தீண்டக்கூடாது என்றும், வீட்டுக்குள் நுழையக்கூடாது என்றும் தடை விதித்து வைத்தார்கள். வாரத்தில் வியாழக்கிழமையன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம்பொதுவாக அன்பர்கள் வருவதில்லை. அன்றைக்கு அம்மாது ஸ்ரீ ராமகிருஷ்ணரைப்பார்க்க வருவாள். ‘‘நீ எப்பொழுது வந்தாலும் எனக்கு ஏதாவது தின்பண்டம் கொண்டுவரவேண்டும். சொற்பச் செலவில் தயார் செய்யப்பட்ட தின்பண்டமாக அது இருக்கவேண்டும்.’’ இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அம்மாதுவிடம் பகர்ந்திருந்தார். அம்மாது ஒரு வியாழக்கிழமை வந்தபொழுது வழக்கத்திற்குமாறாக அந்த வியாழக்கிழமை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அறையில் அன்பர்கள் அதிகம் பேர்அமர்ந்திருந்தனர். அந்த மாது அறைக்கு வெளியில் நின்றுகொண்டு தலையை நீட்டி அறைக்குள் பார்த்தாள். அறைக்குள் மற்ற அன்பர்கள் இருந்ததால் தன்னை மறைத்துக் கொள்ள முயன்றாள். அன்பர்கள் இருக்கும்பொழுது உள்ளே சென்றால் திட்டும் உதையும் கிடைக்கும் என்று அவளுக்குத் தெரியும். எனவே அவள் உள்ளே செல்லத் தயங்கினாள். ஸ்ரீராமகிருஷ்ணர் அவளைப்பார்த்துவிட்டார். உள்ளே வரும்படி அவர் அவளை அழைத்தார். ‘‘நீ இங்கு வந்தால் என்னிடம் நேரே வரவேண்டியதுதானே! ஏன் தயங்கிக்கொண்டு நிற்கின்றாய்?’’ என்றார். அவள் உள்ளே வந்ததும் அறைக்குள் இருந்தவர்கள் எல்லாரும் விலகிக்கொண்டார்கள். ‘‘நீ இங்கு வரும்பொழுது எனக்கு ஏதாவது தின்பண்டம் கொண்டுவருவாய். இன்றைக்கு நீ என்ன தின்பண்டம் கொண்டு வந்திருக்கிறாய்? அதைக் கொண்டுவந்து இங்கு வை’’ என்றார். அவள் தின்பண்டத்தைக்கொண்டு வந்து கையில் கொடுத்ததும், அதைச்சாப்பிட்டுப் பார்த்து நன்றாக இருக்கிறது என்று பாராட்டினார். அவள் நல்லியல்பு படைத்தவளாகையால், அவள் கைப்பட்ட உணவு ஆச்ரய தோஷத்திற்கு உள்ளாவதில்லை. இங்ஙனம் ஸ்ரீ ராமகிருஷ்ணர் நடந்துகொண்டதன் மூலமாக ஆச்ரய தோஷத்தில் மக்களுக்கு இருந்த குருட்டு நம்பிக்கையை அகற்றிவைத்தார்.

இன்றைக்கு உலகம் முழுவதும் தொடர்பு வைக்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. உலகம் எல்லாம் ஒன்று என்று பேசினால்மட்டும் போதாது. உலகம் முழுவதும் ஒன்று என்று செயல்முறையிலும் காட்டவேண்டும். உண்ணும்பொழுது யாவரும் சமமாக அமர்ந்து கொண்டு உண்டால் ஒற்றுமை மனப்பான்மையை வளர்க்க அது உதவிபுரிகின்றது. கோலாலம்பூரில் புத்த சந்நியாசிகள் நடத்திய விருந்தில் இந்துக்கள் பத்துப்பேர், சீனர்கள் பத்துப்பேர் ஆக இருபதுபேர் கலந்துகொண்டனர். அவ்விருந்தில் விருந்து கொடுத்தவர் உணவை எச்சில்படுத்தி விருந்தினர் வாயில் வைத்தார். அந்த நாட்டு ஆசாரப்படி அவர் விருந்தினரை அங்ஙனம் உபசரித்தார். அந்த நாட்டு ஆசாரத்திற்கு ஒப்ப விருந்தினரும் விருந்தைமகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார்கள். ஒரு தடவை ஏழாம் எட்வர்ட் மன்னர் இந்திய மன்னர் ஒருவரை விருந்திற்கு அழைத்திருந்தார். பலவகை உணவுகளுக்கிடையில் நீரும் வைத்திருந்தார்கள். விருந்துண்ண எல்லாரும் அவரவர் இடத்தில் அமர்ந்தவுடன் இந்திய மன்னர் நீரை எடுத்துப் பருகினார். அது ஆங்கிலப் பண்பாட்டிற்கு முரணானது. எல்லாரும் புன்சிரிப்புச் சிரித்தனர். இந்திய மன்னரின் செயலை ஆமோதிக்கும்பொருட்டு எட்வர்ட் மன்னரும் நீரை எடுத்துப் பருகினார். அதன் பிறகு எல்லாரும் நீரை எடுத்துப் பருகினார்கள். அந்தந்த நாட்டு தேசாச்சாரப்படி நாம் நடந்துகொள்ளுதல் தான் முறை. அதைப் பெரிது பண்ணிக்

கொண்டிருக்கக்கூடாது.

ராமானுஜாச்சாரியார் ஜாதிதோஷம், நிமித்ததோஷம், ஆச்ரய தோஷம் இல்லாத உணவாக இருக்கவேண்டும் என்று உணவுத்தூய்மைக்கு விளக்கம் தருகின்றார். உடல், உள்ளம் ஆகிய இரண்டிற்கும் தருவதையே ஆஹாரம் என்று சங்கராச்சாரியார் ஆஹாரத்திற்கு விளக்கம் தந்திருக்கின்றார். உடலுக்குத்தருகின்ற உணவைவிட, உள்ளத்திற்குத் தருகின்ற உணவு முக்கியமானது என்று ஸ்ரீ சங்கராச்சாரியார் சொல்லுகின்றார். வாயின் வழியாக உட்கொள்கின்ற பதார்த்தங்கள் உடலுக்கு உணவாகின்றன. பஞ்சேந்திரியங்கள் மூலமாக வருகின்ற எண்ணம் மனதிற்கு உணவாகின்றது. கண்கொண்டு ஒன்றைப் பார்க்கும்பொழுது மனதில் எழுகின்ற எண்ணம் பாராட்டத்தக்கதாக இருக்குமானல் அது மனதிற்கு நல்ல உணவாகின்றது. கண்கொண்டு காணும்பொழுது உண்டாகின்ற எண்ணம் தகாத உணர்வை ஊட்டினல் அது குற்றமுடைய உணவாகிறது. காதால் கேட்கின்றபொழுது உள்ளத்தில் உண்டாகின்ற விருத்தி பாராட்டதக்கதாக இருக்குமானல் அப்படி ஏற்றுக்கொண்டது சுத்த ஆஹாரம் ஆகிறது. தகாத விருத்தி உண்டு பண்ணும் விஷயம் அசுத்த ஆஹாரம் ஆகிறது. இங்ஙனம் பஞ்சேந்திரியங்கள் மூலமாக வாங்குகிற கருத்துக்கள் உயர்நிலைக்கு எடுத்துக்கொள்ளக்கூடியதாக இருக்குமானல் தூய உணவை ஏற்றவர்கள் ஆகின்றேம். பஞ்சேந்திரியங்கள் மூலமாக வாங்குகின்ற கருத்து மனதைக் கீழ்நிலைக்குக் கொண்டுசெல்லுமானல் அது அசுத்த ஆஹாரம் ஆகிறது. வெப்பநிலையைக்காட்டுவதற்கு தர்மா மீட்டர் இருக்கிறது. ஸ்பீடா மீட்டர் வேகத்தைக் காட்டுகின்றது. வாட்டர் மீட்டர் உபயோகப்படுத்தப்பட்ட நீரின் அளவைக் காட்டுகிறது. அவைகளைப்போல நம் எண்ணத்தைக் காட்டுவதற்கு தாட்டோ மீட்டர் நம் நெற்றியில் அமைக்கப்பெற்றிருக்குமானல் நாம் முகத்தை வெளியில் காட்டமுடியாது. கடவுள் கிருபை கூர்ந்து அதை நம் நெற்றியில் அமைக்கவில்லை. நம்முடைய எண்ணம் நல்லதா? கெட்டதா? என்பது நமக்குத் தெரியும். ஆனல், மற்றவர்கள் நம் எண்ணத்தைக் கண்டுபிடிக்க முடியாது. நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகமில்லை என்பது கோட்பாடு. நாம் எண்ணுகிற எண்ணம் சுத்தமாக இருக்குமானல், நாம் சுத்த ஆஹாரத்தை எடுத்துக்கொண்டிருக்கின்றேம். பொறிகள் வாயிலாக வரும் விஷயம் எண்ணத்திற்குத் தூண்டுதலாக இருக்கின்றது. பஞ்சேந்திரியங்கள் மூலமாக வரும்விஷயங்களை உள்ளத்துக்குரிய ஆஹாரமாகக் கொள்ளலாம். யோகி உடலுக்குரிய ஆஹாரத்தையும், உள்ளத்துக்குரிய ஆஹாரத்தையும் சுத்தமாக்கிக்கொள்ளவேண்டும். அந்தக்கரணம் சுத்தி அடைந்தால் பரவஸ்துவின் தரிசனம் கிட்டுகின்றது. ''ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்; எழுமையும் ஏமாப் புடைத்து'' என்பது கோட்பாடு. ஆமை தன் ஐந்து அவயவங்களையும் சுருக்கிக்கொள்வதுபோன்று இந்திரியங்களை உள்ளே வாங்கிக்கொள்ளவேண்டும். சித்த விருத்தியை நல்ல பாங்கிலே உண்டுபண்ணிக்கொண்டு இருக்கவேண்டும். அப்படிச் செய்து வந்தால் பிரத்யாகாரம் என்கின்ற சாதனத்தைச் செய்தவர்கள் ஆகின்றேம். 'தாம் யோகம் இதிமன்யந்தே ஸ்திராம் இந்திரிய தாரணும்' என்பது உபநிஷதம். ''பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க; நெறிநின்றார் நீடுவாழ் வார்'' என்பது பொய்யாமொழி. யோகி ஐம்பொறிகளையும் உள்ளே இழுத்துப்பழக வேண்டும். நல்ல விஷயங்களில் மட்டும் அவற்றைச் செலுத்துதல் வேண்டும். இது பிரத்யாகாரம் எனப்படும்.

பிரத்யாகாரத்தில் நிலைபெற்றான பிறகு மன ஒருமுகப்பாடு வருகிறது. மன ஒருமுகப்பாட்டிற்குத் தாரணை என்று பெயர். புறத்தில் செல்லுகின்ற மனதை அகத்திலேயே அடக்கி வைப்பது பிரத்யாகாரம். அப்படி உள்ளே அடக்கிய மனதை ஒன்றனித்துச் செலுத்துவது தாரணை எனப்படும். உள்ளே அடக்கி வைத்த மனதை லட்சியத்தின் பால் செலுத்த வேண்டும். தாரணைக்கு எடுத்துக்காட்டாக ஆஞ்சநேயர்

அமைகின்றார். ''இன்றைக்கு என்னநாள்? என்ன நட்சத்திரம்? என்ன திதி?'' என்று ஆஞ்சநேயரைக் கேட்டால் அதற்கு அவர் தரும் பதிலாவது: ''ஸ்ரீ ராமச்சந்திரனைத் தவிர நான் நாளையோ நட்சத்திரத்தையோ திதியையோ அறியேன்.'' ஸ்ரீராமச்சந்திரன் என்ற லக்ஷியத்தின் மீது ஆஞ்சநேயர் தம் மனம் முழுவதையும் செலுத்தி வந்தார். ஹனுமார் போன்று நாம் நம்முடைய லட்சியத்திலேயே மனம் முழுவதையும் செலுத்தவேண்டும். உலகக் காரியம் செய்தாலும் மனம் லக்ஷியத்தை நாடியே ஓடிக்கொண்டிருக்க வேண்டும். ஸ்ரீ ராமானுஜாச்சாரி என்பவர் சென்னை காரியாலயத்தில் உதவிக் காரியதரிசியாக வேலை செய்து வந்தார். அதைப் பயன்படுத்தி மாணவர் இல்லம் என்ற பெரிய ஸ்தாபனம் ஒன்றை உருவாக்கினார். யாராவது ஒருவரிடத்தில் சிறந்த ஆற்றல் இருந்தால் அவரை மாணவர் இல்லத்திற்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்று முதலில் தமக்குத் தோன்றும் என்று பகர்வார். மாணவர் இல்லத்திலேயே அவர் மனதைச் செலுத்தி வந்தது அவரிடத்தில் இருந்த தாரணை ஆகும். அவர் தம் வீட்டுக் காரியத்தை ஒழுங்காகக் கவனிக்கமாட்டார். ஆனால் அது ஒழுங்காக நடந்துவிடும். பிறருக்காக நாம் காரியம் செய்யும் பொழுது நம் காரியம் தானாகவே நிகழும். இவ்வுண்மைக்கு அவர் வாழ்வு எடுத்துக்காட்டாக இருந்தது. அல்லும் பகலும் மாணவர் இல்லத்தின் சிந்தனையே அவருடைய உள்ளத்தில் இடம் பெற்றிருந்தது. இங்ஙனம் மனதை ஒன்றிலேயே ஒருமுகப்படுத்தி வைத்திருப்பது தாரணை எனப்படும். தாரணையின் மூலம் மனோசக்தி யாவும் ஒரு பொருளினிடத்துக் குவிக்கப்படுகிறது.

தாரணைக்கு அடுத்துத் தியானம் வருகின்றது. பரவஸ்துவை நம் இஷ்டமூர்த்தியாக வைத்துக் கொள்ளலாம். நம் உள்ளத்தைப் பரிசுத்தம் செய்து, நம் ஹிருதய கமலத்தில் நம் இஷ்ட தெய்வம் வீற்றிருப்பதாக எண்ணி அந்த இஷ்ட மூர்த்தியின் சாந்நித்தியத்தில் நம் மனதை நெடிது குவித்திருக்க வேண்டும். அப்பொழுது இஷ்டமூர்த்தியின் மஹிமையைக் குறித்துத் தியானம் செய்து கொண்டிருக்க வேண்டும். எந்த எண்ணத்தை ஆழ்ந்து எண்ணுகின்றோமோ, அந்த எண்ண மயமாக ஆகின்றோம். இஷ்டமூர்த்தியையே எண்ணுகின்ற பொழுது, இஷ்டமூர்த்தி மயமாக நாம் ஆகிவிடுகின்றோம். கண்ணனையே நினைந்து நினைந்து ஒவ்வொரு கோபியும் கண்ணன் ஆகிவிட்டாள். சரீரம் தெய்விக சரீரமாக மாறியமைகிறது. யோகிகள் அதை அறிகின்றனர். அத்தகைய மாறுதல் வருவதற்குத் தூண்டுதலாக இருப்பது தியானம். தியானத்தின் மூலம் மனோசக்தி ஆன்ம சக்தியாக மாற்றப்படுகிறது. உயர்ந்த லட்சியத்தைக் குறித்துத் தியானம் பண்ணுகின்ற பொழுது அந்த லட்சிய மயமாக நாம் மாறியமைகின்றோம். சுவாமி விவேகானந்தரிடம் அமைந்திருந்த சிறப்புக்கள் எல்லாம் அவருக்குத் தியானம் நன்கு கூடி இருந்ததனால் வாய்த்தவை. சிறு வயதாக இருக்கும் பொழுதே தியானம் செய்வது அவருக்கு விளையாட்டாக இருந்தது. மனம் தூய்மை அடைகின்ற அளவு உயர்ந்த லட்சியத்தைக் குறித்துத் தியானம் சுலபமாக அமைகின்றது. உடல் அழகிலோ, உடல் இன்பத்திலோ உண்டாகின்ற இன்ப உணர்வை மனம் வென்று பழகவேண்டும். அப்பொழுதுதான் மனம் தியானத்திற்குத் தகுதி உடையதாகின்றது. கல்விக்குத் தியானப்பயிற்சி அவசியமாகிறது. 'கல்வித்துறை என் வசம் வருமானால் மனத்தூய்மைக்கும், தியானத்துக்கும் முதலிடம் தந்து மாணாக்கர்களுக்கு அவற்றில் பயிற்சியளிப்பேன்' என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். 'தியானகம்யா' என்று லலிதா ஸஹஸ்ரநாமத்தில் வருகிறது. 'தியானத்தின் மூலம் அம்பிகை அடையப்படுகிறாள்' என்பது அதன் பொருள். கல்வித்துறையில் தியானப் பயிற்சிக்கு முதலிடம் அளிக்க வேண்டும்.

தியானம் முதிர்ந்தால் சமாதியாக மாறுகிறது. ஜீவபோதத்தைக் கடந்து பரபோதத்தில் நிலைபெற்றிருப்பது சமாதி எனப்படுகிறது. சவிகல்ப சமாதி, நிர்விகல்ப சமாதி, சம்ப்ரக்ஞாத சமாதி, அசம்

ப்ரக்ஞாத சமாதி என்று சமாதியில் பாகு பாடுகள் இருக்கின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் யாண்டும் சவிகல்ப சமாதியில் இருந்துவந் தார். சிற்சில சமயம் நிர்விகல்ப சமாதிக் கும் செல்வார். நிர்விகல்ப சமாதியில் தாம் பெறுகின்ற அனுபவத்தைத் தாம் உணர முடிகிறது என்றும், பிறருக்கு எடுத்துச் சொல்ல இயலுவதில்லை என்றும் நிர்விகல்ப சமாதியை விட்டு வந்த பிறகு கூறி இருக் கிறார். சுவாமி விவேகானந்தரை ஒருதடவை ராமகிருஷ்ணர் நிர்விகல்ப சமாதிக்கு எடுத் துச்சென்றார். நிர்விகல்பசமாதியில் விவேகா னந்தர் பேரானந்தத்தை அனுபவித்தார். நிர் விகல்ப சமாதியில் இருந்து அவரைக் கீழே இறக்கிக் கொண்டுவந்தபின் 'உனக்கு இப் போது என்ன வேண்டும்' என்று கேட்டார். 'சற்றுநேரத்துக்கு முன்பு நான் அனுபவித்த பேரானந்த நிலையிலேயே யாண்டும் இருக்க அருள்புரியுங்கள்' என்றார் சுவாமி விவேகா னந்தர். நிர்விகல்ப சமாதியை அடைந்த வர்கள் மீண்டும் உடல் வாழ்க்கைக்கு வருவ தில்லை. ஆனால் ஒரு சிலரை உலககாரியத்தை முன்னிட்டு உலக நலனுக்காக அம்பிகை அந் நிலையிலிருந்து அவர்களை உடல் வாழ்க்கைக் குக் கொண்டு வருகிறாள். இவ்வாறு ஸ்ரீராம கிருஷ்ணர் பகர்வதுண்டு. ஸ்ரீ ராமகிருஷ் ணர் சவிகல்ப சமாதியில் இருக்கும்போது அவருடைய உடல் ஒரு நிலை கொள்ளாது தள்ளாடும். அப்போது யாராவது அவர் உடலைத் தாங்கிப் பிடித்துக்கொண்டிருப் பார்கள். தோத்தாபுரி என்ற ஞான குரு ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு நிர்விகல்ப சமாதியை உண்டுபண்ணிவைத்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண ருடைய உள்ளம் நிர்விகல்ப சமாதி நிலைக்குச் சென்றதைக்குறித்துத் தோத்தாபுரி வியப்பு டன் பகர்ந்திருப்பதாவது: ''நான் நாற்ப தாண்டு காலம் தீவிர சாதனை செய்து பெற்ற நிர்விகல்ப சமாதியை இந்த உத்த மர் ஒரே நாளில் பெற்றுவிட்டாரே! என்ன ஆச்சர்யம்! மகாதேவா! இதுபோல்காண்பது அரிதிலும் அரிது.'' ஸ்ரீ ஆஞ்சநேயர் எதைப் பார்த்தாலும சீதாராமன் மயமாகக் கண் டார். ராதைக்கு எதைப் பார்த்தாலும் ஸ்ரீ கிருஷ்ணன் மயமாகத் தென்பட்டது.

இந்த மனநிலையைச் சம்ப்ரக்ஞாத சமாதி என்று சொல்லலாம். ஞானி ஒருவன் நாம ரூபங்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு இருந்தது இருந்தபடி இருக்கின்றான். அதை அசம்ப்ரக் ஞாத சமாதி என்று சொல்லலாம். நிர் விகல்பசமாதிதான் நம்முடைய நிஜசொரூப நிலையாகும். பிரக்ஞையை முற்றும் உணர்ந்த நிலை நிர்விகல்ப சமாதியாகும். பிரக்ஞானம் பிரம்மம் என்பது மகாவாக்கியம். பேரறிவே மெய்ப்பொருள் என்பது அதற்குப்பொருள். நிர்விகல்ப சமாதிதான் முடிந்த நிலையாகும்.

சம்ப்ரக்ஞாத சமாதி, அசம்ப்ரக்ஞாத சமாதி இவைகளைப் பற்றிச் சற்று விரிவாக ஆராய்வோம். இயற்கையை வென்று அதை ஒதுக்கிவைக்கும் திறன்கள் யாவும் அடங் கப்பெற்றது சம்ப்ரக்ஞாத சமாதி. சம்ப்ரக் ஞாத சமாதியில் ஜீவாத்மனுக்கு முக்தி வாய்ப்பதில்லை. சம்ப்ரக்ஞாத சமாதியின் மூலம் அஷ்டசித்திகளைப் பெறுவது சாத்தி யம். அந்நிலையினின்றும் வழுவி யோகப் பிரஷ்டன் ஆவதும் அந்நிலையில் சாத்தியம். மனதையும் தாண்டி மன அதீதத்துக்குப் போவது மிகவும் கடினம். மனது மனதின் மீதே சம்யமம் செய்யவேண்டும். அதாவது மனது மனதைக் குறித்தே தியானம்பண்ண வேண்டும். தியானவேளையில் மனதில் ஏதேனும் எண்ணம் உதித்தால் அக்கணமே அவ்வெண்ணத்தைத் தகர்த்தல் வேண்டும். எந்த எண்ணமும் மனதில் தோன்றாது திரையற்ற கடல்போன்று மனதில் அமைதி நிலவவேண்டும். சாதனையின் மூலம் மனம் பரிபாகம் அடையபெறுதவர்கள் மனதைக் காலிபண்ண முயன்றால் அவர்கள் பெரும் பாலும் தமோகுணத்துக்கு உட்படுவார்கள். ஜடம்போன்று கிடப்பதை மனதற்ற நிலை என்று எண்ணி மக்கள் மயக்கத்துக்கு ஆளா கின்றனர். தமோகுணம் அகன்று மனம் முற்றிலும் வசப்பட்டால்தான் மனதற்ற நிலையை அடைய முடியும். மனதை வசப் படுத்திய பிறகுதான் அசம்ப்ரக்ஞாத சமாதி வாய்க்கிறது. அந்நிலையில் ஆத்ம சொரூ பம் முற்றும் உணரப்படுகிறது. நம்மை ஆத்ம சொரூபமாக உணர்வதே யோக வாழ்வின் குறிக்கோளாகும். (முற்றும்)

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (323) தபோவனப் பிரசுரங்களின் அட்டையில் அச்சிடப்பட்டிருக்கின்ற சின்னத்தின் கருத்து யாது?

இந்தச் சின்னத்தின் வடிவைச் சீட்டாடுகிறவர்கள் கிளாவர் என்பார்கள். ஆங்கிலத்தில் அமைந்துள்ள club கிளப் என்னும் பதம் சீட்டாடுகிறவர்களுக்கிடையில் கிளாவர் எனத் திரிவுபட்டிருக்கிறது. கிளப் club என்னும் ஆங்கிலப்பதத்திற்கு நேர்பொருள் கதை. மஹாவிஷ்ணு தாங்கியிருக்கும் ஆயுதங்களுள் கதைगदा ஒன்று. அதைமுன்னிட்டே அவருக்குக் கதாதரன்गदाधर: என்னும் பெயர் வந்துள்ளது. கதையைத் தாங்கியிருப்பவன் என்பது அந்த நாமத்தின் பொருள். ஆக, இந்த வடிவம் மஹாவிஷ்ணுவைக் குறிக்கிறது. அதனுள் அமைந்திருக்கும் ஓங்காரம் சிவனாரைக் குறிக்கிறது. ஓங்காரேச்வரர் என்பது அவருக்கு அமைந்துள்ள நாமங்களில் ஒன்று. இந்தச் சின்னத்தின் கீழ்ப்பகுதியில் ஷட்சக்கரம் அமைந்திருக்கிறது. அது ஷண்முகக் கடவுளாகிய சுப்ரமணியரைக் குறிக்கிறது. மேல்பகுதியிலுள்ள சூரியன் சூரியநாராயணனுக்கு விளக்கமாக அமைந்திருக்கிறது. யானையின் முகம் கஜானனாகிய கணபதியைக் குறிக்கிறது. சிம்ஹத்தின் முகம் சிம்ஹவாஹினியாகிய அம்பிகையைக் குறிக்கிறது. ஆக, ஹிந்து மதத்திலுள்ள ஆராதனைக்குரிய தெய்வங்களாக விளங்கும் விஷ்ணு, சிவன், சக்தி, குமரன், கணபதி, சூரியநாராயணன் ஆகிய ஆறு தெய்வங்களுக்கு இச்சின்னம் விளக்கமாகிறது.

அடுத்தபடி நான்கு யோகங்களுக்கும் விளக்கமாக இந்தச் சின்னம் அமைந்திருக்கிறது. ஆற்றலுக்கு அடையாளம் சிம்ஹம். அது கர்மயோகத்தைக் குறிக்கிறது. ஆறு ஆதாரங்களை உடைய ராஜயோகத்துக்கு விளக்கமாக ஷட் சக்கரம் அமைந்திருக்கிறது. யானை தன் இனத்தில் பேரன்பு வைத்திருக்கிறது. ஆதலால் அது பக்தி யோகத்துக்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது. சூரியன் ஞானயோகத்தின் சின்னமாகும். சூரியன் உதயமானதும் பொருள்கள் எல்லாம் உள்ளபடி விளங்குகின்றன. அதே பாங்கில் ஞானம் உதயமாகும்பொழுது பிரபஞ்சத்தில் அமைந்துள்ள அனைத்தும் பரம்பொருள் சொரூபம் என்பது விளங்கும். ஆகவே பரம்பொருளின் சொரூபங்களாகிய ஆறு தெய்வங்களும் அதை அடைதற்கு உபாயமாக உள்ள நான்கு யோகங்களும் இந்தச் சின்னத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

கேள்வி: (324) நாடெங்கும் வழிபட்டு வருகின்ற மாரியம்மன் என்னும் அம்பிகைக்கு சாஸ்திரோக்தமான விளக்கம் ஏதாவது இருந்தால் அதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

அம்பிகையின் வழிபாடு பண்டைக்காலத்திலிருந்து இன்றுவரை உலகில் வெவ்வேறு சமுதாயங்களுக்கிடையில் வெவ்வேறு விதங்களில் இடம் பெற்று இருக்கிறது. பரம்பொருளை உலகமாதாவாக வைத்து வணங்குவது மக்களின் போக்கு ஆகும். ஆங்காங்குள்ள கிராம தேவதைகள் அம்பிகையின் சொரூபங்களாக விளங்குகின்றன. ஆங்காங்கு அவளுக்கு அமைந்துள்ள நாமங்களுள் துர்க்கையும் காளிகா தேவியும் காலக்கிரமத்தில் பரதேவதையின் ஸ்தானத்தைப் பெற்றுள்ளார்கள். கடவுளின் வடிவங்கள் எனத் தபோவனம் வெளியிட்டிருக்கும் நூலில் இவ்விஷயம் விரிவாக விளக்கப்பட்டு இருக்கிறது.

மாரியம்மன் வைசூரி நோய்க்கு அதிஷ்டான தெய்வமாக வைத்து நாடெங்கும் இந்நாள்வரை ஆராதிக்கப்பட்டு வருகின்றாள். மனிதன் பண்பாட்டில் மேலே போவதற்கு ஏற்ப அவன் வழிபடுகிற தெய்வங்களுக்கும் ஈசுவர விபூதிகள் ஏராளமாக நாளடைவில் இணைக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பாங்கில் மாரியம்மனும் காலாந்தரத்தில் பரதேவதையின்ஸ்தானத்தைப்பெறுவாள் என்பது வெளிப்படை. ஏற்கனவே பாரதியார் பாடிய பாடல்களுள் மாரியம்மன் பரதேவதையின் வடிவமாகவே கருதப்படுகிறாள்

என்பதற்குச் சான்றுகள் காண்கின்றோம். இங்ஙனம் ஆங்காங்கு மக்களால் ஆராதிக்கப்படுகிற சிறு தெய்வங்கள் நாளடைவில் விபூதிகள் பல அடையப்பெற்றுப் பரவஸ்துவோடு இணைக்கப்படுவது மக்கள் அருள் துறையில் அடைந்துவருகிற முன்னேற்றத்துக்கு அறிகுறிகளாம்.

மாரியம்மனைப் பராசக்தி சொருபமாகப் பாராட்டி வழிபடுவது பொருத்தமானதே. சாஸ்திரத்தின் திட்டத்துக்கு இது ஒத்திருக்கிறது.

கேள்வி: (325) வழிபாட்டுக்குப்பின் சாந்தி பாடம் சொல்வதன் நோக்கம் என்ன?

சாந்தி பாடத்தை முதலில் சொல்லி வழிபாடு ஆரம்பமாகிறது. வழிபாடு முற்றுப்பெற்றுன பிறகும் சாந்திபாடம் ஓதப்படுகிறது. ஒவ்வொரு சாந்தி பாடத்தின் உட்பொருளும் மனதின்கண் அமைதியையும் தெளிவையும் உண்டுபண்ணுகிறது. வழிபாடு செய்வது மனத்தெளிவின்பொருட்டே. அதேவிதத்தில் சாஸ்திர ஆராய்ச்சி பண்ணுவதும் மனத்தெளிவின் பொருட்டேயாம்.

மனம் தெளிவடைதற்கு ஏற்ப மனிதன் மேலோனுகிறுன். சான்று ஒன்றன் மூலம் இக்கோட்பாட்டைத் தெளிவுபடுத்தலாம். குழந்தையொன்று தன் தாயைக் காணுதிருக்கின்றபொழுது கதறியழுகிறது. தாயைக் கண்டதும் அழுகை நிற்கிறது. அமைதி உண்டாகிறது. குழந்தைக்கு உள்ளத்தில் சாந்தி நிலவுகிறது. ஸ்தூலத்தில் நாம் காணுகிற இக்காட்சிக்கு நிகரானது சூட்சும நிலையில் சாந்திபாடம் உள்ளத்தில் உண்டு பண்ணுகின்ற அமைதியாம். குழந்தை தன்னைப் பெற்றெடுத்துப் பேணிவரும் தாயைக் கண்டதும் அமைதியுறுகிறது. அதே விதத்தில் சாந்திபாடத்தில் அமைந்துள்ள மேலாம் கருத்தை அறிந்துகொள்ளுதற்கேற்ப அதை ஓதுகிறவனுடைய உள்ளத்தில் அமைதி உண்டாகிறது. எனவே சாந்திபாடம் என்பது காரணப் பெயர். உண்மையை அறிவதற்கேற்ப மனிதன் உள்ளத்தில் உவகையும் அமைதியும் உண்டாகிறது. ஆதலால் இவ்விஷயத்தை அறிந்து வருகிற மாந்தர் சாந்தி பாடத்தை நன்கு பயன்படுத்துவார்களாக.

கேள்வி: (326) சமுதாயப்பணி செய்வதா? ஆன்மீக வளர்ச்சியில் ஈடுபடுவதா?

மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கமாக இருந்துவருகிறுன். ஆதலால் அவனுடைய வாழ்க்கையைத் தனக்கு மட்டும் உரியதாக்கலாகாது. இதற்குச் சான்றென்றை எடுத்துக்கொள்ளுவோம். மனிதன் உணவு உண்கிறுன். அது அலாதியாக நாவின் சுவைக்காகவும் ஜீரணக்கருவியின் பசியைப்போக்குவதற்காகவும் அமைவதன்று. பொருத்தமான உணவையும் பொருந்தாத உணவையும் நா சுவைப்பதன் வாயிலாக எடுத்துக்காட்டுகிறது. பொருந்திய உணவை ஜீரணக்கருவி நன்கு செமிக்கிறது. அங்ஙனம் செமித்த உணவு உடல் முழுதுக்கும் பயன்படுகிறது. உடலிலுள்ள உறுப்புக்கள் செய்கின்ற செயல்கள் அதனதன் தனி நலனுக்காக அமைந்ததல்ல. அவயவங்களின் செயல் உடல் முழுதுக்கும் பயன்படுகின்றது. அதே பாங்கில் மனிதனுடைய செயல் சமுதாயத்துக்கு நன்கு பயன்படவேண்டும். சுயநலமற்ற மனிதனே சமுதாயத்தில் நல்ல குடிமகனுகிறுன்.

இனி, சமுதாயத் தொண்டு வேறு, ஆத்ம சாதனம் வேறு என்று பாகுபடுத்தலாகாது. ஆருயிர்களனைத்தும் இறைவனிடத்திருந்து வந்தவைகள். உயிர்களனைத்தையும் கடவுள் மயமாகக் கருதுவது ஆத்ம சாதனம். அப்படிக் கருதினுல் மட்டும் போதாது. அந்தந்த உயிர்க்கேற்ற பணிவிடை பண்ணுவது ஆத்ம சாதனம். தனக்கென வாழாது பிறர் நலனுக்கெனவே வாழ்கின்றவன் பெருமகனுகின்றுன். பிறர்நலனைப் பிறர்க்கு உதவி செய்கிறேன் என்கிற எண்ணத்தோடு செய்யலாகாது. அப்படிச் செய்கின்ற நலனைக் கடவுள் வழிபாடாகக் கருதிச்செய்தல்வேண்டும். அத்தகைய தூய மனப்பான்மையும் தூயதொண்டும் ஒன்றுசேர்ந்து நலன் விளைவிக்கின்றன. தொண்டின் வாயிலாகவே சமுதாயம் மேன்மையடைகிறது. தூய மனப்பான்மை வாயிலாகத் தொண்டன் தெய்வத்துக்குச் சொந்தமாகிறுன். சமுதாய சேவையும் ஆத்ம சாதனமும் ஒன்றேயாம்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-169

945. वामकेश्वरी வாமகேச்வரீ-வாமகேச்வரம் என்னும் தந்த்ர சாஸ்திரத்தின் அதிஷ்டான தேவதையாயிருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

மக்கள் எல்லாரும் சர்வசாதாரணமாய் அனுஷ்டித்துவரும் கடவுள் வழிபாட்டுக்குத் தக்ஷிணாச்சாரம் என்பது பெயர். இத்தகைய வழிபாட்டினின்று மாறியமைந்துள்ள வழிபாட்டு முறை ஒன்று உளது. அதற்கு வாமாச்சாரம் என்பது பெயர். இம்முறையைக் கையாளுபவர்கள் மிகச் சிலர். மக்களுக்குப் பொருந்தாத வழிபாட்டுமுறை என்று தக்ஷிண மார்க்கத்தில் செல்லுகின்றவர்கள் அதைக் கண்டிருக்கிறார்கள். ஆனால் இக்காலத்திய ஆசாரியர்களுள் தலைசிறந்தவராகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இந்த வாமாச்சாரத்தை அனுஷ்டித்தவர் ஆவார். பரம்பொருளை அடைவதற்கு என்னென்ன மார்க்கங்கள் இருக்கின்றனவோ அவை யாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுஷ்டித்துப் பார்த்தவர் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சதேவராவார். தக்ஷிணாச்சார முறைகளை எல்லாம் அனுஷ்டித்தான பிறகு வாமாச்சார மார்க்கத்தையும் கையாண்டு பார்த்தவர் அவர். ஆனால் அவர் தாமே அந்த மார்க்கத்தைத் தேடிப்போனவர் அல்லர். அவர் அனுஷ்டித்த ஒவ்வொரு மார்க்கத்துக்கும் ஏற்ற குரு தெய்வாதீனமாகத் தாமாகவே பரமஹம்சருக்கு வந்து வாய்த்தனர். அப்படி வாய்த்தவர்களுள் பைரவிபிராமணி என்னும் அம்மையார் ஒருவர் ஆவார். சிவனைச் சார்ந்துள்ள சிவ கணங்கள் பைரவர்கள் என்னும் பெயர் பெற்றிருக்கிறார்கள். அதேவிதத்தில் அன்னை பராசக்தியைச் சார்ந்துள்ள பெண்பாலர்கள் பைரவிகள் என்னும் பட்டம் பெற்றுள்ளார்கள். அந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவர் பைரவிபிராமணி என்பவர். வாமாச்சாரத்தைக் கையாளுவதில் ஆண்பாலர்கள் போன்று பெண்பாலர்களும் தீவிரமாக அந்தச் சாதனத்தில் ஈடுபடுவதுண்டு. அப்படி ஈடுபட்டுச் சித்தியடையப்பெற்ற மாதரசி ஆவார் பைரவிபிராமணி. தாம் கையாண்ட சாதனங்கள் பூர்த்தியானபிறகு அந்த அம்மைக்கு அம்பிகையிடமிருந்து ஆதேசம் ஒன்று வாய்த்தது. அந்த ஆதேசப்படி பைரவிபிராமணி அம்மையார் மூன்று சாதகர்களுக்கு வழிகாட்டித் தரவேண்டியது. இருவருக்கு வழிகாட்டி விட்டார். மூன்றுவது சிஷ்யர் கங்கைக்கரையோரம் வசித்து வந்தார் என்பதும் ஆதேசம். அன்னவரைக் காண வேண்டுமென்று கங்கைக்கரையோரமுள்ள அம்பிகை ஸ்தலங்கள் பலவற்றை அந்த அம்மையார் தேடிப் பார்த்தார். கடைசியாகக் கல்கத்தாவுக்கு மேற்கே நான்கு மைல் தூரத்தில் தக்ஷிணேசுவரம் என்னும் அம்பிகையின் ஆலயத்தில் அந்த அம்மையார் ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சரைச் சந்தித்தார். இவர்தாம் தாம் தேடிய மூர்த்தி என்பதையும் அக்கணமே அவர் அறிந்துகொண்டார். உடனே இருவருக்குமிடையில் தாய்க்கும் சேய்க்கும் போன்ற தெய்விகத் தொடர்பு வாய்த்தது. இந்தப் பைரவிபிராமணி வாமாச்சார முறையை ராமகிருஷ்ணருக்குப் புகட்டியருளினர். ராமகிருஷ்ணரும் பக்தி சிரத்தையுடன் அந்த மார்க்கத்தில் ஈடுபட்டார்.

சாந்த பாவம், வீரபாவம், திவ்வியபாவம் என மூன்று பிரிவுகள் வாமாச்சார அனுஷ்டானத்தில் உள. அம்மூன்றனுள் சாந்த பாவம் தக்ஷிண ஆச்சாரத்துக்கும், வாம ஆச்சாரத்துக்கும் பொதுவானது. பரமஹம்சதேவர் சாந்த பாவத்தில் ஏற்கனவே கைதேர்ந்தவராக இருந்தார். ஆதலால் பைரவி பிராமணி அம்மையார் வீரபாவத்தின் கோட்பாடுகளையும் திவ்வியபாவத்தின் கோட்பாடுகளையும் ஒன்றன்பின் ஒன்றாக அனுஷ்டிக்கும்படி தம்முடைய மூன்றாவது சிஷ்யராகிய ராமகிருஷ்ணருக்கு வழிகாட்டியருளினர். ராமகிருஷ்ணரும் தகுதி மிக வாய்க்கப்பெற்ற சிஷ்யராகவிருந்து அந்தச் சாதனங்களின் ஒவ்வொரு பகுதியையும் வெற்றிகரமாகப் பூர்த்தி பண்ணினர்.

ஆக, நாம் அறிந்துள்ள சமயாச்சாரியர்

களுள் தக்ஷிண ஆச்சாரம், வாம ஆச்சாரம் ஆகிய இரண்டு முறைகளையும் வெற்றிகரமாகப் பூர்த்தி பண்ணியவர் ராமகிருஷ்ண பரமஹம்சர் ஒருவரே ஆவார். அம்பிகையின் திருவருளால் அமைந்துள்ள சாதனவகைகளுள் வாம ஆச்சாரமும் ஒன்று என்பதை உலகுக்கு எடுத்துக்காட்டுதற்கே அன்னை பராசக்தி தம்மைக் கருவியாக வைத்துக் கொண்டு வாம ஆச்சாரத்தை நிறைவேற்றி வைத்தாள் என்பது ராமகிருஷ்ணருடைய கொள்கை. ஆயினும் அந்த மார்க்கத்தைத் தம்முடைய சிஷ்யர்களுள் யாருமே கையாளக்கூடாது என்பது அவருடைய ஆணை. அவர் பகர்ந்ததாவது: ''ஒரு வீட்டுக்குள்ளே போக முன் வாயிலின் வழியாக நுழைவது சர்வசாதாரணம். அசாதாரணமாகப் புழைக்கடைவழியாகவும் நுழைந்து வீட்டுக்குள்ளே போகலாம்.'' அத்தகைய புழைக்கடைக்கு ஒப்பானது வாம ஆச்சாரம் என்பது அவருடைய கொள்கை.

வாமகேச்வரம் என்னும் நூல் விரிவாக வாம ஆச்சார அனுஷ்டானத்தை விளக்குகிறது. ஆதலால் அன்னை பராசக்தி தானே அந்தச் சாஸ்திரமயமாக அமைந்திருக்கிறாள் என்பது இந்த நாமத்தின் கருத்து.

946. **பஞ்சயஜ்ஞப்ரியா பஞ்சயக்ஞப்ரியா** — ஐம்பெரும் வேள்விகளில் விருப்பம் உடையவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

யக்ஞம், யாகம், வேள்வி ஆகிய சொற்கள் ஒரே கருத்தைத் தெரிவிக்கின்றன. பிரஜைகளைச் சிருஷ்டிபண்ணிய பிரஜாபதி அப்பிரஜைகளோடுகூடி யக்ஞத்தையும் சிருஷ்டி பண்ணினார். இந்த யக்ஞத்தின் வாயிலாக மக்களாகிய நீங்கள் முன்னேற்றமடைவீர்களாக. இந்தயக்ஞத்துக்குக் காமதேனு என்பது மற்றொரு பெயர். யக்ஞத்தின் உட்பொருளாவது: தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவனே த்விஜன் அல்லது இரு பிறப்பாளன். மற்று, தனக்கென வாழ்பவனோ நரர்களுள் அதமன் ஆகிறான். அத்தகைய அதமர்களை மக்கள் அல்லர், மாக்கள் என நூலோர் பிரித்து வைத்துப் பகர்ந்திருக்கின்றனர். தனக்கெனவாழாது தன் இனத்தின் நலத்துக்கென வாழும் பாங்குடைய சிற்றுயிர் வகைகள் இரண்டு இருக்கின்றன. அவைகள் எறும்பு இனமும் தேன் ஈ இனமும் ஆம். சுவை, ஊறு, நாற்றம் ஆகிய மூன்று இந்திரியங்களை உடைய எறும்பு அல்லும் பகலும் சுறுசுறுப்புடன் தன் இனத்தின் நலத்துக்காகவே பாடுபடுகிறது. அதே விதத்தில் ஐந்து இந்திரியங்களை உடைய தேன் ஈ பகல் முழுவதும் தன் இனத்துக்கெனவே உழைக்கிறது. இரவில் அதற்குக் கண்தெரியாமையினால் உறக்கமும் ஓய்வும் எடுத்துக்கொள்ளுகிறது. இந்த இரண்டு இனங்களையொட்டிய கோட்பாடு ஒன்று மக்களினத்திற்கு வந்துள்ளது. எறும்பைப் போன்று சுறு சுறுப்புடனும், தேன் ஈயைப்போன்று சுத்தமாயும் இரு என்பது அக்கோட்பாடாம். சுத்தமாயிருத்தல் தேன் ஈயிடம் உள்ள தனிச் சிறப்பாம். அது மலரில் அமரும், அல்லது தன் அடையில் அமரும். வேறு எங்கும் அது அமராது. அந்த இடங்கள் இரண்டும் பரிசுத்தமானவைகளே. பரமஹம்சதேவர் ஒன்று பகர்ந்துள்ளார்: 'மானுடா, நீ தேன் ஈ போன்று இரு. வீட்டு ஈ போன்று இருக்கவேண்டாம். வீட்டு ஈ கடவுள் வழிபாட்டுக்காக வைத்திருக்கும் தூய பொருளின் மீது உட்காரும். அடுத்தபடி அது மலத்தின்மீது போய் அமரும். மனிதனுடைய மனது அங்ஙனம் நல்ல எண்ணங்களிலும் கெட்ட எண்ணங்களிலும் மாறி மாறி ஊசலாடலாகாது.'

பஞ்ச மஹாயக்ஞம் என்பது ஐம்பெரும் வேள்வியாம். மக்களுள் மேலான இயல்புகளோடு கூடிப் பிறப்பெடுத்திருப்பவர்கள் இந்த ஐம்பெரும் வேள்விகளையும் விட்டுவிடாது நாள்தோறும் அனுஷ்டிக்கவேண்டும். பஞ்ச மஹா யக்ஞம் முறையே தேவ யக்ஞம், ரிஷி யக்ஞம், பித்ரு யக்ஞம், நர யக்ஞம், பூத யக்ஞம் எனப் பெயர் பெற்றுள்ளன. மானுடப் பிறப்பெடுத்திருக்கிற ஒருவன் தினந்தோறும் தேவ யக்ஞம் பண்ணவேண்டும். தியானம், ஜபம், போற்றுதல் முதலியன வாயிலாகக் கடவுள் வழிபாடு பண்ணுவது தேவ யக்ஞம் என்னும் பெயர் பெறுகிறது. மனது தாமிரப் பாத்திரத்திற்கு நிகரானது. நாள்தோறும் சுத்த

ஜலத்தைக்கொண்டு துலக்காவிட்டால் தாமிரப்பாத்திரம் துருப்பிடிக்கும். அதேபோன்று நாள்தோறும் முறையாகக் கடவுள் வழிபாடு செய்யாவிட்டால் மனது துருப்பிடித்துப் போம். இறைவணக்கம் அல்லது கடவுள் வழிபாட்டை முறையாகக் காலையிலும் மாலையிலும் செய்கின்றவன் தேவயக்ஞத்தில் ஈடுபட்டவனாகின்றான்.

ரிஷி யக்ஞம் என்பது இரண்டாவது யக்ஞம். தீர்க்கதரிசிகளும் சான்றோர்களும் ரிஷிகள் என அழைக்கப்பெறுகின்றனர். அன்னவர்கள் நூலோர் எனவும் இயம்பப் பெறுகின்றனர். அவர்கள் இயற்றியுள்ள நூல்களிலே கடவுள் தத்துவமும் பெருவாழ்வு தத்துவமும் புதைந்திருக்கின்றன. மக்களுடைய முன்னேற்றத்தையும் நலனையும் அனுசரித்தே அவர்கள் மேலான நூல்களையும் இலக்கியங்களையும் இயற்றியிருக்கின்றனர். ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம் என்பது கோட்பாடு. அந்த மேலான நூல்களைப் பக்தியோடும் சிரத்தையோடும் வாசிப்பதால் அல்லது வாசிக்கக் கேட்பதால் மனிதனுடைய மனது மேன்மையில் ஊறி வளர்கிறது. நாள்தோறும் அரைமணி நேரத்திற்குக் குறையாமல் சீலமும், யோகமும், பக்தியும், ஞானமும் நிறைந்துள்ள நல்ல நூல்களைச் சிரத்தையோடு ஆராய்ச்சி பண்ணுவது ரிஷி யக்ஞமாம். இந்த ரிஷி யக்ஞத்துக்குப் பிரம்ம யக்ஞம் என்பது மற்றொரு பெயர். சிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவன் நல்லார்களின் வாயிலாகவே உலகில் நலனை வழங்கி வருகிறான்.

பித்ரு யக்ஞம் மூன்றாவது இடம் பெறுகிறது. பெற்றோரைப் பேணுதல் என இது பொருள்படுகிறது. பெற்றோரைப் பேணும் சிறப்பு அலாதியாக நன் மக்களுக்கு உரியதாம். தந்தை தாய்ப் பேண் என்பது கோட்பாடு. பறக்கக் கற்றுக்கொண்டவுடன் தாய்ப் பறவைகளும் குஞ்சுகளும் பிரிந்து போகின்றன. மக்கள் அங்ஙனம் செய்யலாகாது. உடல் தாங்கியிருக்கும் தாய்க்கும் தந்தைக்கும் அவர்களுடைய செல்வர்களும், செல்விகளும் காயத்தால் பணிவிடை பண்ண வேண்டும். அப்படிப் பண்ணுகிற பணிவிடையே பித்ரு யக்ஞம் எனப் பெயர் பெறுகிறது. இனி, மரணத்தின் வாயிலாக உடல் மறைந்துபட்டுப்போன தாயும் தந்தையும் எந்த உலகில் இருந்தாலும் அவர்கள் நலமுற்று இருப்பார்களாக என்று எண்ணுகிற நல்ல எண்ணமும் பித்ரு யக்ஞம் என்னும் பெயர் பெறுகிறது.

ஐம்பெரும் வேள்விகளுள் நரயக்ஞம் அல்லது மானுட்சேவை நான்காம் இடம்பெறுகிறது. மனிதனை மனிதன் கண்ணியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறான். பெருமையும் சிறுமையும் தான் தர வருமே என்பது கோட்பாடு. பிறரைப் பெருமைப்படுத்துகின்றவன் தானே பெருமைக்குரியவன் ஆகின்றான். அதற்கு நேர்மாறாகப் பிறரைத்தாழ்த்துபவனும் துன்புறுத்துபவனும் தானே க்ஷீணித்துப்போகிறான். நரர்களை நாராயணசொரூபங்களாகக் கருதவும், அவர்களுக்குப் பணிவிடை பண்ணவும், அவர்களை முன்னணிக்குக்கொண்டு வரவும் மேல் நிலையில் இருப்பவர்கள்கடமைப்பட்டுஇருக்கிறார்கள். தீண்டத்தகாதவர்கள் என்று ஒரு கூட்டத்தாரை ஒதுக்கி வைத்தது நம் நாடு செய்துள்ள பெரிய பிழையாகும். இக்கொடிய கொள்கைக்குப்பிரமாணம் எந்தச்சாஸ்திரத்திலும் இல்லை. நாடு செய்த இப்பிழைக்குக் கழுவாயாகப் பரமஹம்ஸதேவர் சேரிக்குச் சென்று அச்சேரி மக்களை அம்பிகையின் குழந்தைகளாகக் கருதிப்பணிவிடை பண்ணினார். இக்கொடிய பழக்கத்தை அகற்றுதற்கு மகாத்மா காந்தி உயிரைக் கொடுத்துப் பாடுபட்டார். அப்பெருமக்கள் காட்டியுள்ள நன்னெறியை நாம் கடைப்பிடிக்கவேண்டும்.

பூதயக்ஞம் ஐந்தாவது இடம்பெறுகிறது. மனித இனம், விலங்கு இனம், பறவை இனம் ஆகியவைகள் இவ்வுலக வாழ்க்கையில் ஒன்றோடொன்று இணைந்திருக்கின்றன. ஆகையினால்எவ்வுயிர்க்கும் மனிதன் தீங்கு செய்யலாகாது.இனிக் கால்நடைகளை மக்களுக்குநிகராகக் கருதி அவைகளை நன்கு பேணவேண்டும்.

இந்த ஐம்பெரும் வேள்விகளை முறையாகக் கையாண்டு அவைகளை நன்கு நிறைவேற்றுவது அன்னை பராசக்தியின் சீரிய வழிபாடாகும்.

ஆத்ம போதம்

(திரு. V. S. நரசிம்மன்)

आत्माऽवभासयत्येको बुद्ध्यादीनीन्द्रियाण्यपि ।
दीपो घटादिवत्स्वात्मा जडैस्तैर्नावभास्यते ॥

बुद्धि आदीनि (புத்தி ஆதீனி) புத்தி முதலிய इन्द्रियाणि (இந்திரியாணி) இந்திரியங்களை आत्मा (ஆத்மா) ஆத்மா एकः (ஏக:) ஒன்றே अवभासयति (அவபாஸயதி) பிரகாசிக்கச் செய்கின்றது. दीपः (தீப:) விளக்கு घटादिवत् (கடாதிவத்) குடம் முதலியவற்றைப்போல் तैः जडैः (தை: ஜடை:) அந்த ஜடப்பொருள்களால் आत्मा (ஆத்மா) ஆத்மா न अवभास्यते (ந அவபாஸ்யதே) பிரகாசிக்கச் செய்யப்படுவதில்லை.

''குடம் முதலிய பொருள்களைத் தீபம் பிரகாசிக்கச் செய்வதுபோல், புத்தி முதலிய புலன்களை ஆத்மா பிரகாசம் அடையச் செய்கின்றது. மாறாக, ஜடப்பொருள்களாகிய இவற்றால் ஆத்மா பிரகாசிப்பது கிடையாது.''

விளக்குச் சுயம்பிரகாசம். அது போன்றது ஆத்மா. அதனுடைய சக்தியால்தான் அனைத்தும் இயங்குகின்றன. இந்திரியங்களில் தலையாய புத்தியைக் குறிப்பாகச் சுட்டிக் காட்டி, அதனையே 'ஜடம்' என்று இந்தச் சுலோகம் உணர்த்துவதின் மூலம், ஏனைய புலன்கள் அற்பமானவை என்று மறைமுகமாகக் குறிப்பிடுகின்றது. ''கண் எதைப் பார்க்க முடியாதோ, ஆனால் எதனுடைய சக்தியால் கண் ஏனைய பொருள்களைப் பார்க்கும் வலிமை பெறுகின்றதோ, அதையே பிரம்மம் என்று அறிவாய். அறியாமையால் மக்கள் எந்தத் தேவதைகளை உபாசிக்கின்றனரோ அவை அல்ல'' என்று கேன உபநிஷத் விளக்கும் கருத்தை இப்பாட்ல் உணர்த்துகின்றது.

स्वबोधे नान्यबोधेच्छा बोधरूपतयात्मनः ।
न दीपस्यान्य दीपेच्छा यथा स्वात्मप्रकाशने ॥

यथा (யதா) எவ்வாறு दीपस्य (தீபஸ்ய) விளக்கிற்கு अन्य दीप इच्छा (அந்ய திப இச்சா) வேறு விளக்கின் தேவை न (ந) இல்லையோ बोधरूपतयात्मनः (போதரூபதயாத்மன:) அறிவு சொரூபமாக உள்ள ஆத்மா स्वात्म प्रकाशने (ஸ்வாத்ம பிரகாசனே) தன்னை வெளிக் காட்டிக்கொள்வதற்கு स्वबोधे (ஸ்வபோதே) தன்னுடைய பேருணர்விற்கு अन्य बोध इच्छा (அந்ய போத இச்சா) வேறு அறிவின் தேவையை न (ந) வேண்டுவது கிடையாது.

''தன்னை வெளிப்படுத்திக்கொள்ளத் தீபம் ஒன்று வேறு தீபத்தின் துணையைப் பெறுவதில்லை. அதுபோன்று போதமயமான ஆத்மா தன்னைப் பிரகாசப்படுத்திக்கொள்ள வேறு போதத்தின் துணையை வேண்டுவதில்லை.''

'ஆத்மா ஸ்வயம் பிரகாசம்' என்ற தத்துவத்தை எளிய உதாரணத்தால் இந்தச் சுலோகம் விவரிக்கிறது. ஒரு விளக்கை அறிய வேறு விளக்குத் தேவை இல்லை. அப்படியே ஆத்மாவை உணர்வதும் ஆகும். மாறாக, வேறு போதம் அவசியம் என்று கொண்டால், அதனை அறிய மற்று ஒன்று தேவைப்படும். இங்ஙனம் செய்யும் வாதம் अनावस्था, முடிவு என்பது அற்ற குற்றத்தை உடையது.

தன்னை உணர்ந்து கொள்ள வேறு துணை வேண்டுமோ? प्रज्ञा-ப்ரக்ஞை என்பதே தன் உணர்வு தானே! அடர்ந்த மை இருட்டில் பொருள்கள் காணப்படமாட்டா. தனது சரீரமும் காட்சிக்கு ஆளாகும் பொருள் அன்று எனினும் 'நான் இருக்கிறேன்' என்ற உணர்வு நிலைத்து இருக்கின்றது அன்றோ? ஒரு கிராமத்தில் வயது முதிர்ந்த தம்பதியினர் வாழ்ந்து வந்தனர். கணவன் நோய் வாய்ப்பட்டார். கிழவி எங்கோ அலைந்து மருத்துவரை அழைத்து வந்தாள். கிழவனாரைப் பரிசோதனை செய்தபின் டாக்டர் கூறினார்: 'இவருக்குப் பிரக்ஞை போய் விட்டது.' தன்னிடமிருந்த சக்தியை எல்லாம் திரட்டி அப்பெரியவர் மெலிந்த குரலில் கூறினார்: 'இல்லை, நான் உயிருடன் தான் இருக்கின்றேன்.' கிழவி உடனே கூறினாள்: 'நீ சும்மாயிரு, டாக்டருக்குத் தான் தெரியும்!' தான் பிரக்ஞையோடு, போதத்தோடு, உயிருடன் இருப்பதை டாக்டர் சான்றிதழைக் கொண்டு அறியத் தேவை

யில்லை.

அனைத்திற்கும் ஆதாரமாகத் திகழும் ஜோதி ஸ்வரூபமே நமது நித்திய நிலை என்பதை ஆச்சாரியார் உணர்த்துகின்றார்.

குருவும் சிஷ்யனும் உரையாடுவது போல் ஒரு பாடல் அமைத்துள்ளார். 'கிம் ஜ்யோதி: தவ—உனக்கு வெளிச்சமாக இருப்பது எது?'—குரு. 'பானுமானஹனி மே ராத்ரௌ ப்ரதீபாதிகம்—பகலில் சூரியன்; இரவில் எண்ணற்ற தீப வரிசைகள்' — சிஷ்யன். 'ஸ்யாதேவம். ரவி தீப தர்சனவிதௌ கிம் ஜ்யோதிராக்யாஹி மே—வெகு நன்று. சூரியனோ, விளக்கோ இல்லாதபோது உனக்கு ஜோதி யாது எனக் கூறுவாயாக?'—குரு. 'சக்ஷு: என்னுடைய கண்கள்?'—சிஷ்யன். 'தஸ்ய நிமீலனாதி ஸமயே கிம்-கண்ணை மூடிக் கொண்டால், பின் எது? 'தீ: எனது புத்தி'—சிஷ்யன். 'தியோ தர்சனே கிம்? புத்தியைப் பார்ப்பதற்கு எது ஜ்யோதி?'—குரு. 'தத்ர அஹம்-அங்குப் பார்ப்பவன் நான்'—சிஷ்யன். 'அத: பவான் பரமகம் ஜ்யோதி:—எனவே நீங்கள் தானே எல்லாவற்றிலும் சிறந்த ஜ்யோதி' என்று இறுதியில் குரு வினவுகிறார். சிஷ்யனும், மனத்தெளிவுடனும், மலர்ச்சியுடனும் அதை ஏற்றுக்கொள்கின்றான்: 'ததஸ்மி ப்ரபோ,-பிரபுவே, அந்த ஜ்யோதியே நான்.'

தன்னைத் தவிர்த்து மெய்ப்பொருள் வேறு எதுவும் இல்லை என்ற கருத்தை இந்தச் சுலோகம் மிகவும் அழகாகக் குறிப்பிடுகின்றது.

निषध्य निखिलोपाधीन्नेति नेतीति वाक्यतः ।
विद्यादैक्यं महावाक्यैः जीवात्म परमात्मनोः ॥

निखिल उपाधीन् (நிகில உபாதீன்) எல்லா உபாதிகளையும் नेत नेति इति वाक्यतः (நேதி நேதி இதி வாக்யத:) 'இது அன்று இது அன்று' என்ற வாக்கியத்தால் निषिध्य (நிஷித்ய) விலக்கி जीवात्म (ஜீவாத்ம) ஜீவன் परमात्म (பரமாத்ம) பரமன் ஆகிய இரண்டின் ऐक्यं (ஐக்கியம்) ஒன்றாகிய தன்மையை महावाक्यैः (மஹா வாக்யை:) மஹா வாக்கியங்களின் மூலம் विद्यात् (வித்யாத்) அறிந்துகொள்ளவேண்டும்.

தானே பிரகாசிக்கும் ஆத்மாவை நாம் உணராது இருப்பது எப்படிச் சாத்தியம்? உபாதியின் சேர்க்கையால் நாம் 'உள்ளதை உள்ளபடி' உணராது இருக்கின்றோம். சூரியனை மேகமும், வைரத்தைத் துணியும், தெள்ளிய நீரைப் பாசியும் மறைக்கின்றன. 'ஒரு பொருள் அது அல்லாத வேறு ஒன்றாகத் தோன்றுவதற்குக் காரணமாக இருப்பதே உபாதி.' உள்ள ஆகாசம் ஒன்றே; எனினும் அதைக் 'கட ஆகாசம், மட ஆகாசம்' என்று பிளவுபடுத்திக் கூறுவதற்குக் காரணமாக அமையும் பானையும், வீடும் ஆகாசத்திற்கு உபாதிகள் ஆகின்றன. உபாதியைக் களைவதே சாதனையின் லட்சியம். இதனை ஸமுதாய உபாதி (பரிபூரண பிரம்மத்தை மும்மூர்த்திகளாகக் காண்பது), வ்யக்தி உபாதி (பரிபூரணத்தைத் தனது சரீரத்தில் இலங்கும் ஆத்மா என்று காணல்) எனப் பிரித்தும் கூறுவர். அதேபோன்று ஸ்தூல சூக்ஷ்ம காரண உபாதிகள் முறையே நனவு, கனவு, கனவற்ற உறக்கத்தில் உண்டாகின்றன.

மெய்ப்பொருளை 'இது' என்று உணர்த்த முடியாது. ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அது அடங்காது. **"The Finite always puts a metaphysical block."** எல்லையற்றதாகவும், அதே சமயம் ஒரு வர்ணனைக்கு உட்பட்டதாகவும் ஒரு பொருள் இருக்க முடியாது. நம் இந்திரியங்களுக்கும், அறிவுக்கும் எட்டியது ஒரு நிலை; அதீந்திரியமாகப் புத்திக்கு அகோசரமாக இருப்பது வேறு நிலை. **Kant** என்ற ஜெர்மானிய தத்துவ அறிஞர் இந்த இரண்டு நிலைகளையும் **Phenomena and Noumena** என்று குறிப்பிடுகின்றார். பேச்சும், வர்ணிப்பும் **phenomena** மட்டுமே. **Noumena** என்ன என்று கேட்டால் 'இது இல்லை' என்று எதிர்மறையாகத்தான் கூற முடியும். பிரபஞ்சம் வெங்காயம் போன்றது. ஒவ்வொரு சருகாக உரித்துக்கொண்டே வந்தால் இறுதியில் வெங்காயம் என்ற பதத்திற்கு இலக்காக எதுவும் இருக்காது. அதுபோல் உபாதிகளைக் களைந்து 'ந இதி, ந இதி' என்று ஆராய்ந்தால், இறுதியில் நிருபாதிக, உபாதியற்ற நிலையை உணரலாம். உபாதியற்ற நிலையே ஜீவ பிரம்ம ஐக்கிய நிலையாகும். ஜீவ—பிரம்ம ஐக்கியமே முடிந்த நிலை.

ஜயதேவர் சரிதம்

(317ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருடர்கள் பூமியில் அழுந்தி, இறந்து போன செய்தியை அரசன் ஜயதேவருக்குத் தெரிவித்தான். மஹாபாதகம் செய்த அந்தத் திருடர்கள் அழிந்து போனுர்கள் என்ற விஷயத்தை அரசன் மகிழ்ச்சியுடன் ஜயதேவருக்குத் தெரிவித்தான். ஜயதேவர் உள்ளம் அரசனுடைய உள்ளத்திற்கு முற்றும் மாறுபட்டதாக இருந்தது. ஜயதேவர் அத்திருடர்களைப் பரமசாதுக்களாகக் கருதினுர். ''மஹாபதிவிரதையாகிய சீதாபிராட்டிக்கு நிலம் தன்னிடம் இடம் கொடுத்தது. அவர்கள் சாதுக்கள் ஆகையால் அவர்களுக்கும் பூமி தேவி தன்னிடம் இடம் கொடுத்திருக்கிருள். அவர்களைக் குறை கூறவேண்டாம். பிறரை நிந்திப்பது கூடாது. அப்படி நிந்திப்பவன் உத்தமனுக முடியாது. அந்தச் சாதுக்கள் உத்தமர்கள். தரையில் அழுந்திப்போய்விட்டார்கள் என்றுசொல்லுகின்றீர். நான் இனி என்ன செய்வேன்?'' என்று ஜயதேவர் வருந்தினுர்.

அரசன் அவர்கள் அழுந்திய இடத்தைப் போய்ப் பார்க்கவேண்டும் என்று விரும்பிய பொழுது ஜயதேவர் தாமும் உடன் வருவதாகக் கூறினுர். புண்ணியவான்கள் சமாதி அடைந்த இடம் பரமபதம் என்று சொல்லப்படும். எனவே அவ்விடத்தைத் தரிசிக்க வேண்டியது அவசியம். விரைவில் அங்குப் போவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று அரசரைக் கேட்டுக்கொண்டார். ஜயதேவரும் அரசரும் புறப்பட்டுத் திருடர்கள் பூமியில் அழுந்திப்போன இடத்திற்குச் சென்றுர்கள். ஜயதேவர் அந்த இடத்தை அடைந்து அவ்விடத்தைப் பார்த்ததும் மிகவும் துக்கப்பட்டார். அரசனும் ஜயதேவர் துக்கத்தில் பங்குகொண்டான். இருவரும் சிவபெருமானைக் குறித்துத் துதிசெய்தனர். சிவபெருமான் அவர்களுக்குக் காட்சி அளித்தார். அரசன் ஜயதேவரின் கைகால்கள் வெட்டுப்பட நேர்ந்ததற்குக்காரணம் என்னவென்று கேட்க, சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினுர்: ''வேந்தனே, கர்மம் யாரையும்விடாது. ஜயதேவர் அவர் கர்மபலனை அனுபவித்துவிட்டார். இனி அவர் பட்டணத்திற்குள் பிரவேசித்ததும் பழையபடி அவருக்குக் கை, கால்கள் வளர்ந்துவிடும். மற்றவர்களுக்கு நல்வாழ்வு காட்டி, நலமுடன் வாழ்ந்து ஸ்ரீமந் நாராயணன் திருவடியை அடைவார்.'' ஜயதேவரைநோக்கி, ''உமக்கு என்ன வரம்வேண்டும்?'' என்று சிவபெருமான் கேட்டார். ''பூமியில் அழுந்திப்போன அந்தச்சாதுக்கள்நற்கதி அடைவதே எனக்கு வேண்டிய வரம்'' என்றுர் ஜயதேவர். ''உம்முடைய கிருபையால் அக்கள்வர்களின் பாவம் தீர்ந்தது. அவர்களும் நற்கதி அடைந்தார்கள். நீர் அவர்களைப்பற்றிக் கவலைப் படவேண்டியதில்லை'' என்றுர் சிவபெருமான். ஜயதேவருடைய கருணையையும், அரசனுடைய குரு பக்தியையும் அங்கிருந்தவர்கள் பார்த்துப் பேராச்சரியம் அடைந்தார்கள். ஜயதேவரையும், அரசரையும் வாழ்த்திஞர்கள். அரசனும் மிக்க மகிழ்ச்சியுடன் தேரின்மீது ஜயதேவரை ஏற்றிக்கொண்டு நால்வகைச்சேனைகளும் சூழத் தன் நாட்டிற்குப் புறப்பட்டான்.

நாட்டில் அரசனுடைய மனைவி, பத்மாவதியினிடம் போய் ஞானேபதேசம் செய்யும்படி பணிந்து வேண்டிக்கொண்டாள். ''அரசியே, நான் ஞான மார்க்கம் ஏதொன்றும் அறியேன். எனக்குத்தெரிந்ததை நான் கூறுகின்றேன். ஸ்திரீகளுக்குக் கணவனே தெய்வம். அவர்களுக்குச் செய்யும் பணிவிடை மேலான பூஜை ஆகிறது. பதிசொல் தவருது நடப்பது பரகதி அடைவதற்கு வழியாகும். பதிவிரதத் தன்மையைக் காப்பதே மேலான ஞானம். பதியின் திருநாமத்தை உச்சரிப்பதே பிரம்மத்தியானம். பதி இறந்த அக்கணமே தன்னுயிரைவிட்டு விடுதல் மோட்சம் அடைவதற்கு உபாயம். கற்பின் பெருமையே பெருமை. கற்புடையவள் காமதேனுவிற்கு இணையாவாள். கற்புடையவர்களிடம் திருமூர்த்திகளும் அஞ்சுவார்கள். சாவித்திரி தன் கற்பால் இறந்த

கணவனை எழுப்பினாள், சீதாபிராட்டி கற்பினால் தன்னைக் காப்பாற்றிக்கொண்டாள். அனசூயாதேவி கற்பினால் இரும்புக் கடலையைப் பொரி ஆக்கினாள், மும்மூர்த்திகளையும் பாலர்கள் ஆக்கினாள். ஆகையால் கற்பைக் காப்பாற்றவேண்டும். பெண்களுக்குப் பதியே தெய்வமாகும்'' என்று பத்மாவதி அரசன் மனைவிக்கு அறிவுரை கூறினாள். ராஜபத்தினி பகர்ந்ததாவது: ''தாங்கள் கூறியபடியே கணவனுடன் எதிர்த்துப் பேசாமலும், கணவனுக்குச் சேவை செய்வதில் கூசாமலும், கணவனைத் தெய்வமாகப் பாவித்துப் பக்தியுடன் பணிவிடை செய்தலும், பதிவிரதத் தன்மையைக் காப்பாற்றுதலும் உடைய ஒரு பதிவிரதை, பதி இறந்தவுடன் தன்பிராணனை விடுவதென்பதுஇயலாத காரியம். அப்படி இருப்பவர்கள் இவ்வுலகில் இல்லை. சொல்லளவில் இருக்கலாம். செயல் அளவுக்குக் கொண்டு வருவது அருமை.'' பத்மாவதி நகைத்துப் பகர்ந்ததாவது: ''நாக பாசத்தால் இராமலக்ஷ்மணர்கள் இறந்தார்கள் என்று கேட்டவுடன் சீதை தன் பிராணனை விட எத்தனித்தாள் அல்லவா? இராவணன் இறந்ததும் அவன் உடல்மேல் விழுந்து புலம்பி உடனே மண்டோதரி உயிர் விட்டுவிடவில்லையா? பதி இறந்தார் எனக்கேட்டு உயிருடன் இருப்பவள் அதம ஸ்த்ரீ. உடன்கட்டை ஏறுபவள் மத்திம ஸ்த்ரீ. உடனே உயிர்விடுபவள் உத்தம ஸ்த்ரீ'' என்று பகர்ந்தாள். அரசனுடைய மனைவி பத்மாவதி கூறியபடி நடந்துகொள்ளுகிறாளா? என்பதைச் சோதிக்க விரும்பினாள். ராணி தன் அரண்மனைக்கு வந்ததும் தோழிமார்களை அழைத்தாள். ஒரு பறவையைக் கொன்று அதன் ரத்தத்தில் ஒரு வஸ்திரத்தைத் தோய்த்து வரச் சொன்னாள். அதை ஒரு தோழியிடம் கொடுத்து, ''இதைக்கொண்டுபோய்ப்பத்மாவதியிடம் கொடு. ஜயதேவரைப் புலி அடித்துக் கொன்றுவிட்டது. அதனால் அவருடைய வஸ்திரம் ரத்தக்கறை பட்டுவிட்டது. இந்த வஸ்திரம் அது ஆகும். இங்ஙனம் பத்மாவதியிடம் கூறு'' என்றாள் ராணி. தோழி பத்மாவதியிடம் செல்வதற்கு முன்பு, ராணி பத்மாவதியிடம் சென்று பகர்ந்ததாவது: ''தாயே, ஜயதேவரும் அரசனும்காட்டிற்குப் போனார்கள். காட்டில் கொழுத்த புலி ஒன்று அவர்கள் மீது பாய்ந்ததாகச் செய்தி வந்தது. அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பார்த்து வருவதற்குக் காட்டுக்கு ஒரு தாதிப்பெண்ணைத் தூதுவர்களுடன் அனுப்பியிருக்கிறேன். அவள் விரைவில் செய்தியைக் கொண்டு வருவாள்.'' இதைக் கேட்டதும் பத்மாவதி மனக்குழப்பம் அடைந்தாள். கண் கலங்கினாள். அச்சமயம் ஒரு தாதி ரத்தம் தோய்ந்த வஸ்திரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு வந்து பத்மாவதியின்முன் மௌனமாக நின்று கொண்டிருந்தாள். ராணி அங்கிருப்பதைப்பார்த்த தாதி, ராணி தனக்கு உத்திரவிட்டு இருப்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும் என்று தீர்மானித்தாள். எனவே, அவள் ஜயதேவ சுவாமிகளைப் புலி கொன்று விட்டது என்று கூறி அழுதாள். அவ்வார்த்தையைக் கேட்டதும், ''சங்கர மஹாதேவா, கைலாசவாசா, ஸர்வேஸ்வரா, கருணாகரா, புருஷோத்தமா, வேணு கோபாலா, ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா'' என்று துதித்த வண்ணம் பத்மாவதி பிராணனை விட்டாள். பத்மாவதியின் பிராணன் ஜோதி மயமாக ஆகாய மார்க்கமாய்க் கிளம்பிச் சென்றது. ராணி ஸ்தம்பித்துப் போய் ஒன்றும் தோன்றாதவளாக அசைவற்று நின்றாள். தான் செய்த தவற்றை உணர்ந்து பத்மாவதியைக் கொன்ற பாவியாகி விட்டேன் என்று மூர்ச்சை அடைந்து வீழ்ந்து விட்டாள். தாதிமார்கள் ராணியும் இறந்து விட்டாள் என்று கைகால்கள் நடுக்கம் எடுக்க நின்று கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்தில் ராணி மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். அங்குள்ள பெரியவர்கள் ராணியைத் தேற்றினார்கள். ஜயதேவர் பத்மாவதியை எழுப்பிவிடுவார் என்றும், உங்கள் பாபத்தைப்போக்கி விடுவார் என்றும் ராணியிடம் கூறினார்கள். ராணி பத்மாவதியின் சடலத்தை ஓர் அறையில் கெட்டுப் போகாதவாறு பாதுகாப்பாக வைத்து அரசன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

(தொடரும்)

குமரகுருபரர்

(வித்துவான் ஆதி. பாலசுந்தரன், M. A.)

சிறிய கொடி ஒன்று தனக்கு அருகில் இருக்கின்ற பெரிய மரத்தைச் சார்ந்து, அதனைப் பற்றிக் கொண்டு சுற்றிச்சுற்றி மேன்மேல் உயர்ந்து கொண்டே போகிறது. வேறு எந்த இடையூறும் அந்தக் கொடிக்கு ஏற்படாது. அப்படியில்லாமல் போனால் கொடிக்கு உயர்வு இல்லை. வேறு தீங்கு ஏற்படலாம். ஆடு மாடுகள் தின்று வீணாக்கலாம். போகின்றவர், வருகின்றவர்களின் காலில் மிதிபட்டு அழிந்து போகலாம்.

அதுபோன்று சிறியவர்கள் அனுபவத்திலும், அறிவிலும், பண்பிலும், ஒழுக்கத்திலும் மேலோராகிய சான்றோர்களைச் சார்ந்து அவர்களைப் பணிந்து போற்றி, அவர்கள் வழி ஒழுகுவார்களேயானால், அவர்களுடைய வாழ்க்கையில் அவர்கள் முன்னேற்றம் அடையலாம். எவ்விதத் தீங்கும் ஏற்படாது. சான்றோர்களின் வாக்கைப் புறக்கணித்துத் தான்தோன்றித் தனமாக நடப்பார்களேயானால், வாழ்க்கையில் படாதபாடு படுவார்கள். அதை அவர்களே வாழ்க்கையில் உணர்ந்து பார்க்கவேண்டிய சந்தர்ப்பம் வரும்.

''குணம் பிறிது ஆதல்''-இயல்பான நல்ல குணத்திலிருந்து மாறுபாடு கொள்ளுதல் மனித இயல்புக்கு ஒவ்வாதது ஆகும்.

ஒரு குணத்திற்கு மாறக்கூடிய தன்மை உண்டு என்பது இயல்பாக இருந்தாலும் கூட அந்தக் குணத்தை மாற்றுவது மனம் ஆகையால், மனதின் உணர்வைப் பொறுத்து மனித சுபாவம் மாறுகிறது. ஆனால் அம்மாதிரி நல்ல மனித சுபாவத்தை மாற்றுவது இலட்சணமாகாது.

நல்ல குணத்தை வலிய உண்டாக்கிக் கொள்ளுவதும், அப்படிப் பெற்ற குணத்தை இழந்துவிடாமல் பேணிக்கொள்ளுவதும் மனிதனுக்கு இயல்பாக இருக்கவேண்டும். விலங்குகளுக்கு நல்ல சுபாவம் இருக்கும் என்றோ, அந்த நல்ல குணத்தை அவை ஒரு நாளும் விட்டுவிட மாட்டா என்றோ சொல்ல இயலாது.

மனிதன் அப்படிப்பட்டவனல்லன். மனிதனுக்கு இயல்பாக நல்ல பண்பு அமைந்துள்ளது. அந்த நல்லபண்பை, கடவுள்கொடுத்த அருங்கொடையைத் தனது மனதின்மூலம் கெடுத்துக்கொள்கிறான்.

மனிதனுக்கு அறவுரை சொல்லவந்த நம் முன்னோர்கள், விலங்குகளிடத்திலும், பறவைகளிடத்திலும் அமைந்துள்ள நற்பண்புகளை நமக்கு எடுத்துக்காட்டியிருப்பது இங்கு நினைக்கத் தக்கது. மனிதனுக்கு எல்லா வகையிலும் உதவி செய்கின்ற விதத்தைப் பல புராணங்கள் வாயிலாகவும் இயம்பியுள்ளார்கள்.

நல்ல குணம் உடையவர்கள் யாராக இருந்தாலும் சரி; அது அவர்களுக்கும் நல்லது, மற்றவர்களுக்கும் நல்லது. எனவே, மனிதர்கள் தங்களிடத்திலுள்ள நல்ல இயல்புகளை எக்காரணத்தைக் கொண்டும் ஒரு நாளும் மாற்றிக்கொள்ளக்கூடாது. அங்ஙனம் மாற்றாதிருப்பார்களானால், அவர்கள் வாழ்வில் முன்னேற்றம் அடையலாம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தம்முடைய ஊமைத்தன்மை நீங்குவதன் பொருட்டுத் திருச்செந்திலாண்டவனை வழிபட்டுக் ''கந்தர் கலிவெண்பா'' என்னும் அருள்நூலைப் பாடியருளினார். அது ஒரு பாராயண நூல்.

மதுரைக்கு எழுந்தருளிய சுவாமிகள் ஸ்ரீசொக்கலிங்கப் பெருமானைப் போற்றிப் பரவினார். ஸ்ரீமீனாட்சி அம்மையைப் புகழ்ந்து அருட்பாடல்களைப் பாடினார்.

தில்லை என்னும் சிதம்பரத்திற்கு விஜயம் செய்தபொழுது ஸ்ரீநடராஜப் பெருமான் மீது புகழ்மாலை புனைந்து ஏத்தினார்.

ஸ்ரீசுவாமிகள் வடதேச யாத்திரை மேற்கொண்டு, காசி என்னும் வாரணாசி புண்ணிய ஸ்தலத்தைச் சென்றடைந்தார்.

இப்படி நிலைமை ஆகும் என்று அறிந்து கொள்ளாமல், இயல்பாக இடம்கொடுத்து ஆட்சி உரிமையையும் ஏற்றுக்கொண்ட மக்கள் வாழ்ந்த காலத்தில், வாரணாசிப் பகுதியை முஸ்லீம் மன்னன் ஒருவன் ஆட்சி

செய்து வந்தான்.

நம் சுவாமிகள் சென்ற காலம் அவன் ஆட்சி செய்த காலம். கங்கை மாதா புனிதப்படுத்தும் வாரணாசிக் கங்கைக் கரையில் சைவம், தமிழ் இரண்டும் தழைத்து இனிது பரவுவதற்கு ஏற்ற திருமடம் ஒன்றை ஸ்தாபிக்க விரும்பினார். சைவத்தின் சிறப்பை இனிய தமிழின் வாயிலாக எடுத்து ஓத விழைந்தார். மடம் அமைப்பதற்கு ஏற்ற திருவிடத்தை மன்னனிடம் பெறுவதற்கு நினைத்தார்.

மன்னனுக்குத் தமிழ்மொழி தெரியாது. சுவாமிகள் அப்போது இந்துஸ்தானி மொழி அறியாதவர். எனவே, இருவரும் கலந்து பேச வாய்ப்பில்லை. இந்த நிலையில் இந்துஸ்தானி மொழியைச் சுவாமிகள் அறிந்து கொள்ள முயன்றார்.

இறைவனை ஆண்வடிவமாகவும், பெண்வடிவமாகவும் அப்பனாகவும், அம்மையாகவும் வழிபட்டு வரும் வழக்கம் தொன்று தொட்டு மரபாக நம்மிடையே அமைந்துள்ளது. "இறைவி இறைவன் இரண்டும் ஒன்றாகித் தாயாய்த் தந்தையாய்ச் சக்தியும் சிவனுமாய்'' என்று பாரதியார் பாடுகிறார்.

அம்பிகையை நினைத்து வழிபடுவது சக்தி வழிபாடு. சுவாமியை நினைத்து வழிபாடு செய்வது சிவ வழிபாடு ஆகும்.

அம்பிகையை வீரம் நிறைந்தவளாக எண்ணி வணங்கும்போது அவள் மலைமகளாகக் காட்சி தருகிறாள். செல்வம் நிறைந்தவளாகக் கருதிப்போற்றும் போது திருமகளாக விளங்குகிறாள். கல்வியை வாரி வழங்குபவளாக நினைக்கும்போது கலைமகளாக வெளிப்படுகின்றாள்.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி அடைய விநாயகப் பெருமானை முதலில் வழிபடுகின்றோம். பிள்ளையார் சதுர்த்தி விநாயகருக்கு உகந்த தினம். விநாயக சதுர்த்தியை அடுத்து வருவது கலைமகள் விழா.

தேவியர் மூவருக்குமாக நடாத்தப் பெறுகிற விழா நவராத்திரி விழா ஆகும். நவராத்திரி விழாவில் சரஸ்வதி பூஜையும், ஆயுத பூஜையும் சிறப்பிடம் பெறுகின்றன.

நவராத்திரிப் பெருவிழா வெகு விசேடமாகத் தசரா என்னும் பெயரில் கர்நாடகாவில் கொண்டாடப்படுகிறது. அம்மாநிலத்தில் அது தேசிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

வட மாநிலங்களில் துர்க்காபூஜை என்னும் பெயரில் கொண்டாடப்படுகிறது. வங்காளத்தில் காளி வழிபாடு சிறப்பாக நடாத்தப்படுகிறது.

தமிழ்நாட்டில் நவராத்திரிப் பெருவிழா விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. புரட்டாசி மாதம் அமாவாசைக்குப் பிறகு, அடுத்த நாளிலிருந்து நவமி திதி முடிய ஒன்பது நாட்கள் இவ்விழாக் கொண்டாடப்படுகிறது. ஒன்பது நாள் கொண்டாடப்படுவதால் நவராத்திரி என்னும் பெயர்வந்தது.

கடைசிநாள் ஒன்பதாவது நாள். அந்நாள் கலைக்கல்விக்கும் தொழிற்கல்விக்கும் தெய்வமாக விளங்கும் கலைமகளுக்கு உரியநாளாக இருப்பதால் கலைமகள் விழா அல்லது சரஸ்வதி பூஜை என்னும் விசேஷப் பெயரால் வழங்கப்படுகிறது. ஆய கலைகள் அறுபத்து நான்கிற்கும் உரிய தெய்வம் கலைமகள். எனவே அன்றைய தினம் ஏடுகளையும் புஸ்தகங்களையும் அடுக்கி வைத்து வழிபாடு செய்கிறோம்.

ஒன்பது நாள் நவராத்திரி விழா முடிவடைந்ததும், பத்தாவது நாள் விஜய தசமி என்று சொல்லப்படும். அன்றைய தினம் சரஸ்வதி விஸர்ஜனம் எனவும் சொல்லப்படும். அடுக்கிவைத்திருக்கும் ஏடுகளைப் பிரிப்பார்கள். இந்த நல்லநாளில் சிறுவர்களுக்குக் கல்விப் பயிற்சியைத் தொடங்கி வைப்பார்கள்.

அறியாமை என்னும் இருள் விலகும், அறிவு என்னும் ஒளி பரப்பும் விழா கலைமகள் விழா.

"தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே.''

அருந்தமிழை நன்கு அறியும் பொருட்டு ஒளி மிகுந்த தாதுபொருந்திய வெண் தாமரை மலரில் வீற்றிருக்கும் கலைமகளை வணங்குகிறேன் என்று தொல்காப்பியம் சொல்லதிகாரம் உரையில் சேனாவரையர் கூறுகின்றார்.

"வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள்—வெள்ளை
அரியா சனத்தில் அரசரோடு என்னைச்
சரியா சனம்வைத்த தாய்."

தூய்மை நிறைந்த அரியாசனத்தில் வீற்றிருக்கக்கூடிய அரசனுக்குச் சரிநிகர் சமான மாக என்னை விற்றிருக்கும்படி கல்வியறிவு தந்த தாய் கலைமகள், வெண்ணிற ஆடை புனைந்திருப்பாள். வெண்ணிற ஸ்படிக மாலையைக் கழுத்திலே அணிந்திருப்பாள். வெண்தாமரை மலரில் விற்றிருப்பாள்—எனக் காளமேகப் புலவர் கல்விக் கடவுள் கலைமகளைத் துதிக்கின்றார்.

"வெண்மலரும் வெண்பணியும் வெண்கலையும்
வெண்மணியும் வேய்ந்து வாச
வெண்கமளம் வீற்றிருந்து பழங்கருணை
பூத்துவண்டு விளரி பாடக்
கண்மலரும் ஆயிரந்தோடு அவிழ்ந்து முகை
நெகிழ்ந்த கமலத்தில் வாழ்என்
கண்மலரும் சதுர்முகத்தோன் நாவில்வளர்
வாணி பதம் கருத்துள் வைப்பாம்."

வெண்ணிற மலர், வெண்ணிற ஆபரணம், வெண்ணிற ஆடை, வெண்ணிற மணிகள் ஆகியவற்றை அணிந்து, மணம்பொருந்திய வெண்தாமரை மலரிலே வீற்றிருந்து, வண்டுகள் விளரிப் பண்ணைப் பாடுவதால் கருணை நிறைந்த அருள் நோக்கினால் அனைவரையும் நோக்குகின்ற, எட்டுக் கண்களும், நான்கு முகங்களும் கொண்ட பிரம்ம தேவனின் நாவில் வளர்கின்ற கலைவாணியின் பாதங்களை மனத்தில் வைத்து வழிபடுவோம்—இவ்வாறு மச்சபுராணம் கலைமகளைப் போற்றுகிறது.

இன்னும் பல புராணங்களில் கலைமகள் போற்றப்படுகின்றாள். கம்பர், சரசுவதி அந்தாதி என்னும் நூலில் சரசுவதியைப் போற்றுகிறார்.

கலைமகள் எங்கெங்கு உறைகின்றாள்? கலைமகள் உறையும் இடங்களைப் பாரதியார் வரிசைப்படுத்திச் சொல்லுகிறார்.

வெள்ளைத் தாமரைப் பூவிலே வீற்றிருப்பாள். வீணையின் இனிய நாதத்தில் திகழ்கின்றாள். கவிதைபாடும் பாவலர் உள்ளத்தில் நிறைந்திருக்கின்றாள். உண்மைப் பொருளை உணர்த்துகின்ற வேதத்தின் உட்பொருளாகப் பரிணமிக்கின்றாள். முனிவர்கள் கூறுகின்ற கருணை வாசகத்தில் உள்ள பொருளாகக் காட்சியளிக்கின்றாள்.

இவ்வாறு பாரதியார், கலைமகள் வீற்றிருக்கும் இடங்களைக் குறிப்பிடுகின்றார்.

கலை மாது, சரசுவதி, கலைஞானத்தோகை, கலைவாணியம்மை என்றெல்லாம் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள் குறிப்பிடுகின்றார்.

கல்விக் கடவுளாகவும், நாவுக்கரசியாகவும் விளங்குகின்ற கலைமகளை, ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள், இந்துஸ்தானி மொழியில் பேசுவதற்கான ஆற்றலை விரைவில் தர வேண்டுமென்று பிரார்த்திக்கின்றார்.

அவ்வாறு பிரார்த்தனை செய்யும்போது, "சகலகலா வல்லி மாலை" என்னும் நூலைக் கலைமகள் மீது பாடி, எந்நாளும் வாட்டாத பாமாலையாகச் சூட்டுகிறார்.

அவ் அம்மையின் அருளால் சுவாமிகள் விரைவில் இந்தி மொழி பேசும் ஆற்றலைப் பெற்றார். மன்னனைக் கண்டு பேசினர். சுவாமிகளின் அளப்பரிய கல்வியாற்றலையும் தெய்வாம்சத் தன்மையையும் முகம்மதிய மன்னன்கண்டு ஆச்சரியப்பட்டான். அவரை வணங்கினன். அவர் விரும்பியவாறு காசியில் இடம் வழங்கினன்.

அடிகள் ஏற்படுத்திய குமார சுவாமிமடம், கேதாரநாதர் கோயில் ஆகிய இரண்டும் இப்பொழுதும் அங்குப் பொலிந்து விளங்குகின்றன.

சகலகலா வல்லி மாலை என்னும்நூல் பத்துப் பாடல்களைக் கொண்டது. கலைமகளின் திருவருள் பெருக்கைப் பெற விழைகின்றவர்கள் இந்நூலைப் பாராயணம் செய்வது வழக்கம். சகலகலா வல்லி மாலையில் முதல் பாடல் இது:

"வெண்டாமரைக்கு அன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒழித்தான்
பித்தாக உண்டாக்கும் வண்ணம்
கண்டாய் சுவைகொள் கரும்பே
சகல கலா வல்லியே."

இந்த உலகம் ஏழையும் காப்பாற்றி உண்ட திருமால் திருப்பாற்கடலில் உறங்கவும், ஜகம் ஏழையும் அழித்த சிவபெருமான் பித்துப் பிடித்து அலையவும் செய்துவிட்டு, எல்லா உலகங்களையும் படைத்த பிரம்மன் அனுபவித்துச் சுவைக்கும்படியான கரும்பாகத் திகழும் சகலகலாவல்லித் தாயே! வெள்ளைத் தாமரையைத் தவிர, உன் பாதங்களை ஏந்தித் தாங்குவதற்கு எனது உள்ளமாகிய தாமரை மலருக்குத் தகுதி இல்லையா? என்று கேட்கிறார்.

சரஸ்வதி தேவி பிரம்மதேவனுக்கு மனைவியாகச் சொல்லப்படுகிறாள். கணவனுக்கு ஏற்ற அழகிய மனைவியாக அவள் திகழ்கிறாள்.

அவளுடைய அழகு ஏனைய இரு கடவுளர்களாகிய திருமாலையும், சிவனையும் மெய் மறக்கச் செய்து விட்டது. எப்படி?

''சகம் ஏழும் அளித்து உண்டான் உறங்க'' உலகம் ஏழையும் காப்பாற்றுபவன் திருமால். அவன் எல்லா உலகங்களிலும் உறைகின்ற அனைத்து உயிர்களையும் காப்பாற்றுகின்றான். எனவே, காக்கும் கடவுள் அவன்.

அந்தத் திருமாலே, கிருஷ்ணவதாரத்தில் கோகுலத்தில் கண்ணனாக அவதரிக்கிறான். பிள்ளைப் பிராயத்தில் அவன் பண்ணாத குறும்பு இல்லை. மண்ணை அள்ளி வாயிலே போட்டுக் கொள்கிறான். தாயார் யசோதை அதனைப் பார்த்துவிடுகிறாள். வாயைத் திறந்து காட்டு எனக் கண்டிக்கிறாள். கண்ணன் தன் திருவாய் மலர்ந்தருள்கிறான். வாய் மண்ணுக்குள் ஜகம் ஏழும் யசோதைக்குக் காட்சியளிக்கின்றன.

வாய்க்குள் உண்டு விழுங்கியிருந்தால் தானே வாயில் ஏழு உலகங்களையும் வரவழைத்துக் காட்டமுடியும்!

இதனையே சுவாமிகள், ''உண்டான்'' என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார்.

''உறங்க'' –திருப்பாற்கடலிலும், காவிரி சூழ் திருவரங்கத்திலும் அறிதுயில் கொள்கின்றான் பரந்தாமன். இது அவனுக்கு உரிய இயல்பு.

ஆனால், குமரகுருபரர் இதற்கு ஒரு காரணம் கற்பித்துக் கூறுகின்றார். என்ன காரணம்? சுவைமிக்க கரும்பாகிய சகல கலா வல்லியின் அழகில் மயங்கிப் பரந்தாமன் உறங்குவதாகக் கூறுகிறார்.

''சகம் ஏழும்...ஒழித்தான்''— ஒழித்து அழித்தவன் சிவபெருமானாகிய ருத்ரன்.

படைக்கும் கடவுள் பிரம்மன், காக்கும் கடவுள் திருமால், அழிக்கும் கடவுள் ருத்ரன். பரம்பொருள் ஒன்றே முத்தொழில் ஆற்றுகையில் தனித்தனிப் பெயர் பெறுகிறார்.

ருத்ரனாகிய சிவபெருமான் பித்தன். ''பித்தா பிறை சூடீ'' எனச் சுந்தரர் சிவனை அழைக்கின்றார். பித்தனாக, பேயனாக, ஊமத்தை மலர், சுடுகாட்டுச் சாம்பல், எலும்பு மாலை புனைந்து சுடுகாட்டில் நர்த்தனம் புரிகின்றான். இவ்வாறு இவன் ஆடுவது இயல்பு.

ஆனால், இவன் பித்தனாக ஆவதற்கு ஒரு காரணம் உண்டு. அக்காரணம் எது தெரியுமா? கலைமகளின் போற்றுதற்கரிய அழகில் மயங்கிச் சிவன் பித்தன் ஆனான் என்கிறார் குமரகுருபரர்.

''சகம் ஏழும்... உண்டாக்கும் வண்ணம் கண்டான்''—ஏழு உலகங்களையும் உண்டாக்கிப்படைத்தவன் பிரம்மன்.

பிரம்மதேவன் வாழ்வில் இனிமையூட்டும் சுவைக் கரும்பாகத் திகழ்பவள் அவன் மனைவி கலைவாணி.

திருமால் பாற்கடலில் உறங்குவதுஇயல்பு; சிவபெருமான் பித்தனாக, உன்மத்தனாகத் திரிவது இயல்பு. ஆனால் இவ்விரண்டிற்கும் காரணம் கலைமகள் தான் எனக் கலைமகளுக்கு ஏற்றம் கொடுத்து, உயர்வு கொடுத்துக் கூறுகின்றார் குமரகுருபரர்.

பிரம்மதேவனின் உலகம் சத்தியலோகம். அவனுடைய மனைவி சரஸ்வதி. பிரம்மனின் நாவில் எப்பொழுதும் உறைபவள் அவள்.

கல்விக் கடவுள் சரஸ்வதி. கல்வி சத்தியத்தின் அடிப்படை. சத்தியம் இல்லாது கல்வி இல்லை. உண்மையும் கல்வியும் ஒன்றுதான். உண்மையே கல்வி. உயிர்கள் அனைத்தையும் படைக்கும் பிரம்மன் சத்தியத்தை ஆதாரமாகக்கொண்டு விளங்கும் கல்விக் கடவுள்

கலைமகளைத் தனது நாவில் கொண்டுள்ளான் என்ருல், எல்லார் நாவிலும் சத்தியமும் கல்வியும் நிறைந்திருக்கவேண்டும் என்பது நியதி.

வெண்மை நிறம் தூய்மையின் அடையாளம். மனம் வெள்ளை மனமாக, தூய மனமாக இருத்தல் வேண்டும். அறிவு வெள்ளையாக இருத்தல் கூடாது. தூயவெண்மையின் சின்னம் வெண்டாமரை. வெண்ணிற ஆடை, வெண் ஸ்படிக மாலை இவற்றை உடையவள் கலைமகள்.

வெண்டாமரை மலரின் ஓரிரு இதழ்களைப் பாலில் வேகவைத்துச் சாற்றைப் பருகினுல் அறிவு வளர்ச்சிக்கு உதவியாக அமையும் என்பது தற்கால மருத்துவ நிபுணர்களின் கருத்து.

வெண்டாமரையில் உறைகின்ற சகலகலா வல்லியே! என்னுடைய வெள்ளை உள்ளத்தில் உறைதல் ஆகாதா? என வேண்டுகிருர் குமரகுருபரர்.

சுவாமிமலையில் எழுந்தருளியிருக்கும் சரசுவதி தேவியின் திருஉருவச்சிலையை இன்றும் நாம் காணலாம்.

வட திருமுல்லைவாசல் திருக்கோவிலில் ஸ்ரீவைஷ்ணவ தேவியை நவராத்திரி தினங்களில், கலைமகள் கோலமாகக் கண்டு வழிபடுகிருர்கள்.

எங்கும் நிறைந்த கலைமகளே! எனது உள்ளத்தில் உறைதல் தகாதா? என்பது குமரகுருபரரின் கருத்து.

உள்ளத்தைக் கமலமாக அதாவது தாமரையாகக் கூறுகிருர் அவர். மலர் மென்மையானது. மென்மையான உள்ளமாகிய மலர் ஆசனத்தில் கலைமகளை ஆவாஹனம் செய்கிருர் குமரகுருபரர்.

நம்மால் எதுவும் இல்லை; நம் செயலால் எதுவும் விளைவதில்லை என்பது ஞானிகளின் அனுபவம். அளப்பரிய ஆற்றல் ஒன்று உள்ளத்தின் உள்ளே நின்று உணர்த்த நாம் உணருகிருேம் என்பது அவர்களின் அனுபவ உண்மை. எனவே கலைமகளாகிய சகலகலா வல்லி உள்ளத்தின் உள்ளே அமர்ந்து இந்துஸ்தானிக் கல்வியை உணர்த்த வேண்டும் எனக் குமரகுருபரர் கருதுகிருர்.

ஸ்ரீ தேவீ மாஹாத்மியம்

या देवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு புத்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु शक्तिरूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு சக்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु शान्तिरूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு சாந்திருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु श्रद्धारूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு ச்ரத்தாருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु दयारूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு தயாருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु तुष्टिरूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு துஷ்டிருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:
या देवी सर्वभूतेषु मातृरूपेण संस्थिता ।	யா தேவி ஸர்வபூதேஷு மாத்ருருபேண ஸம்ஸ்திதா
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥	நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமஸ்தஸ்யை நமோ நம:

புத்தி, சக்தி, சாந்தி, சிரத்தை, தயை, திருப்தி, தாய் வடிவங்களாக எந்தத் தேவி எல்லா உயிர்களிடத்தும் உறைகின்ருளோ அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

சமூகநலன்

(சுவாமி ஸதானந்தர்)

மதம் மாற்றுவோரும் நாஸ்திகரும்

ஹிந்து மதம் மனிதனுக்கு எடுத்துச் சொல்லும் உண்மைகள் சில: இந்தச் சரீரம் காற்றடைத்த பை. நவதுவாரபுரி. மலம், மூத்திரம், சீழ், ரத்தம், மாமிசம் ஆகிய அருவருப்புக்குரிய பொருள்களால் ஆனது. ஆறிலோ, நூறிலோ ஒருநாளைக்கு அழிந்து போகும். நோய், முதுமை, தள்ளாமை ஆகியவைகளால் சரீர வாழ்க்கை துயர் நிறைந்தது ஆகிறது. இத்தகைய சரீரத்தினிடத்தில் பேர் அபிமானம் வைக்க வேண்டாம். உலக இன்பங்களில், உலக வைபோகங்களில் பற்றுதல் வேண்டாம். சாதாரண மூலப்பொருளிலிருந்து, அழுக்குப் பொருள்களிலிருந்து எப்படி மிக உயர்ந்த வாழ்க்கைக்குப் பயனுடைய பொருள்களைத் தயாரிக்கிறார்களோ, குப்பையிலிருந்து கோடி தனம் பெறுகிறார்களோ அப்படி அல்பமானதும் நிலையற்றதுமாகிய இச்சரீரத்தைக் கொண்டு ஓர் உயர்ந்த காரியத்தை நிறைவேற்றிவிட்டால் இந்தச் சரீரம் நன்கு பயன்படுத்தப்பட்டதாகிறது. இந்தச் சரீரமும், வாழ்வும் வேண்டியதே. வைரம் வைத்திருக்கிற அட்டைப் பெட்டியைப் பாதுகாப்பதுபோன்று இச்சரீரமும் சம்ரக்ஷணைக்குரியதே. உத்தமன் கோயில் கொண்டிருப்பதால் ஊனுடம்பு ஆலயம், அதை ஓம்புகின்றேன் என்கிறார் திருமூலர். குனித்த புருவமும் கொவ்வைச்செவ்வாயும் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் இம்மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே. சரீரப் பற்றுதலும் உலகப்பற்றுதலும் மிக்கவனுக்கு வைராக்கியம் ஊட்டவேண்டும். மிகமான ஆசையோ,ஆசையற்ற நிலையிலோ உள்ளவனுக்குத்தான் மேலான பிறவி உண்டாகிறது. அதை இரண்டாம் பகுதி விளக்குகிறது. அவன் மனது இனிச் செல்ல வேண்டிய பாதையை அது காட்டித்தருகிறது. இவைகள் எல்லாம் உண்மையா இல்லையா? இந்து மதத்தின் இந்தப்போதனையால் ஹிந்து The mild Hindu ஆகிவிட்டான். அதாவது அவனுக்கு இவ்வுலக வாழ்வில் பெரும் பிடிப்பு இல்லாது போயிற்று.

மேல் நாட்டுச் சமயங்களாகிய கிறிஸ்து மதமும், முகமதிய மதமும் உலகப் பற்றுதலைக் குறைக்க, ஒழிக்க இவ்வளவு ஆழமாகப் போதிக்கின்றனவா? அவர்களுடைய சமூக வாழ்க்கையில் எவ்வளவு குறைபாடுகள் உள்ளன! ஒரு சமூகத்தின் நாகரிகம் எத்தகையது! அதன் சிறப்பு என்ன, அதன் ஆழம் எத்தகையது என்பதை அறிய அந்தச் சமூகத்தில் பெண்களை எப்படி நடத்துகிறார்கள், மதிக்கிறார்கள், பெண்களைப்பற்றிய அவர்களின் கொள்கை என்ன என்பதை அறிந்துகொண்டால் போதும் என்பார்கள். கீழான உணர்ச்சி கெடுதலானது, மேலான சந்ததியை உண்டுபண்ண உதவாதது, சாதாரண உலக வாழ்க்கையைத் துயரம் நிறைந்தது ஆக்கிவிடும் என்று நாம் கருதுகிறோம். காமாந்தகரமான ஒருவனை இழிந்தவன் என்று ஒதுக்குகிறோம். ஆனால் மேல் நாட்டவரோ அது மானுடனது இயல்பான உணர்ச்சி, அதை அவன் இஷ்டம்போல் நுகர உரிமை உள்ளவன் என்கிறகோட்பாடு உள்ளவர்கள். இது தான் அடிப்படை வித்தியாசம். இதினின்று குடும்பவாழ்க்கை அமைப்பு அவரவர் கொள்கைபோல உருவாக்கப்பட்டிருக்கிறது. மேல்நாட்டுக் குடும்பவாழ்க்கையின் தரத்தை ஒரு கணவன் தன் அப்போதைய மனைவியிடம் சொல்லும் ஒரு வியாக்யானத்திலிருந்து புரிந்துகொள்ளலாம். Your child and my child are playing with our child. உன் குழந்தையும் என் குழந்தையும் நம் குழந்தையுடன் விளையாடுகின்றன. மாத்ருபக்தி, பித்ருபக்தி, குருபக்தி ஆகிய ஆரம்ப வகுப்புக்கள், ஆரம்பப் பாடங்களே இல்லாமல் அவர்கள் எப்படிக் கடவுள் பக்தியை வளர்க்கிறார்களோ! குடும்ப பாந்தவ்யம் இல்லாமல் அவர்களிடம் தேசப்பற்றும் இறைப்பற்றும் எப்படி உருவாகின்றன என்று தெரியவில்லை. அன்புஇல்லாத ஹிருதயம் தண்ணீர் இல்லாத பாழுங்கிணறுபோன்

றது. மாத்ருபக்தி, பித்ருபக்தி, குருபக்தி என்பன உள்ளத்தின் இயல்பான நீர் ஊற்றுக்கள். இந்த நீர் ஊற்றுக்கள் அன்பைப் பெருக்கிப் பிறகு கடவுள் பக்தி, உலக உபகாரம், தியாகமாக வடிவெடுக்கின்றன. 'மாத்ரு தேவோ பவ, பித்ரு தேவோ பவ, ஆசார்ய தேவோ பவ' மாதா உனக்குத் தெய்வம், பிதா உனக்குத் தெய்வம், குரு உனக்குத் தெய்வம் ஆகட்டும் என்பது இதன் பொருள். 'தர்மம் சர சத்யம் வத' தர்மத்தின்படி நட, சத்தியமே பேசு. நம் சாஸ்திரங்களின் போதனைகள் யாவும் இந்த ஐந்து போதனைகளில் அடங்கியிருக்கின்றன. முதலில் உலக வாழ்க்கையை இனிமையானதாக, தெய்விகமானதாக ஆக்கிப் பிறகு சீலமான, தூய்மையான உலக வாழ்க்கையைத் தெய்வ வாழ்க்கையாகச் செய்கிறது. இப்போது நம் வாழ்க்கையையும் புறமதத்தவர்களின் வாழ்க்கையையும் சீர்தூக்கிப் பார்க்கச் சில விஷயங்கள் தரப்பட்டன. இங்ஙனம் சீர்தூக்கிப் பார்த்து உங்கள் மதத்தின், வாழ்க்கைமுறையின், உயர்வை உணருங்கள்.

மேலான வாழ்க்கையினின்று கீழான வாழ்க்கை முறைக்கு இறங்கலாமா? புறமதஸ்தர்கள் தங்கள் குறைபாட்டை உணர்ந்து மேலான முறையைத் திரும்பக் கைக்கொள்ள முன் வருகிறார்கள். ஆனால் நம்மில் பலருக்கு அக்கீழ்த்தர வாழ்க்கையில் மோஹம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விபரீத நிலைமையை, தௌர்பாக்கியத்தை என்னென்பது! இதன் விளைவுதான் இன்றைய மதமாற்றம். நம் உயர்வில் நம்பிக்கை இருக்குமானால் மதமாற்றமே சாத்தியமில்லை. கிறிஸ்துவர்களிலும் முகம்மதியர்களிலும் நல்லவர்கள் இருப்பார்கள். இந்தத் துவேஷ, வெறுப்பு, வெறிப்போக்கு அவர்களுக்குப் பிடிக்காது. ஆயினும் அவர்கள் இன்றைய நிலைமைக்குப் பரிகாரம் செய்ய முடியாது. காலம் எல்லாவற்றையும் சரிசெய்யும். இறைவன் அருள்படியே யாவும் நடைபெறட்டும் என்று அவர்கள் அமைதியாக இருப்பார்கள், இருக்கிறார்கள். நேற்றுவரை மாமன் மச்சான் என்று உறவு கொண்டாடி இணக்கமாக, பந்தபாசமாக இருந்துவிட்டு இன்று என்ன விபரீதம் வந்து விட்டது! நல்ல குடும்பத்தை, ஐக்கிய சமூகவாழ்வைப் பாழ்பண்ணச் சதிகாரர்கள் எப்போதும் உலகில் இருப்பார்கள். இவர்களின் உருவகம்தான் ராமாயணக் கூனியும் மகாபாரதச் சகுனியும் ஆவார்கள். இவர்களுக்கு யூகமும் வாக்குவன்மையும் அதிகம். இன்றைய அரசியலில் இத்தகையவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். அவர்கள் அமைதியாகப் பொதுவாழ்வு நடைபெற விடமாட்டார்கள். இன்றைய அரசாங்கமும் சகுனி, கூனி பக்கம்தான் ஆதரவாக இருக்கிறது. எனவே இன்றைய நிலைமை எளிதில் சரியாகாது. இதற்கு ஒரே வழி மக்கள் மனம் மாறவேண்டும். இவ்வுலக சம்பத்துக்கள் நிலையற்றவை.

உலகில் கசடு புகாத அமைப்போ இயக்கமோ இல்லை. சுதந்தரம் என்பதை நாம் எவ்வளவு தவறாகப் புரிந்துகொண்டிருக்கிறோம். சாலைகளில் வேகமான வாகனங்களுக்கு இடம் விடாமல் நிற்பது, போவது சுதந்தரம் என்று எண்ணுகிறோம். பஸ், ரயில்களில் மற்றவர்கள் அசௌகரியம் பாராமல் புகைப்பது சுதந்தரம். எங்கு வேண்டுமானாலும் எச்சில் துப்புவது சுதந்தரம். யாரை எப்படி வேண்டுமானாலும் திட்டலாம். குறைவாக எழுதலாம். அது சுதந்தரம். பொதுச் சொத்துக்களை நாசம் பண்ணலாம். அது சுதந்தரம். இத்தகைய தவறான போக்கை உணருவார் உண்டா? இத்தகைய சுதந்தரம் வேண்டியதுதானா? இது இன்றைய சமூகத்தை எவ்வளவு சீர்கேட்டிற்கு உள்ளாக்கியுள்ளது என்பதைச் சிந்திப்பார் உண்டா? உண்மையில் சீர்கேடு எது என்று புரிந்து அதை விலக்குவது எப்படி என்று தெரிந்து செயல்பட வேண்டாமா? பெரிய லக்ஷியவாதி போன்றும் பெரிய சிந்தனையாளன் போன்றும் பெரிய தியாகி போன்றும் பாசாங்கு பண்ணவேண்டாம். அன்று போர் வீரர்களின் பலத்தினால் அரசாங்க மாற்றங்கள் நிகழ்ந்தன. பொய்யும் பித்தலாட்டமும் செய்து மிரட்டியும் திருடியும் சேர்த்த பெரும் செல்வத்

தைச் சில கயவர்கள் கூட்டம் தவ ருன வழியில் செலவழிக்கிறது. சமயத்தை உருவாக்கியது இன்றைய பிராம்மணன் அல்லன். அதைப் பாதுகாப்பது இன்றைய பிராம்மணன் அல்லன். நலிந்து போயுள்ள ஒரு சமூகத்தை ஏன் மேலும் நலியச் செய்கிறீர்கள்? கெட்டதைப் போக்குவதாகச் சொல்லிக் கொண்டு ஒரு புதிய தீமையை விளைவிக்கிறீர்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். உங்கள் சமயம் உயர்ந்தது. மற்றச் சமயங்களிலும் ஏராளமான குறைபாடுகள் உள்ளன. குறைபாட்டைப் பொருட்படுத்தாமல் சமயத்தை அங்கீகரித்து அது செயல்பட் விடுங்கள். நீங்கள் கோருகிற, எதிர்பார்க்கிற நன்மை, சன்மார்க்கம் தானே உருவாகும். சமயத்தால் அன்றி, பண்பில் உயர்ந்தால் அன்றி வேற்றுமை நீங்காது. நோயாளியின் உண்மையான நோயை அறிந்து கொள்ளாமல் ஏதேதோ மருந்து கொடுத்துப் பரீக்ஷைசெய்வது போன்று சமூகத்தைப் பாழாக்கவேண்டாம். இன்றைய நாஸ்திகன் நம் இனத்தான். நம் சமயத்தவன். அவன் செய்கிற வம்பு குடும்பச் சண்டை போன்றுள்ளது. உங்கள் சண்டைகளால் பெரிய குடும்பம், பெரிய கட்சி, அரசாங்கம் எல்லாமே பாழாகிவிடும். இன்று நாமெல்லாரும் ஒன்று சேர்ந்தால் கிறிஸ்துவர்களும், முகம்மதியர்களும் மதமாற்றம் செய்ய இயலாது. பயந்து ஓடிப்போய் விடுவார்கள். நல்லாரை அணுகி மத சம்பந்தமான ஐயங்களைப் போக்கிக் கொள்ளுங்கள். நீதி, நேர்மையில், நல்வாழ்வில், அன்பில், ஒற்றுமையில், ஐக்கியத்தில் ஈடுபாடு இருக்குமாகில் எல்லாரும் உயரவேண்டும், எல்லாரும் நன்ருக இருக்கவேண்டும் என்கிற எண்ணம் உண்மையாக இருக்குமாகில் நீங்கள் முன்னேறலாம். மதம் என்பது மனிதனைத் தெய்வ நிலைக்கு உயர்த்தத் தோன்றியது. மதம் என்பது கடவுள், பிரபஞ்சம், ஜீவன் இவைகளைப் பற்றிய உண்மையைக் கூறுவதாகும். மதம் என்பது பண்பின் சிகரம் ஆகும். மதம் என்பது எல்லாக் கலை ஞானங்களிலும் உயர்ந்தது, மதம் என்பது முடிந்தநிலை ஆகும். மதம் என்பது இகபரம் இரண்டிற்கும் தலையாய செல்வம் ஆகும். மதம் என்பது முக்தி நிலை, பேரின்ப நிலை. மதம் மாற்றுபவர்களும் நாஸ்திகர்களும் இவ்வுண்மையை அறிந்துகொள்வார்களாக. மதம் இன்றிச் சமூகவாழ்வு சிறக்காது.

இன்பத்தை எங்கே பெறலாம்?

வயதான மாது ஒருத்தி வீட்டின் அறைக்குள் கிழிசல் துணி தைத்துக்கொண்டிருந்தாள். திடீரென்று அறைக்குள்ளிருந்த மின்விளக்கு அணைந்துவிட்டது. அவ்வம்மையாரின் கையிலிருந்த ஊசியும் நழுவித் தரையில் விழுந்துவிட்டது. அறைக்கு வெளியே தெருக்கம்பத்தில் மின்விளக்கு பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தது. அவ்வம்மையார் அறையை விட்டு வெளியே வந்து தெருக்கம்பத்தின் கீழ் தரையிலிருந்த மண்ணைக் கிளறிக்கொண்டிருந்தாள். அவ்வழியாக வந்த பெரியவர் அவ்வம்மையைப் பார்த்து எதைத்தேடிக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்டார். ஊசியைத் தேடிக்கொண்டிருப்பதாக அவ்வம்மையார் கூறினர். ஊசி இங்கு எப்படி விழுந்தது? என்றுகேட்டார். அறைக்குள் ஊசி விழுந்துவிட்டது. அங்கு இருட்டாக இருப்பதால் வெளிச்சமிருக்கும் கம்பத்துக்கடியில் ஊசியைத் தேடுவதாக அவ்வம்மையார் கூறினர்.

இன்பம் அகத்தில் இருக்கிறது. நம் அகம் இருளாக இருப்பதால் வெளிச்சம் தென்படுகின்ற புறவுலகில் இன்பத்தைத் தேடுகின்ருேம். அவ்வம்மையாருடைய நிலையைப் போன்றதே நம் நிலை. அறையில் வெளிச்சத்தை உண்டாக்கி ஊசியைத் தேடினுல்தான் அவ்வம்மையாருக்கு ஊசி அகப்படும். அஃதே போன்று உள்ளத்தில் ஆன்மீக ஒளியை உண்டாக்கினுல்தான் நிலையான பேரின்பத்தைப் பெறலாம்.

நெஞ்சமே நீ அஞ்சாதே

(சுவாமி துருவானந்தர்)

''அஞ்சி அஞ்சிச் சாவார் இவர் அஞ்சாத பேரில்லை அவனியிலே'' என்றார் பாரதி. அஞ்சி அஞ்சியே வாழ்ந்து இறுதியில் அழிவில் முடியும் நிலை மனிதனுக்குமட்டுமா ஏற்படவேண்டும் என்று சிந்தித்துப்பார். உனக்கு என்ன விடை கிடைக்கிறது? மனிதன் மட்டும் அல்லாது பிறப்பெடுத்துள்ள விலங்குகள், பறவைகள் உள்பட உணர்வு வந்துள்ள அனைத்தும் ஏதாவது ஒரு போக்கில் அஞ்சி அஞ்சித்தான் தங்கள் வாழ்வை நடாத்தி வருகின்றன. எறும்பைப் பிடிக்கப் போனால் அது ஓடுகிறது. பூச்சியைப் பிடிக்க முயன்றால் அது தப்பி ஓட முயலுகிறது. பறவைகள், விலங்குகள் அனைத்தும் எங்கே மற்றவைகளால் தங்களுக்கு ஆபத்து வந்துவிடுமோ என்கிற அச்சத்தால்தான் மருண்டு வாழ்கின்றன. முன்பு பூனையைப் பார்த்திராத எலி அல்லது கிளி ஒன்றை வளர்த்து அதை ஒரு பூனையின் அருகில் கொண்டு சென்றால் அந்த எலி, அல்லது கிளி படும்பாட்டைச் சொல்லி முடியுமா? புலியைக் கண்டிராத ஒரு மானையோ, ஆட்டுக்குட்டியையோ பிடித்துப் புலிக்கூண்டின் அருகே கொண்டு சென்றால் அந்த அற்ப உயிர்கள் என்னபாடு படுகின்றன! அச்சமானது அகிலமுழுதும் எல்லா உயிர்களிடமும் ரத்தத்தில் ஊறியுள்ள ஒருவித உணர்வாகும். இதை எந்த க்ஷண நேரமும் நம் உள்ளத்திலிருந்து அகற்ற எல்லார்க்கும் முடியும். ஜன்மாந்தர வாசனையாக வருகிற பகை உணர்வை, பிறவியிலிருந்தே வளர்த்து வருகிற அன்பு உணர்வின்மூலம் முறியடிக்க முடியும். நாயும் பூனையும் ஜன்மவிரோதிகள் என்றே சொல்லப்படுபவைகள். ஆனால் நாய்க்குட்டியுடன் பூனைக்குட்டியை ஒன்றாகப் பழகவிட்டு அவைகளோடு கிளிக்குஞ்சையும் பிறந்ததிலிருந்து ஒன்றாகவே விளையாட்விட்டுப் பழக்கி வந்தால் நாயும், பூனையும், கிளியும் இணைபிரியாத நண்பர்களாக வாழ்வதையும்,சேர்ந்து விளையாடுவதையும் பார்த்தால் ஜன்ம சத்துருக்கள் ஆப்த நண்பர்களாக மாறி இருப்பதாகவே புலப்படும். சில நாட்களுக்கு முன் புதுக்கோட்டையில் ஒரே புற்றில் பாம்பும் கீரியும் வாழ்ந்து வந்தன. அந்தப் பாம்புக்கு ஏராளமான குட்டிகள் இருந்தும் அந்தக் கீரி அவைகளுக்கு எந்தத் தொந்தரவும் செய்யாது அவைகளோடு ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. ஏராளமான மக்கள் இந்தக் காட்சியைக் கண்டுள்ளனர்.

உலகிலுள்ள பறவை, விலங்கு, பூச்சிகளை ஆராய்ந்துபார்த்தால் அறிந்தோ அறியாமலோ ஓர் இனம் வேறு ஓர் இனத்தை வெறுக்கிறது. அதை முன்னிட்டுத் தாக்கவோ, அழிக்கவோ முற்படுகிறது. ஆற்றல் குறைந்த இனம் பலம் வாய்ந்த இனத்தின் தாக்குதலைத் தாங்கமுடியாது தப்பி ஓடிப் பிழைக்கிறது. பலம் வாய்ந்த இனத்தைப் பற்றி எண்ணும்பொழுதே அவைகளின் உடல் முழுதும் அச்சத்தால் நடுங்குகின்றன. தங்களைக்காட்டிலும் பலம் வாய்ந்த மற்ற இனத்தைக் கண்டு அஞ்சுவது ஒன்றே சிற்றுயிர்களின் போக்காக இருக்கிறது.

ஆனால் மனிதனுக்கு மட்டும் அச்சமானது பலவிதக் காரணங்களை முன்னிட்டுப் புற்றீசல் போலப் புதிது புதிதாகத் தோன்றிய வண்ணம் உள்ளது. மனிதன் பிறக்கின்ற பொழுதே அச்சத்துடன் பிறக்கவில்லை. வளர்ந்து வருகிறபொழுது அச்சமற்றவனாகவோ பயந்து வாழும் கோழையாகவோ மாறுகிறான். பயம் என்பதே பெரும்பாலும் மனதின் கற்பனையே தவிர வேறு என்ன? மற்ற உயிர்களைவிட அறிவில் உயர்ந்தவன் மனிதன். எதையும் சிந்தித்துப்பார்த்தே ஒரு முடிவுக்கு வரக்கூடியவன். அப்படிப் பட்டவன் பட்டப்பகலில் எங்கும் போய் வருகிறான். ஆனால் இரவு நேரத்தில் அதே இடங்களுக்குப் போக அஞ்சுகிறான். பட்டப் பகலில் சுடுகாட்டுக்குத் தனியாகப்போய் வருகிறவர்கள் அரிது. இரவு நேரத்தில் தனியாய்ப் போய்விட்டு வரும்படி சொன்னால் போய்வருவார்களா? ஆயிரத்தில் ஒருவர் அதற்கு ஆயத்தமாகவிருந்தால் அதிச

யமே. ஏன்? சுடுகாடு என்று சொன்ன வுடனே ஒவ்வொருவர் மனக்கண்ணிலும் கற்பனைப் பேய்கள் உலாவிவர ஆரம்பித்து விடுகின்றன. கற்பனைப் பேய்களுக்குப் பகுத்தறிவைப் பலியிட்டு விடுகின்றனர். பிறகு எங்கே சிந்தனை வேலை செய்யப் போகிறது? நாய், கழுதை, பன்றி, நரி முதலிய விலங்குகள் தனியாக இரவில் சுடு காடு முதல் எங்கும் சுற்றியலைந்து திரிகின் றன. விலங்குகளைக் காட்டிலும் அறிவில் மிகுந்துள்ள மனிதன் கற்பனை எண்ணங் களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கலங்கி விடுகிறான்.

பகலில் உள்ளவைதானே இரவிலும் இருக் கின்றன. இரவில் ஏதாவது வந்துவிடுகின் றதா? செத்த பிணத்தைப் பார்க்கப் பயப் படுபவர்கள் உண்டு. செத்த பிணத்தருகே செல்லக்கூட மிகவும் பயப்படுவார்கள். செத்த பாம்பருகே நாம் பயப்படாது நிற் கிறோம். இரவு முழுதும் தனியாகச் செத்த பாம்பிடத்தில் இருக்கச் சொன்னால்கூட இருப்போம். ஏன்? அது உயிரற்றது, கடிக் காது என்று நமக்குத் தெளிவாகத் தெரியும். அதேபோன்று உயிரோடு ஒருவர் இருந்தால் அவர் கோபப்படுவார் அல்லது திட்டுவார், அடிப்பார் என்று எட்டப் போகலாம். ஆனால் செத்துப்போன சவம் என்ன செய் யும்? அச்சம் என்ற ஒன்று உள்ளே இருக் கும்வரை ஒரு சிறு துரும்பு கூட நம்மைப் பயமுறுத்திச் சாகடித்துவிடும்.

காட்டிலே ஆடுமாடு மேய்த்துக்கொண் டிருந்த மனிதனுக்குத் தன் கால்நடைகளைப் புலி, சிங்கம் ஆகியவை அடித்துக் கொன்று விடுமோ என்ற பயம் ஆதிகாலத்தில் இருந் தது. ஆனால் விஞ்ஞான வளர்ச்சி அடைந் துள்ள இக்காலத்தில் ஒரு வல்லரசைக்கண்டு மற்றொரு வல்லரசு பயப்படுகிறது. இந்த வல் லரசுகளைக் கண்டு சிறிய நாடுகளனைத்தும் அச்சமடைகின்றன. சில முட்டாள்தனமான முரடர்கள் தங்கள் கோரிக்கைகள் நிறை வேறவேண்டும் என்பதற்காக விமானத் தைக் கடத்தி வெளிநாடுகளுக்குச் செல்ல முயல்வது இப்போது சாதாரணமாகிவிட் டது. விளையாட்டுத் துப்பாக்கியை வைத் துக்கொண்டும், கொய்யாப்பழத்தைக் கைக் குட்டையில் சுற்றிக்கொண்டும் தான் சொல்லுகிற இடத்திற்கு விமானத்தை ஓட் டிக்கொண்டு போகவில்லையென்றால் விமான ஓட்டியையும், மற்றும் எல்லாப் பயணிகளை யும் குண்டுபோட்டுக் கொன்றுவிடுவதாகப் பயமுறுத்துகிற எத்தர்களும் இப்போது தோன்றிக்கொண்டுதான் உள்ளனர். அந்த விளையாட்டுத் துப்பாக்கியை உண்மை என்று நம்பி, தங்கள் உயிர்மீதுள்ள பற்று தலால் அவனிடம் நெருங்க அஞ்சுகின்ற கோழை நெஞ்சம் படைத்தவர்களும் நம் மிடையே வாழத்தான் செய்கிறார்கள். உயிரைக் கொடுக்க யாரும் ஆயத்தமா யில்லை என்பதே அதற்குக் காரணம். அச் சம் கொள்வது அர்த்தமற்றது என்பதற்கு எவ்வளவு சான்றுகளை நாம் தெரிந்து கொண்டாலும் அவற்றை மீண்டும் ஞாப கப்படுத்தி, சிந்தனைபண்ணி, செயலுக்கு வருகிறபோதுதான் அது பயன்படும். இங்கி லாந்தில் ஒரு கிறிஸ்துவப் பாதிரியாருக்கும், ஒரு விஞ்ஞானிக்குமிடையில் ஒரு பிரச்னை எழுந்தது. 'பேய், பிசாசு இருக்கிறது, அதற்கு வல்லமை அதிகம், ஏசுகிறிஸ்து வையே அது எதிர்க்கக்கூடியது' என்றார் கிறிஸ்துவப் பாதிரி. 'பேயும், பிசாசும் இல்லை; எல்லாம் கற்பனை' என்றார் விஞ்ஞானி. ஒவ் வொருவரும் தங்கள் கருத்தையே விடாப் பிடியாக வலியுறுத்திக் கூறவே இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தனர். யார் முதலில் நடு இரவில் கல்லறைக்குப் போய் அங்குள்ள பெரிய மரத்தின் அடியில் ஓர் ஆணியை அடித்து விட்டு வருகிறார்களோ அவர் சொல் லுவது தான் உண்மை என்று முடிவாகி யது. முரட்டுத்தனமான இந்தக் கருத் தைக் கேட்ட விஞ்ஞானி மறுமொழி ஒன் றும் சொல்லாது தன் வீட்டுக்குப் போய் விட்டார். கர்த்தருக்கு எதிரியாகச் சைத் தான் (பேய், பிசாசு) இருக்கிறான். அவன் கல்லறைப் பக்கம் வருவான். கர்த்தரின் உதவியால் அந்த இடத்துக்குப் போய் ஆணி அடித்து உண்மையை நிரூபிப்பேன் என்று தீர்மானித்துப் பாதிரியார் அன்று இரவு சுத்தியலும் ஆணியுமாகக் கல்லறையை

நோக்கிப் புறப்பட்டார். கர்த்தரை நினைத்துக்கொண்டு, தன்னைக் காக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டு போனார். கல்லறைக்குப் போய்ச்சேர்ந்தார். மரத்தடியில் ஓர் ஆணியை அடித்தார். வெற்றிப்புன்னகையோடு எழுந்தார். யாரோ அவருடைய சட்டையின் கீழ்ப்பகுதியை இழுப்பது போன்று உணர்ந்தார். 'கர்த்தரே' என்று கதறினார்.

குனிந்தவர் நிமிர்ந்தார். மீண்டும் இழுத்தது. சைத்தானல்லவா தன் சட்டையைப் பிடித்து இழுக்கிறான் என்று பயந்து கீழே விழுந்து விட்டார். பயத்தால் ஏற்பட்ட மாரடைப்பில் பாதிரியார் மாண்டார். மறுநாள் விஞ்ஞானி பாதிரியைத் தேடினார். ஆசாமியைக் காணோம். உடனே கல்லறைப் பக்கம் போனார். பாதிரியார் வாயில் நுரை தள்ளிச் செத்துக் கிடந்தார். அருகில் சுத்தியல் கிடந்தது. ஆணியை அடித்தவர் தன் சட்டையோடு சேர்த்து அடித்திருப்பதைப் பார்த்தார். விஞ்ஞானி இப்போது புரிந்துகொண்டார். பாதிரியார் இருளில் குனிந்து ஆணியை அடித்த போது சட்டையின் நுனியைச் சேர்த்து அடித்தது அவருக்குத் தெரியாமல் போய் விட்டது. பேய், பிசாசு இருப்பதாக எண்ணிப் பயந்து நுரை கக்கி மாண்டுபோய் விட்டார் என்ற முடிவுக்கு வந்தார் விஞ்ஞானி.

நம்மில் பலர் இத்தகைய மூட நம்பிக்கையில் இன்னும் உழன்று வருகின்றனர்கள். நாம் செய்கின்ற பல தவறுகளுக்கு அச்சமே காரணமாகவிருக்கிறது. சிறுவன் ஒருவன் காசைத் திருடி விட்டான். 'காசை எடுத்தாயா' என்று பெற்றோர்கள் அவனைக் கேட்கின்றனர். அவன் 'நான் எடுக்கவில்லை' என்று பொய் கூறுகிறான். அவனைப் பொய் பேசும்படி தூண்டியது எது? பயம். தான் காசு எடுத்ததாக உண்மையைக் கூறிவிட்டால் தனக்குத் தண்டனை கிடைக்கும் என்ற பயத்தில் அவன் பொய் கூறுகிறான். ஒருவர் வீட்டில் இருக்கிறபொழுது அவருடைய பொருள்களை எடுக்கப் பயப்படும் திருடன் அவர் வீட்டில் இல்லாத பொழுது பொருள்களைத் திருடிச் செல்லுகிறான். ஒருவரைப் பற்றி அவர்இல்லாதபொழுது கீழ்த்தரமாக, தரக் குறைவாகப் பேசும் மற்றொருவன் அவருக்கு முன்,நேரே பேச, குறையைச் சொல்ல, கீழ்த்தரமாகப் பேசத் தைரியம் வருவதில்லை. ஒருவருக்கு முன் அவரிடம் இனிக்க இனிக்கப் பேசி அவர் இல்லாதபொழுது அவரை மட்டமாகப் பேசுதல் தைரியமாகுமா? ஆண்மையாகுமா? ஆகாது. தெய்விகப் பண்புகளிலே அஞ்சாமைக்கு முதலிடம் தருகிறார் கிருஷ்ண பரமாத்மா. நேரு அவர்கள் இங்கிலாந்தில் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். அந்தக் கல்லூரியில் படித்த மாணவர்கள் ஒவ்வொருவரும் சில நிமிடங்கள் பேசி ஆகவேண்டும். இல்லையேல் ஒரு குறிப்பிட்ட தொகை அபராதம் செலுத்த வேண்டும். நேருவுக்குரியமுறை வந்தது. பேசுவதற்குப் பயந்து அவர் அபராதத் தொகையைக் கட்டி வந்தார். பின்பு தன்னம்பிக்கை கொண்டு பேசப் பழகினார். தொடர்ந்து இடைவிடாத பயிற்சியின் விளைவாக அச்சம் அகன்றது. சர்வதேச நாடுகளில் நேருவின் பேச்சுக்கு முக்கியத்துவம் கிடைத்தது.

அச்சத்தை நம் உள்ளத்திலிருந்து அவசியம் துடைத்தெடுத்துவிடவேண்டும். அச்சம் போவதற்கு ஆண்டவனுடைய சிந்தனை மிகுந்த அளவில் பயனளிக்கும். நவீனக்கல்வி கற்றவர்கள் முகத்தில் அச்சம் தோய்ந்த கவலை இருப்பதைக் காணலாம். பாமர மனிதனிடம் இருக்கிற விசுவாசம் இன்றைய படித்த மனிதனிடம் இல்லை யென்றே சொல்லலாம். செடி நட்டவன் தண்ணீர் ஊற்றுமலா போய்விடுவான் என்ற நம்பிக்கை நம் நாட்டு மக்களின் ரத்தத்தில் ஊறிப்போன உணர்வு ஆயிற்றே! தெய்விக விசுவாசம் உள்ளத்தில் வளரவளர அச்சம் மறைந்துவிடும்.

எதிர்கால சமுதாயம் சிறப்பானதாக அமைய வேண்டுமாகில் பள்ளி மாணவர்களுக்குச் சோறு போட்டு உடலைக் காப்பது போன்று சத்தான விஷயங்களை அறவுரைகளைச் சொல்லி அஞ்சாமையில் நிலைநிற்கும் உன்னத ஆண்மையாளர்களாக அவர்களை உருவாக்க அரசாங்கமும், பெற்றோரும் தீவிரமாக முயல்வார்களாக.

கயிலைமலை யாத்திரை

(சுவாமி குஹானந்தர்)

''பாருக்குள்ளே நல்ல நாடு—எங்கள் பாரத நாடு'' என்ற பாரதியின் பாட்டில் பொருள் மிகப் புதைந்திருக்கிறது. நம் பாரத நாட்டின் இயற்கை அமைப்பே மக்களுக்குப் பாரமார்த்திக வாழ்க்கையில் எண்ணத்தை வளர்ப்பதற்கென்றே அமைந்துள்ளதாக இருக்கின்றது. தென்கோடியில் மூன்று பக்கங்களும் ஆழமான கடலால் சூழப்பட்டுள்ளன. அகிலாண்டகோடி ஈன்ற அன்னையாய்ப் பின்னையும் கன்னி என மறை பேசும் குமரியாக அன்னை பராசக்தி ஆங்குத்தவம்செய்து வருகிறாள். வடகோடியில் வானளாவிய மலைகள் சூழ்ந்திருக்கின்றன. திருக்கயிலாயகிரி நாற்றிசைக்கும் விளக்காய் ஒளிவீசிக் கொண்டு இருக்கின்றது. நம் பாரததேசத்திற்கு இமயம் சிரசுபோன்றும் மத்தியபாகம் உடல்போன்றும் கன்னியாகுமரி பாதம் போன்றும் தோற்றம் அளிக்கின்றது. காஷ்மீரத்தில் உள்ளவர்களும், கன்னியாகுமரிக்கு அதிகம் சிரமமின்றி யாத்திரைசெய்யலாம். ஆனால் கயிலைமலை யாத்திரை மிகவும் கடினமானது. 1937ம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து ஸ்ரீமத் சித்பவானந்த சுவாமிகளுடன் ஒன்பது பேர் சென்றுவந்தனர். ஸ்ரீமத் சுவாமிஜி அவர்கள் சென்றுவந்தபிறகு திருக்கயிலைமலை யாத்திரைபற்றிப்பல இடங்களில் (சிலைடு) நிழற்படங்கள் மூலமும் விரிவுரை நிகழ்த்தியும் திருக்கயிலாயகிரி யாத்திரை என்ற புத்தகம் எழுதியும் கயிலை மலை யாத்திரையைத்தமிழ்நாட்டு மக்களுக்குத்தெளிவு படுத்தினார்கள். அதன் மூலம் தமிழ்நாட்டில் பலபேர் கயிலையைத் தரிசிக்க ஆர்வம் கொண்டனர். ஆனால் மிகச் சிலரே சென்று வந்தனர். 1959ம் ஆண்டில் கயிலாயமலை இருக்கின்ற திபேத்என்கிற நாட்டைச் சைனாவிலுள்ள கம்யூனிஸ்ட் அரசு கைப்பற்றிக் கொண்டது. சீனஅரசு திபேத்தினுள் செல்ல (இந்தியர்களுக்கு) அனுமதியளிக்கவில்லை. அதனால் சுமார் இருபது ஆண்டுகள் இந்தியர்கள் யாருமே கயிலை தரிசனம் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. கயிலையைக் காணவேண்டுமென்னும் விருப்பமுள்ள அன்பர்கள் கவலைக்குள்ளாயினர். இந்திய அரசு மூலம் கயிலை சென்றுவரச் சீனஅரசிடம் அனுமதி பெற முயற்சிசெய்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டு மந்திரியாக இருந்த திரு. வாஜ்பாய் என்பவர் சீனநாட்டிற்குச் சென்று அங்குள்ள அரசிடம் இதற்காகப்பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இந்தியப் பாஸ்போர்ட்டும், சீன அரசிடம் விஸாவும்பெற்ற கயிலைமலை யாத்திரைவாசிகளை மட்டும் அனுமதிப்பது என்று இந்திய அரசும் சீன அரசும் முடிவு செய்தன. அந்த ஏற்பாட்டின்படி சென்றஆண்டு செப்டம்பர் மாதத்தில் இரண்டு குழுக்கள், குழு ஒன்றுக்குப் பதினைந்துபேர் வீதம் சென்றுவந்தனர். சென்ற ஆண்டு மிக அவசரமாக ஏற்பாடு செய்ததாலும் பனிக்காலம் வருகின்ற சமயமாய் இருந்ததாலும் தமிழ் நாட்டில் மதுரையிலிருந்து ஓர் அன்பர் மட்டும் சென்று வந்தார்.

பல ஆண்டுகளாகக் கயிலைமலையைக் காண வேண்டுமென்ற அவா சிலருக்கு இருந்து வந்தது. சென்றஆண்டு இந்திய அரசுகயிலையாத்திரைபற்றித் தினத்தாள்களில் விளம்பரம் செய்ததைக் கவனத்தோடு பார்த்தோம். ஆனால் பருவகாலம் கடந்துவிட்டதாலும், முதல் தடவைபோய் வந்தவர்களின் அனுபவத்தையும் தெரிந்துகொண்டு போவது நல்லது என்பதாலும் விண்ணப்பம் செய்யாது இருந்து விட்டோம். இருந்தாலும் கயிலை யாத்திரை பற்றித் தினசரித் தாள்கள், வார இதழ்கள் முதலியவற்றில் வருகின்ற செய்திகளையெல்லாம் சேகரித்து வைத்திருந்தோம். மதுரையிலிருந்து சென்ற ஆண்டு கயிலை சென்றுவந்த அன்பரின் உறவினர் தபோவனத்துடன் நெருங்கிய தொடர்புள்ளவர். அவர் யாத்திரை சென்றுவந்த அன்பரையே அழைத்து வந்து யாத்திரை பற்றிய விஷயங்களை விபரமாகச் சொல்லவும் அவர் எழுதி வைத்திருந்த சில குறிப்புக்களைக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தார். இப்படி

யெல்லாம் விபரங்கள் சேகரித்து வைத்துக் கொண்டு இந்திய அரசின் கயிலேமலை யாத்திரை பற்றிய விளம்பரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

1982ஆம்ஆண்டு மார்ச்மாதம் முதல்வாரத்தில் நாங்களாகவே இந்திய அரசின் வெளிவிவகாரக் காரியதரிசிக்குக் கயிலேமலை யாத்திரைசெல்வதற்குத் தேவையான விபரங்கள் வேண்டுமென்றுகடிதம் எழுதினேம்.அதற்கு இந்த ஆண்டு கயிலேமலையாத்திரைபற்றிய ஏற்பாடுகள்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை; முடிவு செய்தபின் தெரிவிக்கின்ரேம்; செய்தித்தாள்களிலும் வெளிவரும் என்று பதில் வந்தது. இதற்கிடையில் மத்திய அரசுக் காரியதரிசியாய் இருந்து ஓய்வு பெற்றுள்ள நண்பர் ஒருவருக்குக் கயிலே மலையாத்திரை செல்ல எங்களுக்கு இடம் கிடைக்க ஏற்பாடு செய்து தரும்படி கடிதம் எழுதியிருந்தோம். மே மாதம் முதல்வாரத்தில் டெல்லி வெளிவிவகாரக் காரியதரிசியிடமிருந்து கடிதம் வந்தது. அதில் இந்தஆண்டு இருநூறு பேர் எட்டுக் குழுக்களாகக் குழு ஒன்றுக்கு இருபத்தைந்து பேர்வீதம் அனுப்புவதாகத் திட்டம் உள்ளது என்றும், விருப்பமுள்ளோர் விண்ணப்பம் அனுப்பலாம் என்றும், அவ்விண்ணப்பம் பெயர், வயது, முழுவிலாசம், இண்டர்நேஷனல் பாஸ்போர்ட்நம்பர் முதலியவைகளுடன் மே மாதம் 25ஆம் தேதிக்குள் டெல்லிக்கு வந்து சேரவேண்டும் என்றும் இருந்தது. இதே விவரம் செய்தித் தாள்களிலும் வந்தது. அதன்படி நாங்கள் ஆறு பேர் விண்ணப்பம் செய்தோம். பத்துநாள் பொறுத்து ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வந்திருப்பதால் சீட்டுக் குலுக்கி நபர்களேப் பொறுக்கி எடுக்க வேண்டியிருப்பதால் நாலேந்து பேர்களேச் சேர்ந்து அனுமதிக்க வாய்ப்பில்லே என்று பதில் வந்தது. இறைவன் சித்தப்படி நடக்கட்டும் என்று எண்ணிக்கொண்டு டெல்லியில் உள்ள அன்பர் மூலமும் முயற்சி செய்தோம். யாருக்கு அனுமதி கிடைத்தாலும் போய் வருவதென நாங்கள் முடிவு செய்திருந்தோம். மே மாதம் 21ஆம் தேதி "நீங்கள் கைலாசம், மானசரோவரம் யாத்திரைக்கு இரண்டாவது குழுவில் செல்வதற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளீர்கள். அதற்கு ஒத்துக்கொண்டால் ஜூன் மாதம் 14ஆம் தேதி புதுடெல்லியில் உள்ள வெளிவிவகார மந்திரி அலுவலகத்திற்குக் காலே 9-30 மணிக்கு வந்துசேரவேண்டும். இதற்கு ஒத்துக்கொண்டு வருவதாளுல் மே மாதம் 30ஆம் தேதிக்குள் தந்திமூலம் தெரிவிக்கவேண்டும்" என்று எனக்குத் தந்தி கொடுத்திருந்தார்கள். அதற்கு மே மாதம் 23ம்தேதி சம்மதம் தெரிவித்துப்பதில் தந்தி கொடுத்தோம். நான்கு நாட்களுக்குப் பிறகு பத்துப் பக்கங்கள் கொண்ட பெரிய கடிதம் ஒன்று வந்தது. அதில் டெல்லியிலிருந்து லிப்புக்கணவாய் என்னும் நம் இந்திய எல்லே வரையில் உள்ள தூரம், வழியில் தங்குகின்ற ஊரின் பெயர்கள், ஒவ்வொரு நாளும் நடக்கவேண்டியதூரம்,மலேப்பாதையில் உள்ள ஏற்றங்கள், இறக்கங்கள், கடினமான இடங்கள் முதலியன விளக்கப்பட்டிருந்தன. மேலும் யாத்திரைக்கு எடுத்துக் கொண்டுபோக வேண்டிய உடைகள் படுக்கைக்கு வேண்டியவைகள், உணவு வகைகள், மருந்துகள், செலவினங்கள் ஆகிய எல்லா விபரங்களேயும் தெரிவித்திருந்தார்கள். கைலாய யாத்திரை என்பது மற்ற யாத்திரைகள்போன்று சுலபமானதன்று; பதினெருயிரம் முதல் பதினெட்டாயிரத்து ஐந்நூறு அடிவரை பனிமலேகளில் நடக்க வேண்டியிருக்கிறது. ஆகவே அதற்கு வேண்டிய உடல் பலமும், மன உறுதியும் உள்ளவர்கள் தாம்போய்வரமுடியும். இவற்றையெல்லாம் நன்கு யோசித்து முடிவு செய்யுங்கள் என்று எழுதியிருந்தார்கள்.இந்தக் கைலாய,மானச சரோவர யாத்திரையில் உள்ள கஷ்டங்கள், ஆபத்துக்களேயெல்லாம் நன்ருகத் தெரிந்து முழுமனதோடு நான் மேற்கொண்டேன். இந்தயாத்திரையில் எந்தவிதமான பொருள் சேதம், அங்கவீனம் அல்லது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டாலும் அரசாங்கத்திடம் எவ்வித நஷ்டஈடும் கேட்கமாட்டேன் என்று ஓர் (Indemnity Bond) இழப்பீடு பத்திரம் பத்து ரூபாய் ஸ்டாம்பு பேப்பரில் எழுதி (முன்சிப்) நியாயாதிபதி முன்னிலேயில் யாத்

திரைசெல்பவர் கையெழுத்துப்போட்டு அவருடையகையெழுத்தும் ரப்பர் ஸ்டாம்பு முத்திரையும் வாங்கிக்கொண்டு வரவேண்டும் என்றும் கடிதத்தில் எழுதியிருந்தார்கள். அதன்படி எல்லா ஏற்பாடுகளும் செய்து கொண்டிருந்தோம். இதற்குள் டெல்லியில் இருந்து வந்த தந்தியில் கைலாயம் செல்லும் வழி மழையாலும், பனியாலும் சில இடங்களில் பூமி சரிந்துபாதை சரியில்லாதிருப்பதாலும் இரண்டாவது குழு ஜூன் மாதம் 23ஆம் தேதிதான் டெல்லியிலிருந்து புறப்பட வேண்டியுள்ளது. ஆதலால் ஜூன் மாதம் 14ஆம் தேதி வருவதற்குப்பதிலாக 19ஆம் தேதி வந்தால் போதும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். யாத்திரைக்குக் கேன்வாஸ் ஷூஸ் இன்றியமையாதது. முற்கூட்டியே காலில் அதை அணிந்து நடந்துபழகிக்கொள்ளவேண்டும். புதிதாகப் போட்டு நடந்தால் சில சமயம் அது அழுத்துகின்ற இடத்தில் புண் ஆகி நடக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுவிடும். Shoe இல்லாமல் அந்தப் பாதையில் ஒருநாள்கூட நடக்க முடியாது. இது முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம்.

யாத்திரைக்குத் தயார் செய்யவேண்டியவைகளாவன: இண்டர் நேஷனல் பாஸ் போர்ட், Indemnity Bond, டெல்லியில் விசா வாங்குவதற்கு முன்பு பாஸ்போர்ட் அளவில் போட்டோக்கள், ரூபாய் சுமார் ஒன்பது ஆயிரம், ஆறு செட் உடைகள், கம்பளச் சட்டைகள், நான்கு கையுறைகள், கம்பளத்தில் இரண்டுஜோடி காலுறைகள், மூன்று ஜோடி கால்சட்டை, மூன்று நல்ல பூட்ஸ், ஒருஜோடி பாதரக்ஷை, ஒருஜோடி தலைக்குக் கம்பளக் குல்லாய், ஒரு கம்பள சால்வை, ஒரு தூங்கும் பை (Sleeping bag), ஒரு ஜமுக்காளம், தலையணை, போர்வை, டார்ச்லைட், மெழுகு வர்த்தி, நெருப்புப்பெட்டி, சமைக்க இரண்டு அலுமினியப் பாத்திரங்கள், அதற்கான மூடிகள், இரண்டு லிட்டர் அரிசி, பருப்பு, சாம்பார்பொடி, ரசப்பொடி, ஊறுகாய் இரண்டுவகைகள், டேபிள் சால்ட், அவல், ரவை, உப்பு பிஸ்கட், முந்திரிப்பருப்பு, திராக்ஷை, பாதாம் பருப்பு முதலிய உணவுப் பொருள்கள், தலைவலி, சளி, காய்ச்சல், வயிற்றுவலி, வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல் முதலியவைகளுக்கு வேண்டிய மருந்து வகைகள், நுனியில் கூர்மையான இரும்புப் பூண் போட்ட உறுதியான கைத்தடி—இவைகளில் கம்பள ஆடைகளை டெல்லியில் வாங்கிக் கொள்ளலாம்; மற்றவைகளை உடன்கொண்டு போவது நல்லது. சாமான்கள், படுக்கைகள் கொண்டுபோக Hold all அல்லது கெட்டியான இரும்புப் பெட்டி இருப்பது நல்லது. தினந்தோறும் குதிரைமீது சாமான்களை ஏற்றுவதிலும், இறக்குவதிலும் பிளாஸ்டிக் பை போன்றவை கிழிந்து உள்ளே வைத்துள்ள சாமான்களும் உடைந்துவிடுகின்றன. வழியில் மழையில் நனைந்துபோகாதிருக்க Water Proof துணியினால் மூடிக் கட்டியிருக்கவும் வேண்டும்.

தீர்த்த யாத்திரையைப் பக்தி விசுவாசத்துடன் செய்தால் அது நல்ல பயனுடையதாக, வாழ்க்கையில் புதுத் திருப்பத்தைத் தருவதாக அமையும். கயிலைமலை செல்லும் யாத்திரை அமைப்பில் டெல்லி சென்ற பிறகுதான் நம்மோடு வரும் யாத்திரிகர்கள் யார் என்று தெரிந்துகொள்ள முடிகின்றது. பல மாகாணத்தைச் சேர்ந்தவர்கள், பல மொழி பேசுகின்றவர்கள், பல விதமான பழக்க வழக்கமுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து இந்த யாத்திரையில் போகவேண்டியிருக்கிறது.

ஜூன் மாதம் 11ஆம் தேதியன்று சென்னை சென்று அங்கு உணவுப் பொருள்கள், உலர்ந்த பழங்கள், உடைகளில் ஒன்றிரண்டு வாங்கிக்கொண்டு அன்பர்கள் சிலபேர் அளித்த உணவுப் பொருள்களுடன் ஜூன் மாதம் 13ஆம் தேதி மாலை பக்தர்கள் கூடி வழியனுப்ப G.T. துரிதவண்டியில் சென்னையிலிருந்து புறப்பட்டு 15ஆம் தேதி காலை புதுடெல்லி போய்ச் சேர்ந்தேன். டெல்லியில் உள்ள ராமகிருஷ்ண மிஷன் ஆச்ரமத்தில் தங்கினேன். அடுத்த நாள் காலை பத்து மணிக்கு வெளி விவகார மந்திரி அலுவலகம் சென்று கைலாய யாத்திரை சம்பந்தப்பட்ட காரியதரிசியைப் பார்த்துத் தமிழ் நாட்டிலிருந்து இரண்டாவது கைலாய

யாத்திரை செல்ல வந்துள்ளேன் என்று தெரிவித்தேன். இன்னும் யாராவது தமிழ் நாட்டிலிருந்து வருகிறார்களா என்பது தெரியவில்லை. ஒருவராவது இருந்தால்தான் வசதியாக இருக்கும் என்று சொன்னேன். உடனே அவர் லிஸ்டைக் கொண்டு வரச் சொல்லி அதைப் பார்த்து ஈரோட்டிலிருந்து செங்கோட்டையன் என்பவரும், சென்னையிலிருந்து ஸ்ரீதர் என்பவரும் வருகிறார்கள் என்று கூறினார். ஓரளவு நிம்மதியோடு திரும்பி வந்து யாத்திரைக்கு வேண்டிய பாக்கிச் சாமான்களுள் டெல்லியில் கிடைப்பதை வாங்கிச் சேகரித்துக் கொண்டிருந்தேன். மறுபடியும் 19ஆம் தேதி காலை யாத்திரை சம்பந்தப்பட்ட காரியதரிசியின் அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கு இரண்டாவது குழுவில் யாத்திரைக்கு அனுமதிக்கப்பட்ட இருபத்தைந்து பேர் வந்திருந்தனர். எல்லாரையும் ஒரு மண்டபத்தில் அமரவைத்துக் காரியதரிசியின் உதவியாளர் ஒருவர் கைலாய யாத்திரையின் சிறப்பு, அதற்குச் செய்து வைத்துள்ள ஏற்பாடு முதலியவற்றைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு யாத்திரிகர்கள் ஒவ்வொருவரையும் தங்கள் பெயர், ஊர், யாத்திரையின் நோக்கம் இவைகளைச் சொல்லி அறிமுகம் செய்து கொள்ளும்படி சொன்னார். அதன்படி ஒவ்வொருவரும் வரிசைப்படி எழுந்து நின்று தங்களை அறிமுகப்படுத்தினர். அதில் இருபது பேர் தங்கள் யாத்திரையின் நோக்கம் கைலாசபதியைத் தரிசிப்பதாகும் என்றனர். மற்ற ஐவரில் ஒருவர் தன் யாத்திரையின் நோக்கம் மலையேறிப் பார்ப்பதாகும் என்றார். மற்றொருவர் தமக்கு இயற்கைக் காட்சிகளைப் போட்டோ எடுப்பது நோக்கமாகும் என்றார். இன்னொருவர் தமக்கு எந்தவிதக் குறிக்கோளும் இல்லை என்றார். அதன் பிறகு சென்ற ஆண்டு முதற்குழுவில் சென்று வந்த பஞ்சாபைச் சேர்ந்த அம்மையார் ஒருவர் கைலாய யாத்திரையில் தம் அனுபவங்களைப் பற்றி முக்கால் மணிநேரம் எங்களுக்கு உரையாற்றினார். அதில் அவர் யாத்திரை கஷ்டமானதுதான், இருந்தாலும் காணக் கிடைக்காத காட்சிகள் மனதைக் கவர்கின்றன. தைரியமாகச் சென்று வாருங்கள் என்று சொல்லி முடித்தார். அதன்பின் வைத்தியப் பரிசோதனைக்கு ராணுவ வைத்தியசாலைக்குச் செல்லக் காலை ஒன்பது மணிக்கு எல்லாரும் அதே இடத்தில் வந்து சேரவேண்டும் என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள். இருபதாம் தேதி காலை ஒன்பது மணிக்கு அங்குப் போய்ச் சேர்ந்தோம். பத்து மணிக்கு ஒரு பஸ்ஸில் எங்களை ஒரு ராணுவ வைத்தியசாலைக்கு அனுப்பி எல்லாரையும் நன்கு பரிசோதனை செய்தார்கள். அதில் முக்கியமாக இருதயநோய், ரத்த அழுத்தம், சர்க்கரை நோய் இருக்கின்றதா என்று ஊன்றிக் கவனிக்கின்றனர். பிற்பகல் இரண்டு மணிக்குச் சோதனையை முடித்து அனுப்பினார்கள். 21ஆம் தேதி காரியதரிசி அலுவலகத்தில் பத்து மணிக்கு முடிவு தெரிவிப்பதாகச் சொல்லி அனுப்பினார்கள். 21ஆம் தேதி காலை காரியதரிசியின் அலுவலகம் சென்று வைத்தியப் பரிசோதனையின் முடிவிற்காக எல்லாரும் ஆவலோடு காத்திருந்தோம். காலை 11 மணிக்கு முடிவு தெரிவித்தனர். அதில் மூன்று பேர் தகுதியில்லையென்றும் அவர்கள் திரும்பி ஊர் போய்ச்சேருவதைத் தவிர வேறு வழி இல்லை என்றும் சொல்லிவிட்டார்கள். அதில் ஒருவர் ஆந்திர மாகாணத்தவர். தாம் கேதார்நாத், பத்ரிநாத், அமர்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி எல்லாம் போய் வந்துள்ளதாகவும் கைலாயம் காண வேண்டும் என்று வெகு காலமாக ஆசைப்படுவதாகவும் கைலாயம் சென்று அங்குத் தமக்குக் காலகதி ஏற்பட்டாலும் அதுபற்றி மகிழ்ச்சியடைவதாகவும் மிகுந்த வருத்தத்துடன் சொன்னார். மற்றும் இரண்டு பேர்கள் அவர்களாகவே வரவில்லை. இந்த ஐந்து பேர்களுக்குப் பதிலாக அங்கு வந்து காத்திருந்த மூவரும், டெல்லியில் உள்ளவர்கள் மூவருமாக ஆறு பேர் புதிதாக அன்று சேர்ந்தனர். அன்றே பாஸ்போர்ட்டுகள், மூன்று போட்டோக்கள், விசா வாங்குவதற்கு அறுபது ரூபாய் ஆகியவற்றை இருபத்தாறு பேரிடமும் வாங்கிக் கொண்டார்கள். அடுத்த நாள் 11 மணிக்கு வந்து விசா, பாஸ் போர்ட் எல்லாம் வாங்

கிக்கொண்டு போய் டாலர் மாற்றிக் கொள்ளவேண்டும் என்றும் அதற்கு முன் சன்பாத் ரோட்டில் உள்ள சந்திரலோக் என்னும் கட்டடத்திலுள்ள உத்திரப்பிர தேச மாகாணச் சுற்றுலா அலுவலகத்தில் ஆளுக்கு ரூ. 2500-00 கட்டி ரசீது வாங்கிக் கொண்டு வரவேண்டும் என்றும் சொல்லி அனுப்பினுர்கள். மறுநாள் சுற்றுலா அலுவலகம்சென்று தொகைகட்டி ரசீதுபெற்றுக் கொண்டோம். அங்குக் கைலாய யாத்திரையில் ஒவ்வொரு குழுவும் புறப்படும்தேதி, இந்தியப் பகுதியில் தங்கும் இடங்கள், அவ்விடங்களுக்கிடையேயுள்ள தூரம், இடங்களின் உயரம், திரும்பி டெல்லி வந்து சேரும் தேதி ஆகிய எல்லாவற்றையும் விளக்கமாக அச்சடித்துக்கொடுத்தனர்.அதைப் பெற்றுக் கொண்டு காரியதரிசி அலுவலகம் சென்று விசா, பாஸ்போர்ட்டுக்காகக் காத்திருந்தோம். பகல்12 மணிக்குத்தான் அவைகளைக் கொடுத்தார்கள். 23ம் தேதி காலை 7 மணிக்குச் சாமான்களுடன் யாத்திரிகர்கள் எல்லாரும் உ. பி. சுற்றுலா அலுவலகம்வந்து சேர வேண்டும் என்று சொல்லியனுப்பினுர்கள். பிற்பகல்இரண்டு மணிக்குள் பாங்குசென்று டாலர் வாங்கியாகவேண்டும். எல்லாரும் அவசரமாக ஓடினேம். முதலில் பாங்க் ஆப் அமெரிக்காவிற்குச் சென்றேம். அங்குநிறையப்பேர் டாலர் மாற்ற வந்ததால் அரை மணிநேரத்திற்குப் பிறகு டாலர் தீர்ந்துவிட்டது என்று சொல்லிவிட்டார்கள். பிறகு இரண்டு மூன்று பாங்குகளுக்குச் சென்றேம். டாலர் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். பிறகு ஈரோடு அன்பரும் நானும் பாங்க் ஆப் இந்தியாவிற்குச் சென்றேம். அங்கு டாலர் மாற்றித்தருவதில் உள்ள ஆபீசர் கயிலை யாத்திரைசெல்கிறேம் என்று சொன்னதும் மிக அன்போடு வரவேற்று எங்களை நாற்காலியில் உட்காரவைத்து விட்டு அவரே எழுத வேண்டியவற்றை எல்லாம் எழுதி அமெரிக்கன் பாங்கைவிட டாலர் ஒன்றுக்கு முப்பதுபைசா குறைத்துக்கொடுத்து உங்களுக்கு என்னல் முடிந்த இந்தச் சேவை செய்யக் கிடைத்தது என் பாக்கியம் என்றுசொல்லித்தேநீர்கொடுத்து அனுப்பிவைத்தார். டெல்லியில் கென்னுட் சர்க்கிள் என்பது பெரிய பாங்குகள், கடைகள் உள்ள இடம். அங்கு எல்லாச்சாமான்களும் விலை அதிகம். வெளிநாட்டுக்காரர்களும் பெரியபணக்காரர்களும்தான் அங்குச் சாமான்கள் வாங்கலாம். நேருபஜார், சாந்திசௌக் போன்ற இடங்களில் கிட்டத்தட்ட பாதி விலைக்கு அதேசாமான்கள் கிடைக்கின்றன. இப்படி டெல்லியில் யாத்திரை சம்பந்தமான வேலைகளை எல்லாம் முடிக்க நாலைந்து நாட்கள் வேண்டியிருந்தன.

ஜூன் மாதம் 23ம் தேதி யாத்திரை வாசிகள், வழியனுப்ப வந்த நண்பர்கள், உறவினர்கள் வெளி விவகாரமந்திரி, அலுவலகத்தில் இதன் சம்பந்தப்பட்ட காரியதரிசி, அவர் உதவியாளர்கள் எல்லாரும் காலை 7 மணிக்கு சன்பாத் ரோட்டில் உள்ள சந்திரகோசி என்னும் கட்டடத்தின் முன்பு கூடினேம். 7-30 மணிக்கு நல்ல சொகுசு பஸ்ஸில் ஏறினேம். எல்லாரும் ஆசி கூறி வழியனுப்பி வைத்தனர். பத்தொன்பது அன்பர்கள், தாய்மார்கள் ஏழு பேர், இந்திய அரசின் யாத்திரை சம்பந்தப்பட்ட காரியதரிசியின் உதவியாளர் ஒருவர், சுற்றுலா அலுவலகத்தின் அலுவலர்கள் இருவர் ஆக 29 பேர் பஸ்ஸில் சென்றேம். சுமார் 100 கி. மீ. சென்றதும் வழியில் ஒரு சிற்றுண்டிச்சாலையில் காலைச் சிற்றுண்டி வாங்கிக் கொடுத்தனர். அதன் பிறகு 150 கி.மீ. தூரம் சென்று ருத்ரப்பூர் என்னும் ஊரில் பகல் ஒரு மணிக்கு மதிய உணவு கொடுத்தனர். டெல்லியிலிருந்து புறப்பட்டதிலிருந்து கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் நெல் வயல்களும், கரும்புப் பயிர்களும் காட்சியளித்தன. நீர்வளம் நிறைந்த சமவெளி எங்கும் மண் தரை தான். கல்லோ, மலையோ தென்படவில்லை. சாலை போடுவதற்குங்கூட ஆற்றிலுள்ள உருண்டைக் கற்களைக் கொண்டு வந்துதான் உடைத்துப் போடுகிறுர்கள். கல் வேண்டுமென்றால் வெகுதூரம் சென்றுதான் லாரிகளில் கொண்டு வருகிறுர்கள். ஏராளமான பூமிகள் இருந்தும் விவசாயம்

சிறந்த முறையில் நடைபெறவில்லை. ருத்ரப்பூரிலிருந்து சுமார் 100 கி.மீ. தூரம் சென்று டனக்பூர் என்னும் ஊருக்கு மாலை ஐந்து மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். இந்த ஊர் உத்திரப்பிரதேசத்தில் இமயமலை அடிவாரத்தில் இருக்கிறது. ரயில் பாதை இந்த ஊருடன் முடிவடைகிறது. இங்கிருந்து ஐந்து கி.மீ. சென்றதும் பாதை மலைமேல் ஏறுகிறது. இங்கிருந்து ஊருக்குப் பக்கத்தில் ஒரு நதி மலை அடிவாரத்தில் ஓடுகிறது. அதிலுள்ள உருண்டைக் கற்களைச்சேகரித்து ஆங்காங்குப் பெரிய குவியல்களாகக் குவித்து வைத்துள்ளார்கள். அவைகளை ரயில்வே வாகனங்களிலும் லாரிகளிலும் ஏற்றி வெகு தூரத்திற்கு அனுப்புகின்றனர். இங்கு நிறைய மரங்கள் அடர்ந்த காடுகள் மலை அடிவாரத்திலும் மலைமேலும் இருக்கின்றன. அவைகளிலிருந்தும் நிறைய மரங்கள் வெட்டிக்கொண்டு வந்து இங்கு வாகனங்களில் ஏற்றி அனுப்புகின்றனர். இந்த ஊரில் வாழைப் பழங்கள், மாம்பழங்கள் நிறையக் கிடைக்கின்றன. இங்குக் காபி, தேநீர் போன்ற பானங்கள் அருந்தி விட்டுக் கொஞ்சம் பழங்களும் வாங்கிக்கொண்டு புறப்பட்டோம். டனக்பூரிலேயே நாங்கள் டெல்லியில் இருந்து வந்த பெரிய பஸ்ஸை மாற்றி மலைப்பாதையில் போவதற்கு ஏற்ற சிறிய பஸ்ஸில் ஏறினோம். டெல்லியிலிருந்து முந்நூற்றைம்பது கிலோ மீட்டர் தூரம் சமவெளியையும் வயலையும் கண்ணுக்கெட்டும் வரை கண்டு வந்த எங்களுக்கு இப்பொழுது மரங்கள் அடர்ந்த சோலைகளும் அடுக்கடுக்கான மலைகளும் தென்பட்டன. டனக்பூரை விட்டுப் பஸ் புறப்பட்டதும் சாலையின் இருமருங்கிலும் தேக்கு மரங்களும் இன்னும் பலவிதமான மரங்களும் அடர்ந்து வானோங்கி வளர்ந்து இருந்தன. நாலைந்து கிலோமீட்டர் தூரம் சென்றதும் பெரிய ஓடை வந்தது. அதைக் கடந்ததும் மலைப்பாதை ஆரம்பிக்கின்றது. பாதை குறுகியும் வளைந்தும் மேலேறிச் செல்கிறது. இருமருங்கிலும் வாழை, முட்டைக்கோஸ், காரட் போன்றவைகளைப் பயிர் செய்துள்ளார்கள். மலைப்பாதையில் சுமார் நூறு கி.மீ. தூரம் சென்றதும் சம்பாவத் என்னும் ஊர் வருகிறது. இது முந்நூறு அடி உயரத்தில் உள்ளது. இங்குச் சுமார் நூறு வீடுகள்இருக்கும். சிறிய கடைத்தெரு இருக்கிறது. இங்கு வசதியான சுற்றுலா விடுதி உள்ளது. அதில் முதல் நாள் இரவு தங்கினோம். கட்டில், மெத்தை, கழிவறைகள், மின்விளக்குகள் எல்லாம் வசதியாய் இருக்கின்றன. ஆனால் தண்ணீர்க்கஷ்டம் அதிகம். இங்குப் பழமையான ஒரு சிவாலயம் உள்ளது. டர்பன்டைன் எண்ணெய் எடுக்கும் ஒருதொழிற்சாலையும் இங்குள்ளது. இரவு அங்குத்தங்கி காலைசிற்றுண்டி அருந்திவிட்டு எட்டுமணிக்குப் புறப்பட்டு லோகோகாட், ராமதீர்த்தம் என்னும் ஊர்களைக் கடந்து பைதரோ காட் என்னும் ஊருக்குப் பகல் ஒரு மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். இது ஜில்லாத் தலைநகரம். லிப்பு தடாகக் கணவாய் இந்த ஜில்லாவுக்கு எல்லையாக உள்ளது. மாவட்டத் தலைமை அலுவலகமும் கல்லூரியும் இங்கு இருக்கின்றன. மலைவாசிகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்கும் விற்பதற்கும் இது முக்கியமான இடம். இந்த ஊரிலிருந்து தினசரி இரண்டு எக்ஸ்பிரஸ் பஸ்கள் டெல்லி போய் வருகின்றன. சுற்றுப்புறங்களில் உள்ள ஊர்களுக்கும் பஸ் போய் வருகின்றது. இங்கு முப்பது படுக்கைகள் கொண்ட சுற்றுலா மாளிகை உள்ளது. இங்கு இரண்டாவது நாள் பகல் உணவுகொடுத்தார்கள். இந்த ஊர் கடல் மட்டத்திலிருந்து சுமார் 4000அடிஉயரத்தில் உள்ளது. (தொடரும்)

செய்திகள்

நிகழ்பவை :

23—9—82 வியாழக்கிழமையன்று மாலை 6 மணிக்கு சேலம் குகை-திருச்சி ரோட்டிலுள்ள ஸ்ரீ ராமலிங்க செளடேஸ்வரி அம்மன் தர்ம மடாலய சமரச சன்மார்க்க சபையின் கட்டடத்தில் நிகழும் நவராத்திரி விழாவில் "அம்பிகையின் மகிமை" என்னும் பொருள் பற்றி ஸ்ரீமத் நித்தியானந்த சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்

இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை 14-ம் பதிப்பு		
	பிரசார விலை ரூ.	18-00
மஹாபாரதம்	பிரசார விலை ரூ.	7-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	5-50
தினசரி தியானம்	,, ...	4-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
ஸ்ரீ விவேகானந்தர் ஜீவிதம்	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம் டி	...	3-00
சின்மயானந்த குரு டி	...	3-00
ஆனந்தமானபரம் டி	...	3-00
சுகவாரி டி	...	3-00
மௌனகுரு வணக்கம் டி	...	3-00
எங்குநிறைகின்றபொருள் டி	...	2-50
பரசிவ வணக்கம் டி	...	1-00
கண்ணன் என்னும் கடவுள்	...	2-50
ஹரிச்சந்திரன் (நாடகம்)	...	2-00
விரதவீரர் பீஷ்மர் டி	...	1-50
விபீஷணன் சரணாகதி டி	...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
காயத்ரீ	...	1-50
நன்மக்களைப் பெறுதல்	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	...	1-00
தவப்புதல்வர்கள் ,,	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,,	...	1-00
தானவீரன் கர்ணன் ,,	...	1-00
பார்வதி, லக்ஷ்மி, சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
மார்க்கண்டேயன் (நாடகம்)	...	1-00
பிரஹ்லாதன் (நாடகம்)	...	1-00

தபோபலன் (நாடகம்)	ரூ.	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
நோய்க்கு இடம் கொடேல்	...	1-00
*ஆத்ம சக்தி	...	1-00
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொரூபம்	...	0-70
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*கணபதி	...	0-60
சைவன் யார்?	...	0-50
*முருகக் கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்விக மகிமைகள்	...	0-50
கர்மகாண்டம்எது? ஞானகாண்டம்எது?		0-50
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
விவேகானந்தரின் வீர கர்ஜனை	...	0-30
கந்தர் அநுபூதி	...	0-25
The Bhagavad Gita (11th Imp:)	...	24.00
Tirukkural (with plastic cover)	...	8-00
The Indian National Education	...	8-00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	6-00
Sri Krishna-The Manifest Divinity ,,	...	6-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bhagavad Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
*Key to Higher Life	...	1-25
*The Student	...	1-25
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00
*The Nursery School	...	1-00
*The School	...	1-00
*The Teacher	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக ஸ்ரீமத் பகவத்கீதைக்கு ரூ. 5-00ம், மஞ்ஜரிக்கு ரூ. 1-80ம் மஹாபாரதத்திற்கு ரூ. 1-80ம் தினசரி தியானத்திற்கு ரு 1-40ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 3-00 முதல் ரூ. 5-00 வரையும் சேர்த்து அனுப்புங்கள். * இப்புத்தகங்கள் ஏனைய பெரியபுத்தகங்களில் அடங்கியுள்ளன.

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் அந்தர்யோகம்

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் 18—10—82 முதல் 20—10—82 முடிய மூன்று நாட்கள் சக்தி பூஜை அந்தர்யோகம் ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் மட்டும் அக்டோபர் மாதம் 17 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவே நேரில் வந்து நாள் ஒன்றுக்கு ரூ. 7-00 விதம் ரூ. 21-00 மட்டும் உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். அமைதியைக் காக்க 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும், கைக்குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயிலெழுதல்		4-30
நாம ஜபம்	5-00	5-30
ஸ்நானம்	6-00	7-30
ஆரதி	7-30	
சிற்றுண்டி	7-45	
பஜனை	8-30	9-30
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	10-00	11-00
அர்ச்சனை	11-00	12-00
உணவு, ஓய்வு	12-30	3-00

மாலை

	மணிமுதல்	மணிவரை
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	3-00	3-45
நாம ஜபம்	4-00	4-30
சிற்றுண்டி	4-30	
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ஆரதி, பிரார்த்தனை	6-00	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-45	
ஸத்ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு:— 1. அக்டோபர் 18, 19 ஆகிய இரண்டு தினங்களிலும் ஸ்ரீ ஸாரதா கல்லூரி பிரார்த்தனைக் கொட்டகையிலும், அக்டோபர் 20ஆம்தேதி ஸ்ரீஸாரதா வித்யாலயத்திலும் காலை 10-00 மணிமுதல் 11 மணிவரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களால் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம விளக்கம் நடைபெறும். இவைகளில் அன்பர்களும் கலந்துகொள்ளலாம். மேற்படி மூன்று தினங்களிலும் மாலை 3-00 முதல் 3-45 மணி வரை ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை யதீஸ்வரிகளால் நடைபெறும். இவைகளில் தாய்மார்கள் மட்டும் கலந்துகொள்வார்கள்.

2. ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் அக்டோபர் 20ஆம் தேதி மாலை அர்ச்சனை 4-30 மணி முதல் 5-30 மணிவரை நடைபெறும். அன்று மாலை 6-00 மணிக்கு ஸ்ரீஸாரதா கல்லூரியில் ஸ்ரீஸாரதா ஸ்தாபனங்களின் மாணவிகளால் கலாநிகழ்ச்சிகள் நடைபெறும். அன்பர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.